பின்பற்ற வேண்டும்
பக்கம் 15

இஸ்ரேல் குண்டுத் தாக்குதல்
பக்கம் 07

உதயன்

24 பக்கங்கள்

யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 228 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 28, சனி 12.07.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

32°C

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



ஸ்டாலினுக்கு புதிய பதவி 8



எழுவை தீவு மாணவி சாதனை 17



இறுதிப் போட்டியின் மீதே எமது கவனம் 18



ஆசிரியர்களுக்கான நடமாடும் மருத்துவ முகாம் 13

# தமிழ் மக்களின் தீர்ப்பை அவமதித்தார் ஜனாதிபதி

## ஆளுநர் நியமனம் தொடர்பில் கூட்டமைப்பு காட்டம்

கொழும்பு, ஜூலை 12

வடக்கு ஆளுநர் சந்திரசிறிக்கு ஐந்து ஆண்டுகள் பதவி நீடிப்பு வழங்கியதன் மூலம் வடக்கு மாகாண சபைத் தேர்தலின் மூலம், தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவமரியாதை செய்துள்ளார். வடக்கில் இராணுவ ஆட்சி வேண்டாம். ஜனநாயகத்தையே விரும்புகின்றோம் என வடக்கு மக்கள் தமது ஏகோபித்த ஆதரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய போதும், வடக்கு ஆளுநர் நியமனத்தில் அவற்றையெல்லாம் ஜனாதிபதி புறந்தள்ளிவிட்டார். இதன்மூலம் அரசின் கபடத்தனம் வெளிப்பட்டு விட்டது என்று காட்டமாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இந்த அரசு வடக்கில் தொடர்ந்தும் இராணுவ ஆட்சியையே நிலைநிறுத்துவதற்கு முற்படுகின்றது என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடும் விசனம் வெளியிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"கடந்த ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வர

22 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கு ஆளுநராக மீண்டும் சந்திரசிறி



கொழும்பு, ஜூலை 12

சர்ச்சைக்குரிய வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் பதவிக்காலம் இன்றுடன் முடிவடையவுள்ள நிலையில், அவரையே மீண்டும் ஆளுநராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நியமித்துள்ளார். ஆளுநர் ஒருவரின் பதவிக் காலம் 5 ஆண்டுகள் என்றபோதும், ஜி.ஏ.சந்திரசிறிக்கு தற்போது கால எல்லை நிர்ணயம் இன்றி இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இது ஆறு மாதங்களாகவோ, ஒரு வருடமாகவோ அல்லது 5 ஆண்டுகளாகவோ கூட இருக்கலாம் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநராக ஜி.ஏ. சந்திரசிறி நியமிக்கப்பட்டிருந்தார். இவரது பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்தது.

22 ஆம் பக்கம் பார்க்க

## சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய முடியாது

### டக்ளஸுக்கு ஆணைக்குழு பதிலடி

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஆணைக்குழு முன்பாக சாட்சியமளித்த எவரையும், அவர்கள் வழங்கிய சாட்சியத்தின் அடிப்படையில்விசாரணைக்கோ, குறுக்கு விசாரணைக்கோ உட்படுத்த முடியாது என்று தெரிவித்துள்ளார் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர்.

ஆணைக்குழு முன்பாக சாட்சியமளித்த ஒருவரிடம் தனது சட்டத்தரணி ஊடாக குறுக்கு விசாரணை நடத்துவதற்கு ஈ.பி.டி.பியின் செயலாளரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தார். மேற்படி கோரிக்கையை நிராகரித்துள்ள ஆணைக்குழு, அவருக்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது என்று மேற்படி சிரேஷ்ட உறுப்பினர் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்றகாணாமற்போனோர் தொடர்பான விசாரணைக் குழுவின் விசாரணையின் போது எமது கட்சியைக் குறிப்பிட்டு பெண்ணொருவர் கூறிய கருத்துக்கள் எமக்கு வேதனையளிக்கின்றது.

2006 ஆம் ஆண்டு அரியாலை பிரதேசத்தில் அந்தப் பெண்மணி வசித்து வந்ததாகவும், அப்போது வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதோர் தனது கணவரை கடத்திச் சென்றதாகவும் தெரி

22 ஆம் பக்கம் பார்க்க



வரலாற்றுப் பிரசித்திபெற்ற நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று இனிதே நடைபெற்றது. ஆயிரக்கணக்கில் கூடியிருந்த பக்தர்களுக்கு அம்பாள் தேரேறி வலம் வந்து அருள்பாலித்தார். (ற-7)

# நீதிமன்றின் உத்தரவை மீறி நடக்கிறது காணி அபகரிப்பு

## மாவை சேனாதிராசா கொதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

உயர் நீதிமன்றத்தின் இடைக்கால தீர்ப்பையும் உதாசீனம் செய்தே, மக்களின் காணிகளை கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகள் இந்த அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்பட வேண்டும். அதில் எந்தவித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. லட்சோப லட்சம் மக்கள் இன்றும் இடம்பெயர்ந்து நலன்புரிநிலையங்களிலும், இந்தியாவிலும் இருப்பதற்கு காரணம், முப்படையினரும் அவர்களது காணிகளை கையகப்படுத்தி வைத்திருப்பதேயாகும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா.

22 ஆம் பக்கம் பார்க்க

# ஆவணமின்றி பயணித்தால் இனிமேல் பெரும் ஆபத்து

## தயவு தாட்சணியமின்றி வாகனச் சாரதிகள் நீதிமன்றில் நிறுத்தப்படுவர்

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாண மாவட்டத்தில் உரிய ஆவணங்கள் இன்றி வாகனங்களைச் செலுத்துவோர் எந்தவிதத் தயவு தாட்சணியமும் இன்றி நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவர் என்று தெரிவித்துள்ளார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

22 ஆம் பக்கம் பார்க்க

# ஆலயத்துக்கு அழைத்து சென்று ஆள் சேர்க்க இராணுவம் முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 12

உயர் பாதுகாப்பு வலயங்களிலுள்ள மயிலிட்டி ஆலயங்களுக்கு மக்களை அழைத்துச் சென்றபடையினர், அதனை இராணுவத்தின் ஆள்சேர்ப்புக்கான களமாக நேற்றைய

22 ஆம் பக்கம் பார்க்க



# வடமாகாண சபைக்கான பங்கை வழங்க மறந்த போக்குவரத்து ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஜூலை 12

வடக்கு மாகாணத்திலிருந்து தேசியபோக்குவரத்து ஆணைக் குழுவுக்குக் கிடைக்கும் வருமானத்தின் மூன்றிலொரு பங்கை, வடக்கு மாகாண சபைக்கு வழங்குவதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்திருந்த போதும், இது வரையில் எந்தவொரு நிதியும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாகாணத்துக்குள்ளேயான போக்குவரத்து வழித்தட அனுமதிகள் மற்றும் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து வழித்தட அனுமதிகள் என்பன தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் வழங்கப்பட்டு வருகின்றன.

மாகாணத்துக்குரிய போக்குவரத்துஅமைச்சு உள்ளபோதும், தேசியபோக்குவரத்து ஆணைக் குழுவாலேயே அவை வழங்கப்பட்டு வருகின்றன.

தேசியபோக்குவரத்து ஆணைக் குழுவுக்கு அவற்றால் கிடைக்கப்பெறும் வருமானத்தில் மூன்றிலொரு பங்கு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சுக்கு வழங்கப்படும்என்றும், மாகாண சபை அமைக்கப்பட்ட பின்னர் அந்த நிதி வழங்கப்படும் என்றும் முன்னர் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் வடக்கு மாகாண சபை கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் இயங்க ஆரம்பித்து, 10 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் இதுவரை வடக்கு மாகாணத்துக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்ட மூன்றிலொரு பங்கு நிதி வழங்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. (ற-5)





ஆலயத்தில் தாக்கப்பட்ட முட்கம்பி.


உடைக்கப்பட்ட தேர், சூரன் சிலை




சொந்த மண்ணில் நிம்மதியான உறக்கம்.




கொடிமரம், நந்தி எவையும் இல்லாத நிலையில்





26 வருடங்களின் பின் மூன்றாவது தடவையாக நேற்றும் மயிலிட்டி கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு பக்தர்கள் சென்றனர்.

# குற்றச் செயல்கள் நடப்பது இலங்கையில் மிக குறைவு

## பிரதமர் ஜயரட்ன கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 12



இலங்கையில் குற்றச் செயல்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது என்று தெரிவித்துள்ளார் பிரதமர் டி.எம்.ஜயரட்ன. நவீன தொழில்நுட்ப அறிவியல் வளர்ச்சியுடன் மக்களின் சமூக கட்டமைப்பு மற்றும் வாழ்க்கை முறைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இந்த மாற்றம் காரணமாக தற்போது உலகின் பல பாகங்களிலும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை போன்ற பல்வேறு குற்றச் செயல்கள் பெரியளவில் நடைபெற்று வருகின்றன. ஆயினும் ஒப்பீட்டளவில் இலங்கையில் இவ்வாறான குற்றச் செயல்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது.

நாட்டு மக்கள் பிழையான பாதையில் சென்றால் அதற்கு ஒட்டு மொத்த சமூகமுமே பொறுப்புக் கூற வேண்டும். அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# கடும்போக்கு மத அமைப்புகள் இலங்கையில் இயங்குகின்றன

## அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வா கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 12

இலங்கையில் சிங்கள மற்றும் முஸ்லிம் கடும் போக்கு வாத அமைப்புக்கள் இயங்கி வருகின்றன என்று தெரிவித்துள்ளார் ஆளும் கட்சியின் முக்கிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா. அவ்வாறான கடும் போக்குடைய அமைப்புக்களை இல்லாமற் செய்வதற்கு அரசு முனைப்பு காட்டி வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

"இன சமூகங்கள் மீது ஒடுக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றது என்று சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பரப்புரைகளில் எவ்வித உண்மையும் கிடையாது. இலங்கைக்கு வந்த தென்னாபிரிக்கத் துணை ஜனாதிபதி சிறில் ரமபோஷவுக்கு இந்த நிலைமைகளை நேரில் பார்வையிட சந்தர்ப்பம் கிட்டியது.

அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை ஆட்சி கவிழ்ப்பதற்கான ஓர் உத்தியாக சில தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் ஏனைய வெளிநாட்டு சக்திகளும் பயன்படுத்திக் கொண்டுள்ளன. அரசு சரியான பாதையிலேயே பயணம் செய்கின்றது."- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)



# 5,000 ரூபா போலி நாணய தாள்களுடன் ஐவர் கைது

கொழும்பு, ஜூலை 12

5,000 ரூபா போலி நாணயத் தாள்களை வைத்திருந்த ஐவர் வெள்ளவத்தை பகுதியில் குற்றப்புலனாய்வுத் திணைக்கள உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 300 போலியான 5,000 ரூபா நாணயத் தாள்களை குற்றப் புலனாய்வுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மீட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா மற்றும் வெள்ளவத்தை பகுதிகளைச் சேர்ந்தவர்களே போலி நாணயத் தாள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற)

# நாட்டின் நிலைமைகள் குறித்து கருத்து வெளியிடார் சந்திரிகா

## அவரது எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை அது பாதிக்கும் என்பதாலாம்

கொழும்பு, ஜூலை 12



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, நாட்டில் நிலவும் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக கருத்து வெளியிடுவதைத் தவிர்க்க தீர்மானித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

தற்போது கருத்துக்களை வெளியிடுவது அவரது எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்குத் தடையாக அமையக் கூடும் என்று அவரது ஆலோசகர்கள் சுட்டிக் காட்டியதை அடுத்தே இந்தத் தீர்மானத்தை அவர் எடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

ஆலோசகர்களின் ஆலோசனைப்படி, ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுவதை தவிர்ப்பதற்காக அவருக்கு நெருக்கமானவர்கள் விசேட வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

ஒரு மாதத்துக்கும் மேலாக வெளிநாட்டில் தங்கியிருந்த முன்னாள் ஜனாதிபதி இலங்கை திரும்பியுள்ளார். தற்போது அவர் எதிர்கால அரசியல் வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார் என்றும் தெரியவருகின்றது. (ற)

# ஞானசார தேரருக்கு விசா வழங்கியது ஆஸி.

கொழும்பு, ஜூலை 12

அமெரிக்கா உட்பட சில மேற்குலக நாடுகள் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு வழங்கிய நுழைவிசைவுகளை இரத்துச் செய்திருந்த நிலையில், ஆஸ்திரேலியா அவருக்கு நுழைவிசைவு வழங்கியுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தேரருக்கு வழங்கியிருந்த நுழைவிசைவுகளை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அண்மையில் இரத்துச் செய்துள்ளன. பிரான்ஸும் அவரது நுழைவிசைவை அண்மையில் இரத்துச் செய்திருந்தது.

ஆயினும், ஆஸ்திரேலிய அரசு எந்த முன்னுதாரணத்தையும் கவனத்தில் கொள்ளாது ஞானசார தேரர் நுழைவிசைவு வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆஸ்திரேலிய அரசின் இந்த நடவடிக்கை ஆச்சரியத்திற்குரிய விடயம் என நோக்கர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா யாழ். 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 28 சனிக்கிழமை (12.07.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 228

## நகுலேஸ்வரம் பகுதியில் கடற்படையினரின் சுவீகரிப்புக்காக

# காணி அளவையிடும் முயற்சி மக்கள் எதிர்ப்பால் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

**நகுலேஸ்வரத்தில் 183 ஏக்கர் பொதுமக்களின் காணியை அளவீடு செய்வதற்கு கடற்படையினரும், நில அளவைத் திணைக்களத்தினரும் இணைந்து எடுத்த முயற்சி, காணி உரிமையாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளால் நேற்று முறியடிக்கப்பட்டுள்ளது. மக்களின் தீவிர எதிர்ப்பை அடுத்து அளவீட்டு நடவடிக்கைகளைக் கைவிட்டு நிலஅளவைத் திணைக்களத்தினர் திரும்பினர்.**

வலி.வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் நகுலேஸ்வரம் (ஜே/226) கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட பொது மக்கள் 36 பேருக்குச் சொந்தமான 183 ஏக்கர் காணியைச் சுவீகரிப்பதற்கான அறிவித்தல்கள் கடந்த ஏப்ரல் மாதம் ஒட்டப்பட்டது. அதற்கு அந்தக் காணி உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

இதனையும் மீறி குறித்த காணிகளை அளவீடு செய்வதற்கு நில அளவைத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்தனர். அளவீடு செய்வதற்காக நேற்று நிலஅளவைத் திணைக்களத்தினர் அந்தப் பகுதிக்குச் சென்றனர். அதனை அறிந்த காணி உரிமையாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அங்கு திரண்டனர்.

காணிக்குரிய எல்லை, கடற்படை முகாமினூடாக சென்றே அளவிட முடியும். அதற்காக கடற்படை முகாமுக்குள் செல்வதற்கு நிலஅளவைத் திணைக்கள அதிகாரி, கடற்படையினரிடம் கோரிக்கை விடுத்தார். இதன்போது அங்கு நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன் மற்றும் மாவை சேனாதிராசா ஆகியோர் அளவீடு நடவடிக்கைகள் முன்னெடுக்க முடியாது என்று தெரிவித்தனர்.

இதனையடுத்து குறித்த கடற்படை முகாமிலிருந்த சிப்பாய்கள் தமது மேலிடத்துக்கு தகவலைத் தெரியப்படுத்தினர். இதன் பின்னர் அங்கு வந்த கடற்படை அதிகாரி, நிலஅளவை

(22ஆம் பக்கம் பார்க்க)

## திருமணமான பெண்ணை கடத்திச் சென்று மறுமணம்

### வல்வெட்டித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

திருமணமான பெண் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு வேறொருவருக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளார். அது தொடர்பில் பாதிக்கப்பட்டவர் தம்மிடம் முறைப்பாடு செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் வல்வெட்டித்துறையில் நடந்துள்ளது. குறித்த பெண் சட்டபூர்வமாகத் திருமணம் செய்துகொண்டுள்ள நிலையில் நான்கு பேர் அவரைக் கடத்திச் சென்றுள்ளனர் என்று தெரிவித்துள்ள பொலிஸார், சந்தேகநபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

(ற-4)

## கடந்த வாரத்தில் பறிபோனவை ரூ.6 லட்சம் பெறுமதியானவை

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் இடம்பெற்ற கொள்ளை, திருட்டுச் சம்பவங்களில் நகைகள் உட்பட சுமார் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் அபகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொடிகாமம் கச்சாய் பகுதியில் வீடு புகுந்த கொள்ளையர் அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி 4 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். கொடிகாமத்தில் கடந்த 4 ஆம் திகதி 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் சந்தேகத்தில் 2 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சங்கானையில் 78 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. அதே இடத்தைச் ஒருவர் சந்தேகத்தின் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாவடி கிழக்கில் இரவு நேரம் வீடுபுகுந்து பெறுமதிமிக்க சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. அச்சுவேலியில் வீடுபுகுந்து ஒரு லட்சத்து 48 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. அது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இளவாலையில் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி திருடப்பட்டுள்ளது. அதே பகுதியில் உண்டியல் உடைத்து ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் திருடப்பட்டுள்ளது. அது தொடர்பில் சந்தேகத்தில் சுதுமலையைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாயில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் உடைக்கப்பட்டு 22 ஆயிரத்து 450 ரூபா பெறுமதியான பொருள்கள்

(22ஆம் பக்கம் பார்க்க)



உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் உதவிப் பணிப்பாளர் நாயகமும் ஆசிய பசுபிக் வலய பிரதிநிதியுமான ஹியோ ஷிகி கொனுமா நேற்றுமுன்தினம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்தார். பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் 'திவிநெகும' உட்பட ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அமைச்சர் இந்தச் சந்திப்பின் போது , உலக உணவுஅமைப்பின் உதவிப் பணிப்பாளர் நாயகத்துக்கு விளக்கமளித்தார். (ற)

## வட்டி, சீட்டு கட்டுதல் சட்டவிரோதமானது

### அவற்றைச் செய்யாதீர்கள் என பொலிஸ் அறிவுரை

யாழ்ப்பாணம், ஜூலை 12

வட்டிக்குப் பணம் கொடுத்தல், சீட்டுக் கட்டுதல் மற்றும் வெளிநாடு அனுப்பி வைப்பதாகக் கூறிப் பணம் திரட்டுதல் சட்டவிரோதமானது. அவ்வாறான செயல்களில் ஈடுபடவேண்டாம் - இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் யாழ்.பிராந்திய பொலிஸ் சிரேஷ்ட அத்தியட்சகர் பி.விமலசேன.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

"யாழ்.குடாநாட்டில் வட்டிக்குப் பணம் கொடுத்தல், சீட்டுக் கட்டுதல் என்பன சட்டவிரோதமானது என்று தெரிந்தும் பலர் அவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றனர். அவற்றில் யாராவது ஏமாற்றப்பட்டால் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க முடியாது. எனவே அவற்றைச் செய்யாதீர்கள். அதுபோன்றே சட்டவிரோதமாக வெளிநாடு செல்வ

(22ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் வாகனப் பரிசோதகரே வாகனத்தை சோதிக்க வேண்டும்

### பிரேக் இல்லாத பஸ் குறித்துப் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

மோட்டார் வாகன பரிசோதகர்கள் ஊடாகவே பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ்கள் சோதனை செய்யப்பட்டு அவை பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்படுகின்றது. பிரேக் இல்லாத வாகனம் பயன்பாட்டில் இருப்பது தொடர்பில் அவர்களே அவதானிக்க வேண்டும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில், சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன்

(22ஆம் பக்கம் பார்க்க)

## திருடர்கள் அதிகம் மக்களே கவனம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

இன்னும் சில வாரங்களில் நல்லூர்த் திருவிழா ஆரம்பமாகவுள்ளது. ஆலயத்துக்கு வருபவர்கள் இம்முறை மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். தற்போது திருட்டில் ஈடுபடுபவர்கள் பிற மாவட்டங்களில் இருந்து கூட்டமாக வந்து, நுணுக்கமான முறைகளில் திருடுகின்றனர் - இவ்வாறு எச்சரித்துள்ளார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

"அண்மைக்காலத்தில் நடைபெற்ற திருட்டுகள், பிறமாவட்டங்களில் இருந்து கூட்டமாக வந்தவர்களால் நடத்தப்பட்டுள்ளன என்று விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. இன்னும் சில வாரங்களில் நல்லூர் ஆலய உற்சவம் ஆரம்பமாகவுள்ள நிலையில், அங்கு வரும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்."- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ற-4)

**கட்டட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கூறுவிலை கோரல்**

**கணினி ஆய்வுகூட கட்டடம் அமைத்து அன்பளிப்பாக வழங்கல் யா/ துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை**

மேற்படி பாடசாலைக்கு கணினி ஆய்வுகூட கட்டடம் ஒன்றை அமைத்து அன்பளிப்பாக வழங்க எமது கௌரவ இயக்குநர்சபை தீர்மானித்துள்ளது.

இதற்குரிய மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அனுமதி அதிபர் மூலம் பெறப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட வரைபடம், ஏனைய நியம அளவுகளையும் அதிபரிடம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். அதிபரின் தொலைபேசி இல.0776354202

கூறுவிலைகளை எதிர்வரும் 25.07.2014 இற்கு முன்பாக, எனது அலுவலகத்தில் நேரடியாக ஒப்படைக்கவும்.

*குறிப்பு:- வேறு எவரிடமும் கையளிக்க வேண்டாம்.*

Ms. V.இந்துஜா

பிரதம நிறைவேற்று அதிகாரி, திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

0212219016, 0215689090

(சி-19883)





**கனடா ஜெயசாயி சூப்பர் சென்ரர்**

இடம் மாற்றுவதை முன்னிட்டு 15.06.2014 முதல் இருப்பகற்றல்.

கொள்வனவு செய்யும் அனைத்து விதமான ஆடைகளையும் அதன் விலையில் இருந்து ½ வாசி விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

இல. 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 021 221 9393

(48124)(7.6.3)


## மாவட்டச்செயலகம், கிளிநொச்சி சுத்திகரிப்பு சேவைக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச்செயலாளரினால் சுத்திகரிப்பு சேவைக்கான வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகத்தில் உள்ள சகல மலசலகூடங்களையும், சுற்றுப்புறங்களையும் மற்றும் கழிவுநீர் வழிந்தோடும் வாய்க்கால்களையும் துப்புரவு செய்வதற்கான கேள்விகள் பொருத்தமான சேவை வழங்குநர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. இது தொடர்பான மேலதிக தகவல்களையும் விண்ணப்பப்படிவத்தினையும் செயலக நிர்வாகக்கிளையில் (தொ.பே.இல.021 228 5357, பக்ஸ் இல. 021 228 3966) 14.07.2014 ஆம் திகதியில் இருந்து 23.07.2014 ஆம் திகதிவரை அலுவலக நாள்களில் முற்பகல் 9 மணி தொடக்கம் பி.ப. 3.30 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 1000உம் செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம். செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக்கொண்ட விவரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம் கிளிநொச்சி** எனும் முகவரியிடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் **"கிளிநொச்சி மாவட்ட சுத்திகரிப்பு சேவைக்கான கேள்வி அறிவித்தல் - 2014** என குறிப்பிட்டு **23.07.2014 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக செயலக நிர்வாகக் கிளையில் கேள்விப்பெட்டியில் சேர்த்தல் வேண்டும்.** கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும். கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

திருமதி ரூ.கேதீஸ்வரன்
திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,
அரச அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.14941) (45.6.3)

## மின்தடை பற்றிய அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 12

உயர் அழுத்த தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை தோப்பு, அச்சுவேலி, செல்வநாயகபுரம், தம்பாலை, இடைக்காடு, பத்தமேனி, கைதடி வடக்கு, நவபுரம், நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு பிரதேசங்களிலும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை இளவாலை, மாதகல், பண்டைத்தரிப்பு, சில்லாலை, விளான், நிற்சாமம், தொல்புரம், சுழிபுரம், சாங்கானை, சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## இன்று காலை பௌர்ணமி அரங்கம்

சாவகச்சேரி,ஜூலை 12

கோயிலாக்கண்டி மேற்கு, தச்சன் தோப்பு கந்தையா கனகம்மா நினைவு நிதியம் சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உப பணிமனையுடன் இணைந்து நடத்தும் பௌர்ணமி அரங்கம் இன்று சனிக்கிழமை காலை9 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நாவற்குழி உப பணிமனையின் பொறுப்பதிகாரி நா.தங்கவேல் தலைமையில் இடம் பெறவிருக்கும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நெடுங்கேணிப் பிரதேச சபையின் செயலாளர் சீவரத்தினம் மனோகரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் பொன்னம்பலம் சுப்பையா கலந்து கொள்வார். (க)

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் பழைய பொலிஸ் வீதியில் அமைந்துள்ள 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மேலதிக தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம்:

**075 0473 623**

(49557) (10)


**கிரபிக்ஸ் • அனிமேஷன் • மல்டிமீடியா**

**விரிவான இலவச கருத்தரங்கு**

**நாளை ஞாயிற்றுக்கிழமை**

12 வருடம் அனுபவம்மிக்க விரிவுரையாளர்(CSC India)

இன்றே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

யாழ்.நகரில்
2G, ஸ்ரான்லி வீதி,
T.P : 021-222 5677


## சங்காபிஷேகம்

வரணி,ஜூலை 12

வரணி, கரம்பைக்குறிச்சி கிழக்கு, ஆழ்வார்மடம் வேலாயுதர் கோயில் தேவஸ்தான கும்பாபிஷேக தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1008 சங்காபிஷேகத்துடன் இடம் பெறும். அடியார்கள் இதில் கலந்து வேலாயுதப் பெருமானின் அருளைப் பெறுமாறு வேண்டப்பட்டுள்ளார்கள்.

(க-122)

## மணமகள் தேவை

- 87 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 51½ பாவமுடைய நோர்வே பிரஜா உரிமைபெற்ற இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 79 இல் பிறந்த 1இல் செவ்வாய் 104 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
- 79 இல் பிறந்த 2 இல் செவ்வாய் 43 பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 80 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 20 பாவமுடைய கனடா பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
- 81 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 24 பாவமுடைய BSc இஞ்சினியர் லண்டன் பிரஜா உரிமை பெற்றவருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 83 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 32 பாவமுடைய நியூஸ்லாந்து பிரஜா உரிமைபெற்ற C.I.M.A. எக்கவுண்டனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 81 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 7 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமைபெற்ற இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை,
இல.62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி., முடமாவடி..

**077 607 0862**

(49867) (12.3.6)

## மரண அறிவித்தல்

### கந்தையா கெங்காதரம்(கண்டு)



யாழ். சாவகச்சேரி மீசாலையைப் பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கெங்காதரம் (கண்டு) 08.07.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் (கிளி), அன்புக் கணவரும், பஞ்சாட்சரம், அன்னம்மா, காலஞ்சென்றவர்களான சடாச்சரம், கணேசமூர்த்தி, மாணிக்கவாசகர் (பசுபதி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வள்ளிநாயகி, காலஞ்சென்ற நடராசா, சரோஜினி, சிவமலர், சூரியகுமார் (குமார்), காலஞ்சென்ற சந்திரகுமார் (வவா), விசயகுமார் (அப்பன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சந்திரிக்கா (இலங்கை), செந்தூரன் (லண்டன்), நிரஞ்சன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகிதரன் (சுகி), ரஜிதா ஆகியோரின் அன்பு மாமனும், விேனாசா, கம்சிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2014) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியாள்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி.14965) (45.6.3) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கற்பகவதி சண்முகம்



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் மன்னார், மாளிகைத்திடல், திருக்கேதீஸ்வரத்தைவதிவிடமாகவும் கொண்ட திருமதி கற்பகவதி சண்முகம் நேற்று முன்தினம் (10.07.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாசிலாமணி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும், சரஸ்வதியின் அன்புச் சகோதரியும், இராஜேஸ்வரி, சந்திரா, அருந்ததி, செல்வதி, சிவா (நோர்வே),தயா (கனடா), சுதா (மல்லாகம்), றஜி (மன்னார்) ஆகியோரின் அன்புத் தாயும், கனகரெத்தினம், ரவீந்திரன் (மன்னார்), மனோகரன் (மன்னார்), காலஞ்சென்ற தியாகராசா மற்றும் நாகேஸ்வரி (நோர்வே), சாந்தி (கனடா), கிரிஜா, சுசி (மன்னார்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் துரைராஜா, நவரெட்ணம் ஆகியோரின் மைத்துனியும், பவானி, கனகமணி, சண்முகராஜா, மனோன்மணி (கனடா), ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும், காலஞ்சென்றவர்களான சேகர், உமா மற்றும் மனோகர் (கனடா), ரீாதா (கனடா), மதி (கனடா), சேயோன் (கனடா), உசா (கனடா), காலஞ்சென்ற தியாகராசா மற்றும் கமலா, ஜெயராணி, ரவி ஆகியோரின் பெரியதாயும், சத்தியகாந்தன் (கண்ணன்-ஜேர்மனி), குமணன் (சுவிஸ்), கீதா (லண்டன்), தீபா (லண்டன்), நிஷாந்தன் (கனடா), மேகநாத் (மன்னார்), தனுசிகா (லண்டன்), துஷ்யந்தி (கொழும்பு - பல்கலைக்கழகம்), யுதர்சன், மாதங்கி (நோர்வே), மயூதா (நோர்வே), மயூரன் (நோர்வே), தக்சலன் (கனடா), சாருகா (கனடா), சஸ்மிதா, (கனடா), சானிகா, சரணியா, பிரியந், விதுசன், தர்சனா, யதுசனா, விதுசனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆரூத்ரா (ஜேர்மனி), கனீர்த்தி (லண்டன்) அர்த்தீஷ் (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நல்லதண்ணீர்ப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாளிகைத்திடல்,
திருக்கேதீஸ்வரம், மன்னார்.

(49862) (45.6.3)

தகவல்: குடும்பத்தினர்

## உயர்தர மாணவருக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 12
ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான விசேட செயலமர்வு இன்றும், நாளையும் யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை (கலைப் பிரிவு), யாழ். மத்திய கல்லூரி (கணித விஞ்ஞானப்பிரிவு), யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி (வர்த்தகப்பிரிவு) ஆகிய கல்லூரிகளில் கொழும்பு, யாழ்ப்பாண பிரபல விரிவுரையாளர்களினால் நடத்தப்பட உள்ளது.
யாழ். பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் மற்றும் எல்.சி. பி.ரி.சிற்றி கம்பஸ் ஆகியவற்றால் இந்தச் செயலமர்வு இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (த)

## முழுநிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை 12
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
இதில் 'மது, புகைப்பொருள் பாவனைக் குறைப்பில் சமூகத்தின் பங்கு' எனும் தலைப்பில் ஹெல்தி லங்கா அமைப்பின் மாகாண நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் இ.சிவநாயகம் கருத்துரை வழங்கவுள்ளார். (க)

## 'இந்துவாக வாழ்வோம்' கலந்துரையாடல் மாங்குளத்தில்

யாழ்ப்பாணம்,ஜூலை 12
நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ காலத்தில் யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் நடத்தும் "இந்துவாக வாழ்வோம்" செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக மாணவர்களுக்கான காலை நேர பஜனை, வட மாகாணக் கல்வித் திணைக்களத்தோடு இணைந்து நடத்தப்படவுள்ளது.
இது தொடர்பாக கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, மன்னார், மடு ஆகிய வலயங்களைச் சேர்ந்த சங்கீத ஆசிரியர்கள் மற்றும் சைவ சமய பாட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிமுதல் 4.00 மணி வரை மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு முன்பாகவுள்ள சிவசற்குருநாதர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இதன்போது பஜனைப் பாடல்களுக்கான இறுவட்டுக்களும், பாடப் புத்தகங்களும் வழங்கப்படுவதோடு மாணவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்கு பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளது. (ஓ)

## குடும்பப் பெண்கள் தாக்கப்பட்டு மருத்துவமனையில்

தென்மராட்சி, ஜூலை 12
அயல் வீட்டுக் காரரால் தாக்கப்பட்டதாகக் கூறி இரண்டு குடும்பப் பெண்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மட்டுவில் தெற்கைச் சேர்ந்த மார்க்கண்டு கனகம்மா (வயது-62) கொடிகாமம் பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த வசந்தகுமார் ஜெயந்தி (வயது-44) ஆகிய இருவருமே அனுமதிக்கப்பட்டுள்ளவர்களே விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மருத்துவமனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)

### கலாசாரப் பேரவையில் அங்கத்தவராகலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 12
யாழ். மாவட்ட கலை, கலாசாரப் பேரவையில் அங்கத்தவர்களாகச் சேர விரும்பும் கலைஞர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் பிரதேச செயலகங்களில் உள்ள கலாசார உத்தியோகத்தரிடம் விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஓ)

## கடத்தப்பட்ட உடுப்பிட்டி இளைஞர் மீட்கப்பட்டு மருத்துவமனையில்

கரணவாய், ஜூலை 12
உடுப்பிட்டிப் பகுதியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு தாக்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10 மணிக்கு உடுப்பிட்டி நாவலடித்திடல் அம்மன் கோவிலுக்கு அண்மையில் இடம்பெற்றது. இதில் நாவலடி உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த தங்கராசா தினேஷ் (வயது-29) என்ற இளைஞரே இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டார்.
தலைமுடி வழிக்கப்பட்ட நிலையில் பின்னர் மீட்கப்பட்டு மந்திகை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.
சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-
சம்பவ தினத்தில் குறித்த இளைஞர் நாவலடி திடல் பகுதியில் அமைந்துள்ள திடல் பத்திர காளி அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்றுவரும் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொண்டு வீடு திரும்பியபோது வீதியில் வழிமறித்த மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத குழுவினர் அவரது முகத்தை சாக்கால் மூடிக்கட்டி அருகிலுள்ள சிறு பற்றைக்குள் கொண்டுசென்று தலைமுடியை கத்தியால் வழித்து அவர்மீது தாக்குதல் மேற்கொண்டபின் தப்பிச் சென்றுவிட்டனர்.
அதன்பின் உறவினர்களின் உதவியுடன் மந்திகை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அது தொடர்பான விசாரணைகளை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (வ-108)

## ஊடக எழுத்தறிவு தினம்

கொக்குவில்,ஜூலை 12
கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஊடகக்கழகம் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தும், 'ஊடக எழுத்தறிவுத் தினம்' எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
செல்வன் வி.விஷ்ணுஜன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், உதவிக் கல்விப் பணிப்பாளர் லெனின் அறிவழகன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் ஆகியோரும் கௌரவ விருந்தினராகக் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி.ரகுராமும் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

## வாள் வெட்டுச் சம்பவத்தில் தேடப்பட்டவர் கைது

தென்மராட்சி, ஜூலை 12
சாவகச்சேரி மருத்துவமனை வளாகத்தில் வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த இளைஞரை பொலிஸார் கைதுசெய்து நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.
மீசாலை மில் வீதியைச் சேர்ந்த குறித்த இளைஞரை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
இந்த வழக்குத் தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்ட 3 பேர் புதன்கிழமை நீதிமன்றில் சாவகச்சேரி பொலிஸாரால் முற்படுத்தியபோது விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டமை தெரிந்ததே.
அல்லாரையில் இடம்பெற்ற குழு மோதலில் காயமடைந்தவரை ஏற்றிவந்து மருத்துவமனையில் அனுமதித்த பின்னர் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் மருத்துவமனை வளாகத்தில் வைத்து வாளால் வெட்டியதில் உதயகுமார் அன்பழகன் என்ற இளைஞர் (வயது-23) உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## 25 ஆயிரம் ரூபா அபராதம்

அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த கச்சாய் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## வேட்டைத் திருவிழா

முக்கியத்துவம்வாய்ந்த ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த வேட்டைத் திருவிழா வெகு சிறப்பாக இடம் பெற்றுள்ளது.
இந்த ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
இன்று இடம்பெறவிருக்கும் தீர்த்த உற்சவத்துடன் திருவிழா நிறைவு பெறும். (க)

**வீடு வாடகைக்கு**
யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய பல அறைகளைக் கொண்ட மாடி வீடு வாடகைக்குண்டு.
நிறுவனப் பாவனைக்கு உகந்தது.
(49839) (12.3.6) **தொ/பு: 077 773 7072**

**வீடு வாடகைக்கு**
அச்சுவேலி, பத்தமேனி பஸ்நிலையத்திற்கு முன் ஒழுங்கையில் சகல வசதிகளும் கொண்ட வீடு (சுற்றுமதில்) உடன் வாடகைக்குண்டு.
(49671) (12.3.6) **தொ/பு: 077 673 6888**


யாழ். **கலாலயா**
பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான துரித 1 மாத கால பயிற்சிகள்** வெளிநாடுகளிலிருந்து விடுமுறையில் வந்திருப்பவர்களுக்கும் விரைவில் வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கும் மற்றும் ஆர்வமுள்ளவர்களுக்கும் உகந்தவொரு பயிற்சிநெறி.
கேக் ஐசிங் உணவு தயாரித்தல் கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும், Facials உடன் மணப் பெண் அலங்காரம், பலவித சேலை அணியும் முறைகள், Saree (B)பிளவ்ஸ் தைத்தல் ஆகிய பயிற்சிகள்.
**ஆரம்பம்:- 14.07.2014 திங்கட்கிழமை காலை 9.30**
**மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.**
- இயக்குநர் -


சரவணை தெங்கங்குளம் நாச்சிமார் கோயில்
அருள்மிகு மீனாட்சி அம்மன்
புனர் அமைப்பு குடமுழுக்கு மண்டல திருக்குட முழுக்கு
**நிறைவு நாள் பெருவிழா**
ஆனித் திங்கள் முப்பத்தோராம் நாள்
செவ்வாய்க்கிழமை 15.07.2014
* காலை 9.30 மணி
திருச்சங்கு நீராட்டல்
சந்தனக்காப்பு ஆராதனை, மதிய உணவு.
* மாலை 4.30 மணி
ஆராதனை திருவூஞ்சல் அம்மன் வீதி உலா.
சைவ அடியார்கள் வந்து அங்கயற்கண்ணி அம்மையின் அருளினை வேண்டிப் பெறுக.
- அறங்காவற் சபையினர்.
(49865)(7.5.3)

**KINGS ELECTRONICS**


**11A. Stanley Road, Jaffna.**
**T.P : 021 222 3857**
(49847) (7.6.3)

**பணியாளர் தேவை**

அடிப்படைச் சம்பளம்
★முகாமையாளர் : 50,000.00 - 75,000.00
★அனுபவமுள்ள Accounts Clerk : 20,000.00-30,000.00
★அனுபவமுள்ள Marketing Manager : 40,000.00 - 50,000.00
★ஆர்வமுள்ள Tele-Operaters : 15,000.00 - 30,000.00

உடன் தொடர்பு கொள்க:
021 228 3662, 076 534 4592
E-mail: gsn2714@gmail.com

**Global Sourcing net works**
No: 14, Veerasingam Road,
Uthayanagar East - Kilinochchi.
(41313) (10)

# ஹஜ் கோட்டாவுக்கு இடைக்கால தடை

கொழும்பு.ஜூலை 12

இந்த வருடத்துக்கான ஹஜ் கோட்டா நடவடிக்கைகளுக்கு இடைக் கால தடை உத்தரவு விதித் துள்ள உயர் நீதிமன்றம் ஹஜ் கோட்டா பகிர்ந்தளிப்பை மறுபரிசீலனை செய்யுமாறும், சம்பந்தப்பட்டவர்களை நாளை மறுதினம் 14 ஆம் திகதி நீதி மன்றில் முன்னிலையாகுமா றும் உத்தரவிட்டுள்ளது.



மொஹான் பீரிஸ்


செரண்டிப் ஹஜ் உம்ரா முக வர்களின் சங்கம் தாக்கல் செய் திருந்த மனுவை விசாரித்த பிர தம நீதியரசர் மொஹான் பீரிஸ் இந்த உத்தரவை நேற்று முன்தினம் பிறப்பித்துள்ளார்.

இந்த வருடத்துக்கான ஹஜ் கோட்டாக்கள் முறையற்ற விதத்தில் முகவர்களுக்கிடை யில் பகிர்ந்தளிக்கப்பட்டதாகத் தெரிவித்து இதற்குத் தடை உத்தரவு வழங்குமாறு கோரி 15 ஹஜ் உம்ரா முகவர்கள் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

ஹஜ் முகவர்களுக்கான நேர் முகப் பரீட்சை நேர்மையாக நடத்தப்படாது ஹஜ் கோட் டாக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதா கவும் சுமார் 50 க்கும் மேற் பட்டவர்களுக்கு அநீதி இழைக் கப்பட்டதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட மனுவை ஆராய்ந்த நீதிமன்றம் கோட்டா பகிர்ந்த ளிப்பை மறுபடியும் மீளமேற் கொள்ளு மாறும் கோரியுள்ளது.

நீதிமன்றில் தாக்கல் செய்யப் பட்ட மனுவில் பிரதிவாதிகளாக ஹஜ் குழுவின் இணைத் தலைவர்களான சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, பிரதியமைச்சர் ஏ.ஆர்.எம். அப்துல் காதர், முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக் களப் பணிப்பாளர் எம்.எச். எம்.ஸமீல், பிரதமரும் புத்த சாசன மற்றும் மத விவகாரங் களுக்கான அமைச்சருமான டி.எம்.ஜயரத்ன, அமைச்சின் செயலாளர் கமல் திசாநாயக்க, உலமா சபையின் உதவிச்செய லாளர் எம்.எஸ்.எம். தாஸிம், என்.எம்.எம்.நிப்லி, எம்.ஐ. ரபீக், எம்.எச்.நய்முதீன், டாக்டர் என்.எம்.எம். இக்பால் ஆகி யோர்களின் பெயர்கள் குறிப்பி டப்பட்டிருந்தன. (ஒ)



வரலாற்றுச் சிறப்பு மிக்க கண்டி தலதா மாளிகைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் சென்றிருந்தார். அங்கு ஜனாதிபதி மத வழிபாடுகளில் ஈடுபட்டார். அதன்பின்னர் அஸ்கிரி விகாரைக்குச் சென்று மகாநாயக்கர்களைச் சந்தித்தார். அவர்களிடம் ஆசீர்வாதமும் பெற்றுக்கொண்டார். தலதா மாளிகைக்கு வந்திருந்த பொது மக்களுடனும் ஜனாதிபதி சிநேகபூர்வமாக உரையாடினார். (ஒ)

# அளுத்கம வன்முறை குறித்து சபையில் விவாதம் முஸ்லிம் அமைச்சர், பிரதியமைச்சர்கள் இல்லை

**சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் அளுத்கம, தர்கா நகர், பேருவளை வன்முறைகள் தொடர்பில் சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.**

கொழும்பு.ஜூலை 12

சட்டம், ஒழுங்கின் இன்றைய நிலை தொடர்பாக நேற்றுமுன் தினம் நாடாளுமன்றில் இடம் பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் அளுத்கம, தர்கா நகர், பேருவளை வன்முறை கள் தொடர்பில் சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற் றன. இந்த விவாதத்தில் எந்த வொரு முஸ்லிம் அமைச் சரோ, பிரதியமைச்சரோ பங் கேற்கவில்லை.

ஜனநாயகத் தேசியக் கூட்ட ணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜே.வி. பியின் தலைவருமான அநுரகுமார திஸாநாயக்கவால் சட்டம், ஒழுங்கின் இன்றைய நிலை குறித்து நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் கொண்டு வரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீது பிற்பகல் 2 மணிமுதல் மாலை 6.30 மணி வரையிலான நான் கரை மணிநேரம் வாதப்பிரதி வாதங்கள் இடம்பெற்றன.

இந்த விவாதத்தின் பிரதான கருப் பொருளாக அளுத்கம, தர்காநகர், பேருவளை ஆகிய பகுதிகளில் அண்மையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட இன வன் முறையே இருந்தது. இருப்பி னும், முஸ்லிம் மக் களின் பிரதிநிதிகளான அமைச் சர்கள் ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியூ தீன், அதாவுல்லா, பௌஸி, பஷீர் சேகுதா வூத், பிரதிய மைச்சர்களான பைஸர் முஸ் தபா, ஹிஸ்புல்லாஹ், காதர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இருக் கின்ற போதும், ஆளுந்தரப்பு தேசியப் பட்டியல் நாடாளு மன்ற உறுப்பினரான ஏ.எச். எம்.அஸ்வர், ஐ.தே.க. உறுப் பினரான கலீம் ஆகியோ ரைத் தவிர வேறு எவரும் இந்த விவாதத்தில் பங்கேற்க வில்லை.

இதில் பலர் நேற்றுமுன்தினம் முழுவதும் சபைக்கே வராத நிலையில், அமைச்சர்கள் ரிஷாத், அதாவுல்லா, மற்றும் அஸனலி ஆகியோர் சபைக்கு வந்து ஒரு சில நிமிடங்களுக் குள் வெளியேறிவிட்டனர்.

முஸ்லிம் மக்கள் எதிர்கொள் ளும் அச்சுறுத்தல், அவர்கள் மீதான இன வன்முறைகள் தொடர்பில் ஆளுந்தரப் பில் பல விடயங்கள் முன்வைக்கப்பட்ட போதும், அதை எதிர்க்கவோ, மறுதலித்துப் பேசவோ எந்த வொரு முஸ்லிம் அமைச் சரோ, பிரதி அமைச்சரோ இருக்கவில்லை.

விவாதத்தின் முழு நேரமும் இருந்த அஸ்வர் விவாதத்தை செவிமடுத்துவிட்டு தமக்கான நேரத்தில் உரையாற்றிய போதும், இவ்விடயம் குறித்து எதுவும் பேசவில்லை. (ஒ)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி சண்முகநாதன்



பன்னாலை, அம்பனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வவுனியா, வைரவபுளியங் குளம், மாடசாமி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சண்முகநாதன் 09.07.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-மூத்ததங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம்-தையல் நாயகி தம்பதியரின் அன்பு மருமகளும், நாவற்குழி யைச் சேர்ந்த காலஞ்சென்ற C.A சண்முகநாத னின் (முன்னாள் சுகாதார திணைக்கள பிரதம லிகிதர்) அன்பு மனைவியும், அருணாதேவி (இளைப்பாறிய மருந்தாளர்-வவுனியா மெடிக்கல்ஸ்), தர்மபூபதி (முன்னாள் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), சிறிஸ்கந்தராசா (கனடா), விஜயராணி (வவுனியா மெடிக்கல்ஸ்), Dr.சிறிபவானந்தராசா (பிரதிப் பணிப்பாளர்-யாழ்.போதனா வைத்தியசாலை), சிறிபாஸ்கரராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கனகசபாபதி (மருந்தாளர்) மற்றும் குகதாசன் (ஓய்வுபெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்), ரோகிணி (கனடா), ஓங்கார வடிவேல், சிவரஞ்சினி, சத்தியா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவசாந்தி-Dr.K.பிரதீபன் (VOG ஆஸ்திரேலியா), Dr.K.செல்வஸ்கந்தன் (வைத்தியர்-யாழ் போதனா வைத்தியசாலை), சாரூஜா (விவசாயபீட விரிவுரையாளர்-யாழ் பல்கலைக்கழகம்), துவாகரன்- கலைவாணி (UK), கோகுலன் (முகாமையாளர்-சம்பத் வங்கி, மன்னார்), வேதசாருணி- ஜெயசீலன் (UK), உமாறமணி (கனடா), உமாரமணன் (கனடா), இஷானி, லக்ஷன், கேசிகன், கீர்த்தனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கௌசிகன், கேசன்யா, ரோஷன், அனுருத்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், மகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, விநாயகமூர்த்தி, அன்னலட்சுமி, மனோன்மணி, காலஞ்சென்ற விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தட்சணாங்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Dr.S.சிறிபவானந்தராசா (மகன்)
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்
அம்பனை, பன்னாலை,
தெல்லிப்பழை
T.P : 077 757 0161

23/27, குளக்கட்டு வீதி,
(மாடசாமி கோயிலடி),
வைரவ புளியங்குளம்,
வவுனியா.
T.P :024 222 0305

(43375)(7.6.3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசமணி மயில்வாகனம்



அத்தியடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வைமன் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி மயில்வாகனம் 10.07.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து-அன்னம் தம்பதி யினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மயில்வாகனத் தின் பாசமிகு மனைவியும் மங்களராணி, ஆனந்த வடிவேல், புஷ்பராணி, விஜயராணி, ஜமுனாராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகதீஸ்வரன், விமலாதேவி, பரமேஸ்வரன், பஞ்சாட்சரதேவன், விஜயகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, தெய்வானைப்பிள்ளை, வேலா யுதபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவமுத்துலிங்கம், சூரியப்பிரியா ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும், சுரேஸ்குமார், தனேஸ்குமார், தனுசியா, கிருசாந்தன், தீபிகா, கீர்த்திகா, மைதிலி, தர்சிகா, சிந்து, பிரசன்னா, கிரிதரன், சங்கீத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம் பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

இல. 57, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (49869)(7.6.3)

### மிக்கேல் யேசுதாசன்

(இளைப்பாறிய மின்சார சபை உத்தியோகத்தர்)



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மிக்கேல் யேசுதாசன் 09.07.2014 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மிக்கேல்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், அலிஸ் நீற்றாவின் பாசமிகு கணவரும், மாலதி, றெஜிதரன் (லண்டன்), றெஜினோல்ட் (N.D.B யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜேம்ஸ் கோணர், றூபா (லண்டன்) அஜந்தா ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற புஸ்பம், லீலா, சின்னமலர் (இத்தாலி) கமலா (இத்தாலி) பிறேமா (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரம்சோதி, ஞானசோதி, மேரிமெற்றலின் இன்பராணி (U.S.A) மேரிதிரேசா, சகாயராணி, வினிபிரட் (கனடா), காலஞ்சென்ற மரியசீலன், குணசீலன் ஆகியோரின் மைத்துனரும், சாளினி, நிசவன், கிறிஸ்மீனா, நீத்தீஸ் (லண்டன்), ஆன்சியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (12.07.2014) சனிக்கிழமை பிற்பகல் 3 மணி யளவில் உரும் பிராய் புனிதமிக்கேல் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்டு, பூதவுடல் புனிதமிக் கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே: 021 321 7198/077 398 4117

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(49836)(45.3.6)

# முஸ்லிம்களைக் கண்காணிப்பதை அமெரிக்கா உடன் நிறுத்தவேண்டும்

## தெற்காசிய அமைப்புகளின் தேசிய கூட்டணி கோரிக்கை

வொஷிங்டன், ஜூலை 12
அப்பாவி முஸ்லிம்களை கண்காணிப்பதை அமெரிக்கா நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று தெற்காசிய அமைப்புகளின் தேசியகூட்டணி(என்.சிஎஸ்.ஓ.) வேண்டுகோள் விடுத்துள்ளது.
இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த முஸ்லிம்கள் உட்பட அமெரிக்காவில் வசிக்கும் முஸ்லிம் மக்களை தீவிரவாதிகள் மற்றும் உளவாளிகளை கண்காணிப்பதற்கான வழிமுறைகளின்படி அந்நாட்டின் என்.எஸ்.ஏ., எப்.பி.ஐ. அமைப்புகள் கண்காணிப்பதாகச் செய்திகள் வெளியாகியிருப்பது கவலை அளிக்கிறது.
தெற்காசியமக்களுடன்இணைந்து பணியாற்றி வரும் அமைப்பு என்ற முறையில், இரட்டைக் கோபுரத் தகர்ப்பு சம்பவத்துக்கு பிறகு, அமெரிக்காவில் உள்ளமுஸ்லிம்களைகுறிவைத்துப் பொது இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் துரதிர்ஷ்டவசமானவை.
மசூதிகள், முஸ்லிம் மாணவர் அமைப்புகள், முஸ்லிம்கள் பற்றிய தகவல்களை சேகரிப்பதற்காக உளவாளிகள் ஊடுருவல் உள்ளிட்டவை தொடர்பாக வெளியாகி வரும் செய்திகள், முஸ்லிம் சமூகத்தினரிடையே எதிர்மறையான விளைவை ஏற்படுத்திவிடக் கூடும். ஆதலால், அப்பாவி முஸ்லிம்களை கண்காணிக்கும் நடவடிக்கையை அமெரிக்க அதிபர் ஒபாமாவும், அமெரிக்க நாடாளுமன்றமும் முடிவுக்கு கொண்டு வர வேண்டும்' என வலியுறுத்தப்பட்டுள்ளது. (த)

# பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற வான் விபத்து

## 8 சிறுவர்கள் உட்பட 11 பேர் சாவு

பீஜிங், ஜூலை 12
சீனாவின் ஹூனான் மாகாணத்தில் பாலர் பாடசாலையொன்றிலிருந்து சிறுவர்களை அவர்களது வீடுகளுக்கு அழைத்துச் சென்ற மினி வான் ஒன்று பொய்கையொன்றில் விழுந்து விபத்துக்குள்ளானதில் குறைந்தது 11 பேர் உயிரிழந்துள்ளனர்.
7 பேர் மட்டுமே பயணம் செய்யக்கூடிய அந்த வானில் சாரதியுடன் 8 பாலர் பாடசாலை மாணவர்களும் இரு ஆசிரியர்களும் பயணித்துள்ளனர்.
மலைப் பிராந்தியத்திலுள்ள சாங்ஷா நகருக்கு அண்மையிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.
அந்த வாகனம் தடுப்பு எதுவும் இல்லாத குறுகிய வீதியினூடாக பயணித்துள்ளது.
சீனாவில் அளவுக்கதிகமான மாணவர்களை ஏற்றிச் செல்லும் பாடசாலை பஸ்கள் தொடர்பான பிரச்சினை கவலைக்குரிய ஒன்றாக மாறியுள்ள நிலையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (த)

# இந்தியாவுடன் காஷ்மீர் இணைவை ஏற்கமுடியா?

## பாகிஸ்தான் அறிவிப்பு

இஸ்லாமாபாத், ஜூலை 12
இந்தியாவுடன் காஷ்மீர் இணைவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.
ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின்சாசனத்துக்குஅமைய காஷ்மீர் விவகாரம் தற்போதும் தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினையாக உள்ளதாகப் பாகிஸ்தான் கூறியுள்ளது.
புதுடில்லியிலுள்ள இந்திய மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் இராணுவக் கண்காணிப்பாளர்களை வெளியேறுமாறு இந்தியா அறிவித்துள்ளது.
இந்தியாவின் இந்தத் தீர்மானம் குறித்துப் பதலளித்த பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர், காஷ்மீர் பிரச்சினை தொடர்பான சட்ட அந்தஸ்தில் இந்த நகர்வு எந்தவொரு தாக்கத்தையும் செலுத்தாது எனக் கூறியுள்ளார்.
ஐ.நா. இராணுவக் கண்காணிப்பாளர்களின் பங்களிப்பு சிம்லா உடன்படிக்கை மற்றும் அது சார்ந்து நிறுவப்பட்ட எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு என்பவற்றுக்கு அப்பாற்பட்டதென இந்தியா குறிப்பிட்டுள்ளது.
ஜம்மு காஷ்மீர் பகுதியிலுள்ள போர் நிறுத்த எல்லைப் பகுதியில் 1949 ஆம் ஆண்டு முதல் ஐ.நா. இராணுவக் கண்காணிப்பாளர்கள் நிலை கொண்டிருந்தனர்.
இரண்டு நாடுகளுக்கும் இடையிலான போர் நிறுத்தத்தை அவர்கள் மேற்பார்வை செய்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# 300 ஹமாஸ் நிலைகள் மீது இஸ்ரேல் குண்டுத் தாக்குதல்

## காஸாவில் 20 பேர் சாவு

காஸா, ஜூலை 12
காஸாவில் 3ஆவது நாளாக இஸ்ரேல் விமானங்கள் கடந்த வியாழக்கிழமையும் குண்டு வீசித் தாக்குதல் நடத்தின. ஹமாஸ் தீவிரவாதிகளின் 300 நிலைகளை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில், 20 பேர் உயிரிழந்துள்ளனர்.
கடந்த 3 நாள்களாக இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல்களில் 18 குழந்தைகள், 10 பெண்கள் உட்பட மொத்தம் 64 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.
இது குறித்து பாலஸ்தீன அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கையில்; தெற்குப் பகுதி நகரமான கான் யூனிஸில் இஸ்ரேல் விமானங்கள் குண்டு வீசிதாக்குதல் நடத்தின. இதில், வீடு ஒன்றின் மீது குண்டு விழுந்ததில், அங்கிருந்த அப்பாவி பாலஸ்தீனர்கள் 8 பேர் உயிரிழந்தனர். அதேபகுதியில் உள்ள தேநீர் விடுதி மீது நடத்தப்பட்ட தாக்குதலில், 9 பேர் உயிரிழந்துள்ளனர். மேற்கு காஸாவில் கார் ஒன்றின் மீது இஸ்ரேல் விமானங்கள் குண்டு வீசியதில், அதில் சென்ற 3 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த தாக்குதல்களில் 25 பேர் படுகாயமடைந்தனர். புதன் கிழமை இரவு நடத்தப்பட்ட தாக்குதலில், ஹமாஸ் இயக்கத்தினரின் 46 கட்டுப்பாட்டு அறைகள் தகர்க்கப்பட்டன' என்றனர்.
இது குறித்து காஸா பகுதி மருத்துவ அதிகாரிகள் கூறுகையில்; இஸ்ரேல் தாக்குதலில் பலியானவர்களில் பெரும்பாலானோர் அப்பாவி பெண்கள் மற்றும் குழந்தைகளே ஆவர் என்றனர்.
இதனிடையே, கான் யூனிஸ் விமானத் தாக்குதல் சம்பவத்தில் அப்பாவி பலஸ்தீனர்கள் உயிரிழந்த சம்பவத்துக்கு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சகம் தனது வருத்தத்தை தெரிவித்துள்ளது. எனினும், இஸ்ரேல் பாதுகாப்பு படை வட்டாரங்கள் தரப்பில், அந்த வீடு, ஹமாஸ் தீவிரவாத இயக்கத்தின் தளபதி ஒடே கவாரேக்கு சொந்தமானது. அவரது தலைமை அலுவலகமாக அந்த வீடு இருந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



காஷா எல்லைப் பகுதியில் தாக்குதல்களை விஸ்தரிப்பதற்காக இஸ்ரேலியப் படையினர் தமது இராணுவத் தளபாடங்களை அந்தப் பகுதிக்கு நகர்த்தியுள்ளனர். தாக்குதலுக்கு ஆயத்தமாக அடுக்கி வைக்கப்பட்டுள்ள பல்குழல் எறிகணைகள் இவை. (த)

# சீனாவுடன் உறவை மேம்படுத்தத் திட்டம்

## ஒபாமா அறிக்கை

சீனாவுடன் உறவை மேம்படுத்த புதிய செயற்றிட்டத்தை வகுக்க இருப்பதாக அமெரிக்க அதிபர்ஒபாமாதெரிவித்துள்ளார்.
அந்த நாட்டுடனான கருத்து வேறுபாடுகளைக் குறைக்கும் வகையில் அமெரிக்க இந்தப் புதிய செயற்றிட்டத்தை உருவாக்குவதில் முனைப்புடன் உள்ளது என்றும் ஒபாமா கூறியுள்ளார்.
சீன தலைநகர் பீஜிங்கில் அமெரிக்க சீன பொருளாதார மேம்பாடு தொடர்பான ஆண்டுக் கூட்டம் தொடங்கியுள்ளது. இதனை முன்னிட்டு ஒபாமா அறிக்கை வெளியிட்டுள்ளார்.
அதில் அமைதியான, ஸ்திரமான, வேகமாக வளர்ந்து வரும் சீனாவை அமெரிக்க வரவேற்கிறது. சீனாவுடன் வேறுபாடுகளைக் களைந்து உறவுகளை மேம்படுத்தும் வகையில் புதிய திட்டங்களை வகுக்க அமெரிக்கா முனைப்புடன் பணியாற்றி வருகிறது.
எந்த விவகாரத்தையும் அமெரிக்காவும் சீனாவும் ஒரே கண்ணோட்டத்துடன் பார்ப்பது இல்லை. இரு நாடுகளுமே வெவ்வேறு வரலாற்று, கலாசார பின்னணிகளைக் கொண்டவை. அதே நேரத்தில் இரு நாடுகளுக்கும் பொதுவான சவால்களை எதிர்கொள்ளும் வகையில் உறவை மேம்படுத்த வேண்டியுள்ளது.
அமெரிக்கா, சீனா இடையே ராஜாங்கரீதியிலான உறவு ஏற்பட்டு 35 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இது வரை நாம் பல்வேறு விடயங்களில் சிறப்பாக இணைந்து செயற்பட்டுள்ளோம். எதிர்காலத்தில் இந்த உறவு தொடர்ந்து மேம்பட நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்என்று ஒபாமா கூறியுள்ளார். (த)

## அமெரிக்க பல்கலை தலைவராக இந்தியர்

வாஷிங்டன்.ஜூலை 12

அமெரிக்காவில் உள்ள டோலடோ பல்கலைக்கழகத்தின் இடைக்காலத் தலைவராக இந்தியாவைச் சேர்ந்த நாகி நாகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

டோலடோ பல்கலைக்கழகத்தில் 1986ஆம் ஆண்டு பேராசிரியராகப் பணியில் சேர்ந்த நாகநாதன், பின்னர் இயந்திரவியல் பிரிவின் துறைத் தலைவராகி தற்போது கல்லூரியின் இடைக்காலத் தலைவராகியுள்ளார். திருச்சி நஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி கல்லூரியில் இளநிலைப் பொறியியல் பட்டம் பெற்ற நாகிநாகநாதன். 1979ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கு வந்தார். (த)


நாகி நாகநாதன்


இந்தியாவின் மும்பாய் நகரில் நேற்று கடும் மழை கொட்டியது. இதனால் அங்கு பல பகுதிகளில் நான்கு அடி உயரத்துக்கு மேல் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. கடும் மழை காரணமாக அங்கு மக்களின் இயல்பு வாழ்வும் பாதிக்கப்பட்டது. (த)

# ஸ்டாலினுக்கு புதிய பதவி

## பொருளாளர் பதவிக்குக் கடும் போட்டி

சென்னை, ஜூலை 12

தி.மு.க. கட்சியில் ஸ்டாலினுக்கு புதிய பதவி கிடைக்க இருப்பதால், தற்போது அவர் இருக்கும் பதவிக்குப் போட்டி ஏற்பட்டுள்ளது.


தி.மு.கவில் ஸ்டாலினுக்கு முதலில் பொதுச் செயலர் பதவி வழங்க தீர்மானிக்கப்பட்டது. ஆனால் நீண்டகால பொதுச் செயலரான அன்பழகன், தமது பதவியை விட்டுக்கொடுக்க முன்வரவில்லை. இதனால் ஆற்காடுவீராசாமி வசம் இருந்த பொருளாளர் பதவி, ஸ்டாலினுக்குக் கொடுக்கப்பட்டது.

தற்போது தி.மு.கவில் ஸ்டாலினுக்கு துணைத் தலைவர் அல்லது செயல் தலைவர் என்ற பதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அப்படி ஸ்டாலினுக்குப் புதிய பதவி வழங்கப்பட்டால் பொருளாளர் பதவியை தனக்கு வாங்கி விடுவது என்பதில் துணை பொதுச்செயலர் துரைமுருகன் குறியாக இருக்கிறார்.

ஆனால் திண்டுக்கல் ஐ.பெரியசாமியை சில மாவட்டச் செயலர்கள் முன்னிறுத்தியுள்ளார்கள். ஐ. பெரியசாமியும் தன்து மகனை மாவட்ட செயலராக்கி விட்டு மாநிலப் பொறுப்புக்குச் சென்றே தீருவேன் என்று சபதம் போட்டிருக்கிறார்.

அதேநேரத்தில் ஐ.பெரியசாமிக்கு இந்த பதவி கிடைக்கக் கூடாது என்று சில மாவட்ட செயலர்கள் பரப்புரையில் ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (த)


ஸ்டாலின்

## மக்களை பாதிக்கும் பட்ஜெட்

### மம்தா குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜூலை 12

சாதரண மக்களின் பார்வையிலிருந்து பார்க்கும்போது, இந்த பட்ஜெட்டில் தொலைநோக்குப் பார்வை, திட்டமிடல், செயற்படுத்துதல் எதுவும் இல்லை. இந்த பட்ஜெட் ஏழைகளை மேம்படுத்தவோ, வளர்ச்சியைத் தூண்டவோ போவதில்லை என மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

சாதரண மக்களின் பார்வையிலிருந்து பார்க்கும்போது, இந்த பட்ஜெட்டில் தொலைநோக்குப் பார்வை, திட்டமிடல், செயற்படுத்துதல் எதுவும் இல்லை. இந்த பட்ஜெட் ஏழைகளை மேம்படுத்தவோ, வளர்ச்சியைத் தூண்டவோ போவதில்லை.

சில்லறை வர்த்தகத்தில் ஏற்கெனவே நேரடி அந்நிய முதலீடு உள்ளது. தற்போது, பாதுகாப்பு, காப்பீடு துறைகளுக்கு விரிவு படுத்தப்பட்டுள்ளது.

மேலும், பொதுத்துறை வங்கிகளில் 49 சதவீத பங்கு விற்பனையும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவை நாட்டு மக்களை கடுமையாகப் பாதிக்கும். புதிய அரசானது, நேரடி அந்நிய முதலீட்டாளர்களால், நேரடி அந்நிய முத்லீட்டுக்காக, நேரடி அந்நிய முதலீட்டாளர்களே நடத்தும் அரசாக மாறியுள்ளது-என்றார் அவர். (த)

## பட்ஜெட்டில் பெரும்பாலும் வரவேற்கத்தக்க விடயங்கள்

### கருணாநிதி பாராட்டு

சென்னை, ஜூலை 12

மத்திய அரசின் பட்ஜெட்டில் பெரும்பாலும் வரவேற்கத்தக்க அம்சங்களே உள்ளன என்றுதி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

மத்திய அரசின் முதல் நிதி நிலை அறிக்கையை நிதியமைச்சர் அருண் ஜெட்லி தாக்கல் செய்துள்ளார். இந்த நிதி நிலை அறிக்கை, பொதுவாக வரவேற்கப்பட வேண்டிய பல அம்சங்களைஉள்ளடக்கியுள்ளது.

கிராமங்களில் விவசாய விளைபொருள்களைச்சேமித்துவைக்க குளிர்பதனகிடங்குகள்அமைக்க, ரூபா 5 ஆயிரம் கோடி ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது.

எதிர்பார்த்ததைப் போலவே சிகரெட் மீதான சுங்கவரி 11 சதவீதத்திலிருந்து 72 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

வீட்டுக் கடனுக்கான வரிச் சலுகை, ரூபா 1.5 லட்சத்திலிருந்து ரூபா 2 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

உழவர் சந்தை போல, விவசாயிகள்தங்கள் விளைபொருள்களை விற்பதற்கான சந்தைகள் நாடெங்கும் அமைக்கப்படும் என்றும், மாநில அரசுகள் அவ்வாறு உழவர் சந்தைகளை மேம்படுத்த ஊக்கம் தரப்படும் என்றும் நிதியமைச்சர் அறிவித்திருப்பது மகிழ்ச்சியானது. ஒட்டுமொத்தமாக மத்திய அரசின் இந்த நிதி நிலை அறிக்கையில் வரவேற்கத்தக்க அறிவிப்புகளே அதிகமாக உள்ளன-என்றுள்ளது. (த)

## ஏழைகளுக்குப் பட்ஜெட்டால பயன்கள் எதுவுமே இல்லை

### ஜி.கே. வாசன் குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை 12

மத்திய பட்ஜெட் ஏழைகளின் நலனைப் பிரதிபலிப்பதாக இல்லை என்று நெல்லையில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் குற்றஞ்சாட்டினார்.

இது குறித்து அவர் கூறுகையில்; தூத்துக்குடி வெளி துறைமுகத்துக்கு காங்கிரஸ் ஆட்சியில் வ.உ.சிதம்பரனார் பெயர் சூட்டப்பட்டு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பட்ஜெட்டில் துறைமுக வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கியிருப்பது மகிழ்ச்சியாக உள்ளது. இதற்கு காங்கிரஸ் கட்சி தான் அடித்தளமிட்டது.

துறைமுகங்களின் வளர்ச்சிக்கு நாங்கள் பெரும் முயற்சி எடுத்தோம். ரெயில்வே பட்ஜெட் பயனுள்ளதாக இல்லை. பல்வேறு பகுதிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளது. மத்திய பட்ஜெட் ஏழைகளின் நலனைப் பிரதிபலிப்பதாக இல்லை-என்றார். (த)

## பெங்களூர் மாநகராட்சியில் ஒரு எலி பிடிக்க ரூபா 10,000

சென்னை, ஜூலை 12

பெங்களூர் மாநகராட்சியில் 2013 ஆம் ஆண்டு எலிகளைப் பிடித்ததற்காக ரூபா 20 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் தெரியவந்துள்ளது.

குறிப்பாக மல்லேஸ்வரத்தில் உள்ள அரசு கட்டடம் ஒன்றில், 3 மாதங்களில் 20 எலிகளைப் பிடித்ததற்கு ரூபா 2 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. அதாவது, ஒரு எலி பிடிக்க ரூபா 10 ஆயிரம் செலவிடப் பட்டுள்ளது. இதில் ஊழல் நடை பெற்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

பெங்களூரில் உள்ள மல்லேஸ்வரம் பகுதியில் கர்நாடக மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் கிளை அலுவலகக் கட்டடம் உள்ளது. மாசுக் கட்டுப்பாட்டுச் சபைக்கு ஒருங்கிணைந்த புதிய அலுவலகம் சாந்தி நகரில் கட்டப்பட்டுள்ளதால், இந்தக் கட்டடம் கடந்த 2 ஆண்டுகளாக காலியாக உள்ளது.

இதையடுத்து பெங்களூர் மாநகராட்சி சார்பில் நடத்தப்படும் போலியோ, தடுப்பூசி உள்ளிட்ட சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு இந்தக் கட்டடம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தக் கட்டடத்தில் எலிகளின் தொல்லை அதிக அளவில் இருந்தது.

தடுப்பூசி போடுவதற்காக வரும் குழந்தைகளை எலிகள் கடித்த சம்பவங்கள் நடந்துள்ளன. அங்கு வைக்கப்பட்டிருந்த மருந்துகளையும் எலிகள் சேதப்படுத்தின. இதனால் அந்தக் கட்டடத்தில் உள்ள எலிகளைப் பிடிக்க மாநகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

இந்நிலையில், பெங்களூர் மாநகராட்சி அதிகாரிகள், அந்தக் கட்டடத்தில் இதுவரை எத்தனை எலிகளைப் பிடித்துள்ளனர் என்பதை அறிந்துகொள்ள தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மல்லேஸ்வரம் பகுதியின் கவுன்சிலர் என்.ஆர். ரமேஷ் மனு அளித்தார்.

அது தொடர்பாக புதன்கிழமை அவருக்கு கடிதம் அனுப்பப் பட்டது. அதில், எலிகளைப் பிடித்ததில் பெங்களூர் மாநகராட்சி அதிகாரிகள் ஊழல் செய்திருப்பது தெரியவந்துள்ளது. (த)

## மணிவிழா வாழ்த்துச் செய்தி



மணிவிழா மலர்க்குழுவின் வேண்டுதலை ஒட்டி இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.
தேர்தலில் நிற்குமாறு தமிழ்த் தேசிய முன்னணியினர் ஏகமனதாக வேண்டுகோள் விடுத்து, அதனை ஏற்று, நான் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்தபோது உதயன் விடுதியில் எனக்கு தங்குவதற்கு வசதி செய்து தந்த கௌரவ ஈ.சரவணபவனை மறக்க முடியாது. அவரது தொழில் அரசியலுக்கும் அனுசரணையாக அமைந்துள்ளதை நாம் அவதானிக்கலாம். தமது அறுபதாவது அகவை முடிவின்போது தொழிற்றுறையிலும் அரசியலிலும் முன்னணியில் அவர் நிற்பதை அவதானிக்கின்றோம். அவர் மேன்மேலும் மக்கள் சேவையில் திளைத்திருக்க, வெற்றி பெற, இறைவனை வேண்டுகின்றேன்.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
*முதலமைச்சர், வட மாகாண சபை, யாழ்ப்பாணம்.*

## தளராது சமராடும் வீரர்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்,உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநருமான ஈ.சரவணபவன் எனக்கு நீண்டகாலமாகத் தெரிந்தவர். அவரது மணி விழாவை ஒட்டி இந்தச் செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஊக்கமும், விடாமுயற்சியும், கடும் உழைப்பும்மிக்க ஒருவராகவே அவர் எப்போதும் என் மனதில் தோன்றுகின்றார். தன்னுடைய எத்தனங்களினால் வெற்றியீட்டுவதற்காகத் தளராது சமராடும் ஒரு வீரராக அவரைப் பார்க்கின்றேன். உண்மையில் அப்படி அவர் ஜெயம் பெற்றுமிருக்கின்றார்.
நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் தனது மக்களுக்கான நிறைவான சேவையையும் முழு திருப்தி தரும் வகையில் மிகுந்த கவனிப்புடனும் அக்கறையுடனும் அவர் மேற்கொண்டு வந்துள்ளார். அந்தப் பணியைத் திடசங்கற்பம் மற்றும் பற்றுறுதியுடன் அவர் நிறைவு செய்து வருகிறார் என்பது வெளிப்படையானது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் என்ற முறையில் அதனைச் சாதுரியமாக நிர்வகிப்பதில் அவர் முகம் கொடுக்கும் சவால்கள் மிகக் கடினமானவை, சிக்கலானவை, தேர்ந்த வல்லமையுடன் எதிர்கொள்ள வேண்டியவை.
பத்திரிகையாளர் மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் மீதான நேரடித் தாக்குதல்கள் உட்பட ஊடக சுதந்திரத்துக்கு எதிரான அடக்குமுறை எல்லையில்லாமல் தலைவிரித்தாடும் ஒரு சூழலுக்கு மத்தியில் தனது சுயாதீனம் என்ற தனித்துவத்தை விட்டுக்கொடாமல் தொடர்ந்து வெற்றிகரமாகப் பேணியபடி ஒரு பத்திரிகையை நடுநிலை தவறாது கொண்டு நடத்துவது என்பது ஓர் இமாலய சாதனையன்றி வேறில்லை. அச்சமின்றி, திடசங்கற்பத்துடன் செயற்படும் தனது ஆசிரிய பீடத்தவர்களின் ஒத்துழைப்புடன் அந்தப் பணியை அவர் செவ்வனே ஆற்றி வருகின்றார். அதனை நிரூபித்து ஊர்ஜிதப்படுத்தும் வகையில்தான் உதயனுக்கு பல சர்வதேச விருதுகளும் அங்கீகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. வழங்கப்பட்டும் வருகின்றன. எப்போதும் மனதுக்கு இனியவராகவும், பண்புள்ளவராகவும் பழகுபவர் சரவணபவன். அவரது துணைவியார் யசோதையும் மகள் லக்ஷ்மியும் எப்போதும் அவருக்கு உத்வேகம் தரும் வலிமையான அன்புறவுகள். எதிர்காலத்திலும் சரவணபவனும் அவரது குடும்பத்தவர்களும் மேலும் சிறப்புற எனது வாழ்த்துக்கள்.

**இரா.சம்பந்தன்,**
*நாடாளுமன்ற உறுப்பினர் – திருகோணமலை,*
*தலைவர் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு*

## மக்கள் மனம் நிறைந்த நாளிதழின் நாயகனுக்கு ஆசிகள்



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ் என்று அழைக்கப்படும் உதயன் நாளிதழின் முகாமையாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஈ.சரவணபவன் அவர்களின் 60ஆவது மணி விழாவில் நானும் ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். இலங்கைத் தமிழ் மக்களின் சோகம் நிறைந்த வரலாற்றுடன் உதயனும் பங்கெடுத்திருக்கின்றது. அன்றாடச் செய்திகளை உடனுக்குடனே நடு நிலையில் நின்று உண்மைக்குச் சான்று பகர்ந்து, செய்திகளைப் பிரசுரிக்கும் நாளிதழ்களின் வரிசையில் உதயன் பத்திரிகை மூலம் தனது திறமையைக் கொண்டு சிறந்த பணிப்பாளராக ஈ.சரவணபவன் அவர்கள் திகழ்வது மட்டுமன்றி நாடாளுமன்ற உறுப்பினராகத் தனது சேவையை நாட்டுக்கும், சமூகத்துக்கும் ஆற்றிவருகின்றார் என்பது யாவரும் அறிந்த உண்மை.
மனித வாழ்க்கையில் அகவை 60ஐ அடைவதற்கு இறைவன் இவருக்கு ஆசி வழங்கியுள்ளார். இவருடைய சமூக சேவைகளையும், நற்பணிகளையும் நாம் அறிவோம். இந்த மணிவிழா நாயகன் இன்றுபோல் என்றும் நலமுடன் வாழவும் அவருடைய பணி சிறப்பாகத் தொடரவும் உடல், உள நலம்பெற்று வாழவும் இறையாசீர் கூறி நிற்கின்றேன்.

**பேரருட்திரு. இ.தோமஸ் சவுந்தரநாயகம்**
யாழ். ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## தமிழர்களின் தலைநிமிர் கழகத்தின் முத்து



பல சைவப் பெரியவர்களின் கூட்டு முயற்சியினால் தோற்றம்பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சைவத் தமிழர்களின் உயர்கல்வி நிலையமாக நூற்றாண்டு கடந்தும் ஒளிவீசிப் பிரகாசித்துக் கொண் டிருக்கிறது. இந்தக் கல்லூரி உருவாக்கிய மாணவர்கள் பலர் ஈழத்தில் மாத்திரமல்லாது புலம்பெயர் நாடுகளிலும் உயர் பதவிகளில் இருந்து சிறப்பாகப் பணியாற்றி வருகின்றார்கள்.
ஈழத்தில் தமிழ் மக்களின் அவலமான சூழ்நிலையில் தமிழ் மக்களின் குரலாக மக்கள் பட்ட துன்பங்களை வெளிப்படுத்தும் ஊடகமாக உதயன் பத்திரிகை மிளிர்ந்தது. கடந்த காலத்தில் உதயன் பத்திரிகைக்குப் பல சோதனைகளும் வேதனைகளும் ஏற்பட்டன. இவற்றையெல்லாம் படிப்பினையாக ஏற்று சாதனைகள் பல புரியும் பத்திரிகையாக உதயன் மிளிர்வதற்கு நிர்வாக இயக்குநர் சரவணபவனின் மனப் பலமும் ஆன்மிகப் பலமுமே காரணம். ஈ.சரவணபவனிடம் இருந்த சமய உணர்வுக்கும் தான் கற்ற பாடசாலை மீது கொண்டிருந்த பற்றுக்கும் மாணவர் நலனில் இருந்த அக்கறைக்கும் பல உதாரணங்களை எடுத்துக் காட்ட இயலும்.
இந்துக் கல்லூரியின் வளாகத்தின் உள்ளே கூடைப் பந்தாட்டம் ஆடுவதற்கான திடலை சகல வசதிகளுடனும் அமைத் துக்கொடுத்தார். தன்னை வளாத்துவிட்ட



# மணிவிழா நாயகன்

அறிவாலயத்தின் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டு இன்றும் செயற்பட்டு வருகின்றார். பத்திரிகை இயக்குநராக, நாடாளுமன்ற உறுப்பினராக பலவகைகளில் சமூகப் பணியாற்றி மணிவிழாக் காணும் அன்பர் சரவணபவன் உடல் ஆரோக்கியமாகவும் உறுதியான ஆயுள் பலத்தோடும் சகல செல்வயோக மிக்க பெருவாழ்வு பெற்று நிறைவாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

**சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்**

## அருளாசிச் செய்தி



சூரிய பகவானின் பெயரில் உதயன் நாளிதழாக மலர்ந்து, தினமும் நாம் ஆவ லோடு பார்க்கின்ற பத்திரிகையாக அதனை வளர்த்தெடுத்து, அதன் நிர்வாக இயக்குநராக விளங்குகின்ற எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய ஈஸ்வர பாதம் சரவணபவன் அவர்கள் மணி விழாக் காண்பதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம். ஊடகத்துறையில் சிறந்து விளங்கும் பத்திரிகையாகிய உதயன் நாளிதழின் இயக்குநரின் மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு இறும்பூதெய்துகின்றோம்.
சரவணபவன் அவர்கள் எங்களது ஆதீனத்துடன் நெருங்கிய தொடர்புடையவர். எமது ஆன்மிகப் பணிக்கும் சமுதாயப் பணிக்கும் உறுதுணையாக உதவி வருபவர். அவரது நல்லெண்ணமும் பரந்த நோக்கமும் சமூக அபிவிருத்திக்கும் கல்வி வளர்ச்சிக்கும் உதவும் மனப்பாங்கும் பாராட்டப்படவேண்டிய சிறப்பம்சங்களாகும்.
அவருடைய அறப்பணி மேன்மேலும் வளர்ந்து சிறப்புடன் திகழ்வதோடு ஊடகப் பணியும் சமூக, கல்விப் பணியும் மேலோங்கி இன்னும் பல அபிவிருத்திக்கு ஆணிவேராக நிற்கவேண்டும் என்று வேண்டி அருளாசிகள் நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.
"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன குருமுதல்வர்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**, இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

## வாழ்ந்து வளம் பெறுக பல்லாண்டு

அறுபதாவது அகவையில்
அகலக்கால் பதிக்கும்
அவைமன்றத் தலைவர்
அனைத்து மக்கள் தேவையை
அறிந்து சேவையாற்றுபவர்
அரசியல் பிரமுகராக
அறிமுகமான அறிவுடையவர்
ஈ.சரவணபவன் என்பதை
எடுத்தியம்பி இன்னும் அவர்
எம்மத்தியில் பல்லாண்டு காலம்
வாழ்ந்து வளம் பல பெற
வாழ்த்துகின்றேன்
அவரின் காத்திரமான சேவை வளரவும்
பிரார்த்திக்கின்றேன். இறைவனை!

**மௌலவி அல்ஹாஜ் ஏ.எம்.ஏ.அஸீஸ் (காஸிமி)**
யாழ்/கிளி.மாவட்ட உலாமா சபைத் தலைவர்



# மனித இரத்தத்தை சுவைத்துக் குடிக்கும் சீன நாட்டு மக்கள்

சீன மக்களிடையே மனித இரத்த பானம் அருந்தும் பழக்கம் அறிமுகமாகியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பல உணவு வகைகளையும், குளிர்பானங்களையும் தயாரிக்கும் சீனாவில் தற்போது அறிமுகமாகியுள்ள மனித இரத்த பானம், அந்நாட்டு மக்களிடம் அதிக கவனத்தைப் பெற்றுள்ளது. இவை நகரின் வணிக சந்தைகளில் பைகளில் நிரப்பப்பட்டு விற்கப்படுகின்றன.

இதுகுறித்து இரத்த பானம் சுவைக்கும் ஆர்வலர்கள் கூறுகையில்: குறிப்பாக ஏ.பி.ஓ அல்லது ஏபி என்ற மனித இரத்த வகை பானம் அதிக சுவையைக் கொண்டுள்ளது என்றும் இது வித்தியாசமாக இருக்கின்றது என்றும் கூறியுள்ளனர்.

மேலும், சீனாவின் இரத்தபான பைகள் முதன்முதலாக லியோனிங் மாகாணத்தில் தான் விற்பனைக்கு வந்துள்ளன.

# வானத்திலிருந்து வெளிவரும் அதியுயர் ஆற்றல்மிக்க கொஸ்மிக் கதிர்க் கற்றை கண்டுபிடிப்பு

உடா பாலைவனத்திலுள்ள பெரிய தொலைநோக்கியின் மூலம் வானத்திலிருந்து வரும் அதிஉயர் ஆற்றல்மிக்க ØIVÜ I Å|(cosmic) கதிர்க் கற்றை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கதிர்கள் எவ்வாறு உருவாகின்றன என்பது கண்டுபிடிக்கப்பட வில்லை. எனினும், இவை அதிக சக்தி கொண்ட துகள்களிலிருந்து உருவாகின்றன என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

உடா பாலைவனப் பகுதியில் 300 சதுர மைல் விசாலம் கொண்ட அரே (array) என்றதொலைகாட்டியைக் கொண்டு 5 வருடங்களாக ஒரு லட்சம் நிகழ்வுகளை அவதானித்து அவற்றுள் 72 தடவைகள் இத்தகைய கொஸ்மிக்கதிர்களை இனங்கண்டுள்ளனர்.

**இந்தக் கதிர்கள் எவ்வாறு உருவாகின்றது என்பது கண்டு பிடிக்கப்படவில்லை. எனினும், இவை அதிக சக்தி கொண்ட துகள்களிலிருந்து உருவாகின்றன என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.**



# ஊடுபுகவிடும் சுவர்

தென்கொரியாவைச் சேர்ந்த பேராசிரியர் வோகுன் லீ தலைமையிலான ஆராய்ச்சிக் குழுவினர் சமீபத்தில் 'ஊடுபுகவிடும் சுவரை' (Transwall) கண்டுபிடித்துள்ளனர். இந்தச் சுவரின் மூலம் ஒரு புறத்திலிருந்து மறுபக்கம் இருப்பவர்களைக் காணமுடிவதுடன் தொட்டு உணரக்கூடிய தன்மையும் உடையதாக விளங்குகிறது. அத்துடன் ஒலியையும் ஊடுபுகவிடும் என்பதால் மறுபுறத்தில் இருப்பவருடன் பேசவும் முடிகிறது.



இது குறித்து லீ கூறுகையில்: சுப்பர்மார்க்கெட், அருங்காட்சியகங்கள், பூங்காக்கள் போன்ற இடங்களில் இதனை நிறுவுவதன் மூலம் மக்கள் இயல்பான வழியில் மற்றவர்களுடன் தொடர்பை அனுபவிக்க முடியும். மேலும் உயர்பாதுகாப்பு மற்றும் கிருமிகளிடம் இருந்து நோயாளர்களைப் பாதுகாப்பதற்காக இந்தக் கண்டுபிடிப்பைப் பயன்படுத்த முடியும் என்று கூறினார்.







மணிவிழா வாழ்த்து
எங்கள் வணிகத்திற்கு
ஊடகப்பங்காளன்
ஏழை மக்களின் வாழ்வின்
துன்பதுயரம் பகிரும்
உறவுப்பங்காளன்
இளைஞர்களின் எதிர்காலத்துக்கு
உதவும் நம்பிக்கைப்பங்காளன்
தமிழ்த்தேசத்திற்காக நேசம் பகரும்
பாசப்பங்காளன்
Best wishes
நூற்றாண்டு விழாக்காண வாழ்த்தும்
தலைவர்,
உறுப்பினர்கள்,
இயக்குநர்சபை
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்,
175, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 9016 / 021 568 9090
506 B, Hampton street,
Malborne, Australia
(C/13875)(5.6.3)

## வவுனியா இந்து இல்லங்களுக்கு நிதியுதவிகள்

வவுனியா.ஜூலை 12
இந்து சிறுவர், முதியோர் இல்லங்களுக்கு இந்து சமய கலாசார திணைக்களத்தால் நிதி உதவிகள் வழங்கப்பட்டன. வவுனியா பிரதேச செயலர் பிரிவிலுள்ள இரண்டு இந்து சிறுவர் இல்லங்களுக்கும், இந்து முதியோர் இல்லம் ஒன்றுக்கும் இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகத்துக்கு நான்கு லட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபாவும், வவுனியா வேப்பங்குளம் இந்து அன்பகம் சிறுவர் இல்லத்துக்கு ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 500 ரூபாவும், வவுனியா முருகனூர் சிவன் முதியோர் இல்லத்துக்கு 3 லட்சத்து 87 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன. (க-402)



வவுனிக்குளம் பாலிநகர் மகா வித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாரூக் சாதனை படைத்த மாணவியொருவருக்குப் பதக்கம் சூட்டுகின்றார். (க-18-402)

## வீதியைச் சேதமாக்குபவரே புனரமைத்து தர வேண்டும்

### ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன்




வவுனியா.ஜூலை 12
வவுனியா மாவட்டத்தில் காணப்படும் கல்குவாரிகளுக்குச் சொந்தமான வாகனங்களால் வீதிகள் பழுதடைந்தால் அவற்றைப் புனரமைத்து வழங்குவதும் அந்த வாகனங்களைப் பயன்படுத்துவோரின் பொறுப்பாகும் என வர்த்தகம் மற்றும் கைத்தொழில், வணிகத் துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றபோது அங்கு அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் செயலாளரிடம் விளக்கம் கேட்டபோது:

முன்னர் வவுனியாவில் 34 கல்குவாரிகள் இருந்தன. ஆனால் 8 மட்டுமே தற்போது இயங்குகின்றன. இவை எம் மால் கண்காணிக்கப்படுகின் றன என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த மக்கள் பிரதிநிதிகள் கல்குவாரிக்கு பெரும் டிப்பர் வாகனங்கள் கற்களை ஏற்றிச் செல்லும் போது வாகனத்தின் நிறை அதிகமாகவுள்ளதால் வீதிகள் பழுதடைகின்றன எனத் தெரிவித்தனர். (க-402)

## இராணுவ தேவைக்கென சுவீகரித்த காணிகள்; இதுவரை 30 முறைப்பாடுகள்

### வவுனியா உதவிப் பிரதேச செயலர் தகவல்

வவுனியா.ஜூலை 12
வவுனியா மாவட்டத்தில் இராணுவ தேவைக்கென சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பாக 30 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக வவுனியா உதவிப் பிரதேச செயலர் திருமதி சாரதாஞ்சலி கர்ணன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை காணி சுவீகரிப்பு உத்தியோகத்தருக்கு மேலதிக நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதுவரை வவுனியா மாவட்டத்தில் பல தனியார் மற்றும் அரச காணிகள் இராணுவத் தேவை களுக்கென சுவீகரிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் வவுனியா நகரில் பொலிஸ் நிலையத்தின் பாவனைக்கென 0.25 ஏக்கர் நிலமும், பூங்கா வீதியில் நெல் சந்தைப் படுத்தும் சபைக்குரிய இடத்தில் விசேட அதிரடிப் படைக்காக 1.5 ஏக்கர் நிலமும், பட்டாணிச்சூர் புளியங்குளத்தில் 2 ஏக்கர் தனியார் காணி இராணுவத் தேவைக்காகவும், மூன்றுமுறிப்பு கிராம சேவகர் பிரிவில் இராணுவ நலன்புரி நிலையத்துக்கென 0.25 ஏக்கர் நிலமும் இவற்றைவிட இராணுவ மற்றும் விமானப் படைத் தலைமைப் பீடத்துக்கென 240 ஏக்கர்களும், இதைவிட மேலுமொரு படைப்பிரிவுக்கென 38 ஏக்கர்கள் காணியும் சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கென 28 ஏக்கர்கள் நிலமும் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்கசர் அலுவலகத்துக்கென சுவீகரிக்கப்பட்ட காணிக்கென சிலருக்கு நட்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது. சிலர் அதனைப் பெறவில்லை.

வவுனியா வடக்கு கிராம சேவகர் பிரிவில் கலாசார மண்டபம் ஒன்று இராணுவத்தால் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கென 0.5 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பேயாடிக் கூழாங்குளத்தில் 56 ஆவது படையணிக்கென 6 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டுள்ளது. காத்தார் சின்னக் குளம் கிராமத்தில் விஜயபாகு படைப்பிரிவுக்கென 4 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)










## பிறரைத் தாக்கிய குற்றத்தில் மூவருக்கு மறியல்

தென்மராட்சி, ஜூலை 12
வெவ்வேறு இடங்களில் பிறரைக் கையாலும் காலாலும் தாக்கிக் காயப்படுத்திய பெண் உட்பட மூவரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது. பிறரைத் தாக்கிக் காயப்படுத்தியதாக சாவகச்சேரி பொலிஸாரால் இரு வழக்குகளும் கொடிகாமம் பொலிஸாரால் ஒரு வழக்கும் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட பெண் உட்பட மூன்று பேரையும் நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிவான் அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-9)

## கீரிமலை - மாவிட்டபுரம் வரையான 2 கி.மீ. தூரத்துக்கு வீதி விளக்குகள்

### ஆடி அமாவாசையை முன்னிட்டு

வலி.வடக்கு, ஜூலை 12
ஆடி அமாவசை தினத்துக்கு கீரிமலை செல்லும் அடியார்களின் நன்மை கருதி கீரிமலை மாவிட்டபுரம் வரையான சுமார் இரண்டு கிலோ மீற்றர் வரையான வீதிக்கு வலி.வடக்கு பிரதேச சபையால் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.
வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய திருவிழா உற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் குறிப் பிட்ட வீதிக்கு அடியவர்களின் நன்மை கருதி வீதி விளக்குகள் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பிரதேச சபைக்கு விடுக்கப்பட்டிருந்தது.
இது தொடர்பாக சபையின் தவிசாளருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்துள்ளார்.
குறித்த வீதிக்கும் மற்றும் அதை அண்மித்ததாகவுள்ள நெசவுசாலை வீதிக்கும் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும், இந்த நடவடிக்கைக்குச் சபையின் நிதியில் இருந்து சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா வரையில் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-86)

## உடுப்பிட்டி மதுபான விடுதியை அகற்றுமாறு மீண்டும் தீர்மானம்

வடமராட்சி, ஜூலை 12
உடுப்பிட்டிப் பகுதியில் அமைந்துள்ள மதுபான விற்பனை விடுதியை அந்தப் பகுதியில் இருந்த அகற்ற வேண்டும் என கரவெட்டிப் பிரதேச சபையில் மீண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
கரவெட்டிப் பிரதேசசபை பொதுக்கூட்டம் சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்றபோது ஆளும் தரப்பைச் சேர்ந்த உறுப்பினர் பொ.வியாகேசு இந்தத் தீர்மானத்துக்கான பிரேரணையை முன்மொழிய, எதிரணி உறுப்பினரான அ.சந்திரசேகரம் வழிமொழிந்தார்.
குறித்த விடுதியினால் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் சண்டைகள், சச்சரவுகள் நடைபெறுகின்றன. அந்த வீதியால் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகள் சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர். இதன் காரணமாக குறிப்பிட்ட விடுதியை அந்தப் பகுதியில் இருந்து அகற்றுவதற்கு பிரதேச செயலகத்துக்கு அறிவுறுத்த வேண்டும் என்று இந்தப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதே தீர்மானம் கடந்த ஆண்டு நடைபெற்ற சபைக் கூட்டத்தில் உறுப்பினர்கள் ஆக்ரோஷமான உரைக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டிருந்தும் அது தொடர்பாக கரவெட்டி பிரதேசசபை எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அது தீர்மானத்துடனேயே நின்றுவிட்டது.
நெல்லியடிச்சந்தி, மாலிசந்தி, குஞ்சர்கடைச்சந்தி, கலிகைச் சந்தி ஆகிய சந்திகளுக்கு வீதி விளக்குகளைப் பொருத்துவது அவசியம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (வ-173)

## ஆசிரியர்களுக்கான நடமாடும் மருத்துவ முகாம்



கரணவாய், ஜூலை 12
பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் நலன் கருதி பருத்தித்துறை ஆதார மருத்துவமனை நடமாடும் மருத்துவப் பிரிவினரால் இலவச மருத்துவ முகாம் ஒன்று நேற்றுமுன்தினம் வடமராட்சி வலயப் பாடசாலைகளில் இடம்பெற்றது.
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி எஸ்.விநோதன் தலைமையில் வந்த இந்தக் குழுவினர் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம், கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் இந்த மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டனர்.
நீரிழிவு, உயர்குருதியமுக்கம், உடற்திணிவுச் சுட்டி உட்பட பல்வேறு பரிசோதனைகள் இடம்பெற்றன. இதில் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் உட்படப் பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-108)

## 10,037 குழந்தைகள் கடந்த வருடம் பிறந்தன

### யாழ்.மாவட்டத்தில் மட்டும்

குருநகர், ஜூலை 12
2013 காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் 10 ஆயிரத்து 37 குழந்தைகள் பிறந்துள்ளன என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையால் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களில் இருந்து அறிய வந்துள்ளது. அவற்றில் 88 குழந்தைகள் பிறந்தவுடனேயே உயிரிழந்தன. தற்போது 9 ஆயிரத்து 949 குழந்தைகள் உயிர் வாழ்கின்றன என்று இந்தப் புள்ளி விவரம் மேலும் தெரிவித்துள்ளது.
யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் இயங்கும் மருத்துவமனைகளில் உள்ள 26 மகப்பேற்று மருத்துவர்கள் மகப்பேற்றுப் பிரிவுகளில் 2 ஆயிரத்து 682 குழந்தைகள் பிறந்துள்ளன. இவற்றில் 14 குழந்தைகள் பிறக்கும்போது இறந்து 2ஆயிரத்து 668 குழந்தைகள் உயிருடனுள்ளன.
யாழ்.போதனா மருத்துவமனையின் மகப்பேற்றுப் பிரிவில் 6 ஆயிரத்து 907 குழந்தைகள் பிறந்தன.
இவற்றில் 72 குழந்தைகள் பிறந்தவுடனேயே இறந்துவிட்டன. தற்போது 6 ஆயிரத்து 835 குழந்தைகள் உயிர் வாழ்கின்றன.
யாழ்.மாவட்டத்தில் இயங்கும் தனியார் வைத்திய நிலையங்களின் மகப்பேற்றுப் பிரிவில் 437 குழந்தைகள் பிறந்த போதிலும் 2 குழந்தைகள் உயிரிழந்து தற்போது 435 குழந்தைகளே உயிர் வாழ்கின்றன.
அதேவேளை 2013 காலப் பகுதியில் வீடுகளில் 11 குழந்தைகள் பிறந்து அவை அனைத்தும் உயிருடனுள்ளன என்று இந்தப் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-51)












உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காஸா மீதான தாக்குதலை இஸ்ரேல் நிறுத்தவேண்டும்

காஸாவில் இஸ்ரேல் விமானப்படைகள் நடத்தும் குண்டு வீச்சுகள், பதிலடியாக ஹமாஸ் இஸ்ரேலின் பிரதான நகரங்களை நோக்கி நடத்தும் ரொக்கட் தாக்குதல்கள் காரணமாக மத்திய கிழக்கில் மீண்டும் போர் அபாயம் உருவாகியுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து காஸாவில் உள்ள ஹமாஸின் நிலைகள் மீது இஸ்ரேல் 700க்கும் மேற்பட்ட தடவைகள் தாக்குதல்களை நடத்தியதுடன் அதன் தரைப் படைகள் காஸாவுக்குள் எந்நேரமும் நுழையலாம் என்று மத்திய கிழக்குச் செய்திகள் தெரிவிக்கின்றன. இஸ்ரேலின் 20 ஆயிரம் ரிசேர்வ் படைகள் காஸா எல்லைக்கு நகர்த்தப்பட்டுள்ளன. 40 ஆயிரம் ரிசர்வ் படைகளைத் திரட்ட இஸ்ரேல் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிவிட்டது.

ஆகவே, இந்தப் பேராபத்திலிருந்து, இஸ்ரேலின் ஆக்கிரமிப்பிலிருந்து பலஸ்தீன மக்களைப் பாதுகாக்க சர்வதேச சமூகம் முன்வர வேண்டும். இஸ்ரேலின் படை நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த சர்வதேச சமூகம் தவறுமானால் 2009ஆம் ஆண்டு இடம்பெற்றமை போன்ற பேரழிவைத் தடுக்க முடியாது போய்விடும். 2009 இல் இஸ்ரேல் படைகள் காஸாவுக்குள் ஊடுருவி நடத்திய தாக்குதலில் 1,400க்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் அப்பாவிப் பொதுமக்கள். 300 பேர் குழந்தைகள். அப்பட்டமான போர்க்குற்றம் இது. இந்தப் படுகொலைகளைத் தடுக்க மேற்கு நாடுகள் அப்போது முன்வரவில்லை. இஸ்ரேல் யுத்தக் குற்றமிழைத்ததற்கான ஆதாரங்கள் இருப்பதாக பின்னர் நடைபெற்ற விசாரணையின்போது ஐ.நா. விசாரணை ஆணைக்குழு தெரிவித்திருந்த போதிலும் அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக இரண்டு வருடங்களின் பின்பு குற்றச்சாட்டு திரும்பப் பெறப்பட்டது. உலகிலேயே குற்றம் இழைத்துவிட்டு தண்டனைகளையோ தடைகளையோ எதிர்நோக்காத ஒரே நாடு இஸ்ரேல்தான்.

மத்திய கிழக்கில் தற்பொழுது உருவாகியிருக்கும் புதிய நெருக்கடிக்கு பலஸ்தீன அதிகாரசபைக்கு உட்பட்ட மேற்குக் கரையில் மூன்று இஸ்ரேல் இளைஞர்கள் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவமே காரணம் என்று கூறப்படுகிறது. இதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக 16 வயது பலஸ்தீன இளைஞர் ஒருவர் யூதர்களால் கடத்தப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்டார். இதனையடுத்து இஸ்ரேல் படைகள் மேற்குக் கரையில் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது 600க்கு மேற்பட்ட பலஸ்தீனர்கள் கைதுசெய்யப்பட்டனர். இதற்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில் ஹமாஸ் நடத்திய ரொக்கட் தாக்குதல்களை யடுத்து, பலஸ்தீன அதிகாரசபைக்கு உட்பட்ட மற்றொரு பகுதியான காஸா இஸ்ரேல் படைகளின் முற்றுகைக்கு உள்ளாகியிருக்கிறது. இஸ்ரேல் படைகளின் முற்றுகை காரணமாக உலகிலேயே பெரிய சிறைக்கூடமாக காஸா மாறி உள்ளது.

இஸ்ரேலின் எதேச்சாதிகார நடவடிக்கைகளைத் தட்டிக் கேட்கும் நிலையில் இன்று அரபு நாடுகள் இல்லை. அரபு வசந்தம் காரணமாக பெரும்பாலான அரபு நாடுகள் பலவீனமடைந்துவிட்டன. அல்லது அமெரிக்காவின் கைப்பொம்மையாக மாறிவிட்டன. 2012 ஆம் ஆண்டு காஸா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியபோது எகிப்தில் அப்பொழுது ஜனாதிபதியாக இருந்த மொஹமட் மூர்சி பலஸ்தீனர்கள் காஸாவில் இருந்து பாதுகாப்பாக வெளியேறுவதற்கு எகிப்தின் ரபாஹ் எல்லையைத் திறந்துவிட்டார். ஆனால் இன்று எகிப்தின் சிசி அரசு அமெரிக்காவைப் பகைத்துக்கொண்டு காஸாவிலுள்ள பலஸ்தீனர்களுக்கு உதவும் நிலையில் இல்லை. காஸாவிலுள்ள பலஸ்தீன மக்களுக்கு இது பெரும் பின்னடைவு.

காலத்துக்குக் காலம் தாக்குதல்களை நடத்தி மேற்குக் கரையையும் காஸாவையும் பலவீனப்படுத்துவதே இஸ்ரேலின் திட்டம். மேற்குக் கரையில் மூன்று இஸ்ரேல் இளைஞர்கள் கொலைசெய்யப்பட்டமை தாக்குதல் நடத்துவதற்கு இஸ்ரேலுக்கு வாய்ப்பாகிவிட்டது. இஸ்ரேலின் தாக்குதல்கள், மத்திய கிழக்குத் தொடர்பான சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிக்கும் ஒபாமா நிர்வாகத்தின் முயற்சிக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

**பல தசாப்தங்களாக நீடிக்கும் மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண ஐ.நாவும் உலக நாடுகளும் தவறிவிட்டன. காஸாப் படுகொலைகளையாவது தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.**

# சந்திரிகாவின் துணிச்சல் கிடையாது மஹிந்தவுக்கு

## அன்று கிறிஸ்தவர்களுக்கு பிரச்சினை இன்று முஸ்லிம்களுக்கு நெருக்கடி

சிங்கள மூலம் : மவ்பிம
தமிழில் : வீஎஸ்ரீ

2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரணிலின் தலைமையிலான அரசு பதவி வகித்த வேளையில் சோம தேரரின் திடீர் மரணம் நாட்டில் குழப்பகரமான சூழல் ஒன்றை ஏற்படுத்தி வைத்தது. சோமதேரர் ரஷ்யாவில் சுகவீனமுற்றதன் காரணமாக உயிரிழக்கவில்லை; அவர் கொலை செய்யப்பட்டார் என நாட்டுப்பற்றாளர்கள் சந்தேகம் தெரிவித்ததன் காரணமாக நாட்டின் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது திட்டமிட்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வேளையில் நாட்டின் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா, பிரதமர் ரணிலிடமிருந்து பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்களைத் தம் வசம் எடுத்துக் கொண்டிருந்தார். கிறிஸ்தவ தேவாலயங்கள் தாக்கப்படுவது குறித்து கிறிஸ்தவ மத குருமார் பிரதமரான ரணிலிடமும், ஜனாதிபதியான சந்திரிகாவிடமும் தனித்தனியே முறையிட்டு வந்தனர். ரணிலின் அரசில் அங்கம் வகித்த கிறிஸ்தவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிலைமையைச் சீர்செய்யுமாறு ரணிலை வற்புறுத்தி வந்தனர். ஆனால் ரணில் நிலைமை குறித்து அக்கறை காட்டாது பாதுகாப்பு அமைச்சின் பொறுப்புக்களை ஜனாதிபதி சந்திரிகா வசம் எடுத்துக் கொண்டதால் தம்மால் அந்த விடயத்தில் எதுவும் செய்ய இயலாதுள்ளதாகக் காரணம் கற்பித்துக் கொண்டார்.

அந்தவேளையில் ரணில், இன்று மஹிந்த இருக்கும் நிலையிலேயே இருக்க நேர்ந்தது. ஆயினும் அந்த வேளை ரணிலின் அந்த நிலைமைக்கு நியாயமான காரணமும் இருந்தது. அந்தவேளையில் ரணில் ஒரு கிறிஸ்தவ மதப் பின்னணி கொண்டவராகச் சித்திரிக்கப்பட்டு வந்தார். ரணில் பிறப்பால் ஒரு கிறிஸ்தவர் என விமல் வீரவன்ஸவின் ஜே.வி.பி. மட்டுமன்றி சுதந்திரக் கட்சி உயர் மட்டத் தலைவர்களும் ரணிலை விமர்சித்து வந்தனர். ரணில் கிறிஸ்தவ தேவாலயத்தால் ஞானஸ்தானம் வழங்கப்பட்ட ஒருவர் என்றுகூட அவர்கள் நாடு முழுவதும் பரப்புரை மேற்கொண்டிருந்தனர். ஆதலால் கிறிஸ்தவ தேவாலயங்கள் தாக்கப்பட்டுவரும் விடயத்தில் தலையிட்டு, தமது கைகளைச் சுட்டுக்கொள்ள நேரிடக் கூடுமென அந்த வேளையில் ரணில் அஞ்சினார். ஆதலால் நாட்டுப்பற்றாளர் தரப்பு மற்றும் கிறிஸ்தவர்கள் தரப்பு ஆகிய இரு தரப்பினரையும் ஒருவாறு சமாளிக்கும் போக்கை ரணில் கையாண்டார். அந்த வகையில் அவர் ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவை நாடியதன் காரணமாக சோம தேரரின் மரணம் தொடர்பான சர்ச்சையைச் சமாளிக்கும் பொறுப்பை ஜாதிக ஹெல உறுமய கட்சி பொறுப்பேற்றது. தாம் ஜே.வி.பியை கடுமையாகக் குறைகூறி விமர்சிப்பதன் மூலம் நாட்டுப்பற்றாளர் தரப்பின் வாக்குகளைப் பிளவுபடுத்தி ஐ.தே.க.அதிகாரத்தைக் கைப்பற்ற வழிவகுத்துக் கொடுக்கும் திட்டமொன்றை ஜாதிக ஹெல உறுமய முன்வைத் தது. ரணிலின் தீவிர ஆதரவாளர்களும் ஹெல உறுமய வின் இந்தத் திட்டத்துக்கு எடுபட்டனர். எனவே, கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதான தாக்குதல் விடயத்தை ஹெல உறுமய ஏதோ விதத்தில் சமாளித்து ரணிலுக்கு உதவியது. எப்படியோ கத்தோலிக்க மதத்தவர்களது வாக்குகள் ஐ.தே.கட்சிக்கே பெருமளவில் கிடைப்பது வழக்கமாதலால், ஏதோ விதத்தில் ஹெல உறுமய தரப்பைத் தாம் சமாளித்தாக வேண்டுமென ரணில் அந்த வேளையில் கணக்கிட்டுச் செயற்பட்டார்.

ஆனால் சந்திரிகாவோ அந்த விடயத்தில் ரணிலின் நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாறுபட்டதொரு நிலைப்பாட்டையே கடைக்கொண்டார். கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதான தாக்குதல்களுக்கு எதிராக அவர் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தியது மட்டுமன்றி, அத்தகைய மத முரண்பாடுகளை ஏற்படுத்த முயல்வோர் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் கடும் எச்சரிக்கை விடுத்தார். சோம தேரரின் மரணம் தொடர்பான சிங்கள, பௌத்த ஆதரவு அலைக்கு எதிராகச் செயற்பட வேண்டாமென ஜே.வி.பி. தரப்பினரும், சுதந்திரக் கட்சியின் உயர் மட்டத் தலைவர்களும் வேண்டுகோள் விடுத்த போதிலும், சந்திரிகா தமது அந்தக் கடும் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டாரில்லை.

சந்திரிகா, ஜனாதிபதிப் பதவியிலிருந்து ஒதுங்கிக் கொண்டதன் பின்னர், நீண்டகால இடைவெளியொன்றின் பின்னர் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பொன்றின்போது அவர் தமது பழைய கால அனுபவங்கள் குறித்து சுவாரஸ்யமான பல தகவல்களை வெளியிட்டிருந்தார். கிறிஸ்தவ மதத்தவர்களது தேவாலயங்கள் தாக்கப்பட்ட காலகட்டத்தில் தாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் அந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளத் தவறவில்லை.

நான் ஜனாதிபதியாகப் பதவி வகித்த வேளையில் ஒரு தடவை மாத்திரமே அத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றன. ரணிலின் தலைமையிலான அரசு செயற்பட்ட வேளையில் ஹெல உறுமய தரப்பினர், திட்டமிட்ட வகையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு சேதங்கள் ஏற்படுத்தி வந்தனர். எனக்கு அது குறித்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டவேளை 188 கிறிஸ்தவ தேவாலயங்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகிச் சேதமடைந்திருந்தன. அது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அந்த வேளையில் பிரதமராக இருந்த ரணிலை நான் கேட்டுக்கொண்ட போதிலும், ரணில் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கையெதுவும் எடுத்தாரில்லை. ஆதலால் நத்தார் கொண்டாட்டத்தையண்டி, ரணிலின் வசமிருந்த பாதுகாப்பு அமைச்சை நான் எடுத்துக்கொண்டு நடவடிக்கையில் இறங்கினேன். கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட சந்தேகத்தின் பேரில் பௌத்த மத குருமார் உட்படப் பலரைக் கைது செய்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தேன். இத்தகைய சந்தர்ப்பங்களில் நிலைமையைக் கட்டுப்படுத்த விரைந்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் தவிர்க்க இயலாத கடப்பாடாகும் என சந்திரிகா தெரிவித்திருந்தார். அதேசமயம் பொதுபலசேனாவின் அண்மைக் கால நடவடிக்கைகள் குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்? எனக் கேட்கப்பட்டதற்கு அது முற்று முழுதான ஒரு மடத்தனமான செயற்பாடு என சந்திரிகா தெரிவித்திருந்தார்.

உண்மையில் சந்திரிகா தாம் விவரித்திருந்தமை போன்றே செயற்பட்டிருந்தார். 2004ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சந்திரிகாவுக்கு சிங்கள பௌத்த தரப்பினரின் கணிசமான வாக்குகளும் கிட்டின. ஐ.தே.கட்சியின் ஆதரவுப் பகுதிகளான, கத்தோலிக்க மதத்தவர் பெருமளவில் செறிந்து வாழும் பகுதிகளிலிருந்தும் சந்திரிகாவுக்குப் பெரும் ஆதரவு வாக்குகள் கிட்டியிருந்தன. நாட்டின் நலன் குறித்து சந்திரிகா அந்த வேளையில் மேற்கொண்ட துணிச்சலான நடவடிக்கைகள் சிங்கள பௌத்த சமூகத்தினரதும், கத்தோலிக்க மதத்தவர்களதும் மதிப்பையும் மரியாதையையும் சந்திரிகாவுக்கு ஈட்டிக் கொடுத்தன. தமது கணவரான விஜயகுமார ரணதுங்க ஒரு பௌத்த மதத்தவர் அல்ல என பரப்புரை மேற்கொள்ள கடும்போக்கு பௌத்த மதவாதத் தரப்பினருக்கு வாய்ப்பிருப்பதாக உணர்ந்திருந்த சந்திரிகா, அத்தகைய தீவிரத் தரப்பினருக்கு அஞ்சித் தமது கடும் நிலைப்பாட்டைத் தளர்த்திக் கொள்ளாது நாட்டின் பாதுகாப்பு, அமைதி என்பவை குறித்துச் சிந்தித்துச் செயற்பட்டார். அதன்மூலம் நாட்டின் அனைத்து மக்களது ஆதரவை ஈட்ட இயலுமென்பதை நன்கறிந்திருந்த சந்திரிகா, அத்தகைய பாதையிலேயே நாட்டை நிர்வகித்தார்.

இவை யாவும் இன்று மஹிந்தவுக்குப் புரிவதில்லை. சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளைக் கவர்வதற்காக இன்று மஹிந்த பொதுபல சேனாவின் செயற்பாடுகளைக் கண்டும் காணாமலும் சமாளித்துப் போகும் அதேவேளை, அரேபிய நாடுகளைச் சமாளிப்பதற்காக நாட்டின் முஸ்லிம் மக்கள் மீது அனுதாபம் காட்டும் ஒருவராகத் தன்னைக் காட்டிக் கொள்ள முயல்கிறார். "இன்று அளுத்கமவில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்களுக்குச் சென்று பாருங்கள். இவ்விரு தரப்பினரும் அரசைக் கடுமையாகத் திட்டித் தீர்க்கிறார்கள். கடைசியில் அரசுக்கு சிங்கள பௌத்த மக்களது வாக்குகளும் இல்லாது போய்விடப் போகின்றன. அதேபோன்று முஸ்லிம் மக்களது வாக்குகளும் இல்லாது போய்விடப் போகின்றன" என்று அரசின் முக்கிய அமைச்சரொருவர் தெரிவித்துள்ளார்.

அது உண்மையே. இதற்கான பொருத்தமான உதாரணமாக முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவுக்கு நேர்ந்த கதியைக் குறிப்பிட இயலும். பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம் செய்யப்பட்டவேளை ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிங்கள பௌத்த நாட்டுப்பற்றாளர்கள் பிரதமரின் ரோஸ்மீட் பிளேஸ் இல்லத்தின் முன்னால் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன் காரணமாக பிரதமர் பண்டாரநாயக்கா அந்த ஒப்பந்தத்தை அவர்கள் முன்னாலேயே கிழித் தெறிய நேர்ந்தது. இதன் காரணமாக கடைசியில் பண்டாரநாயக்காவுக்கு தமிழ் மக்களது ஆதரவும் கிட்டவில்லை. சிங்கள பௌத்த நாட்டுப் பற்றாளர் தரப்பின் ஆதரவும் கிட்டவில்லை. பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்ததையடுத்து, அவ்வேளையில் அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த டட்லி சேனநாயக்காவை மீண்டும் அரசியலரங்கில் பிரவேசிக்க வைக்க நாட்டுப் பற்றாளர் தரப்பினர் டட்லியுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்திருந்தனர்.

மொத்தத்தில் அரசியலில் முரண்பாடான இரு தரப்புகளைச் சமாளித்து, இரு தரப்புகளுக்கும் விட்டுக் கொடுத்துத் தமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்ள முயல்வது, கடைசியில் சம்பந்தப்படும் இரு தரப்புக்களின் ஆதரவையும் இழக்க வைக்கும் அபாய நிலைக்கு இட்டுச் செல்லும் என "அரசியல் காய் நகர்த்தல்கள்" என்ற நூலை எழுதிய அரசியல் சிந்தனையாளர் மக்கியாவெலி தெரிவித்துள்ளமை யதார்த்த உண்மையே. பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டும் போக்கு நீண்ட நாள்களுக்கு பயனளிக்காது என்றொரு முதுமொழி வழக்கிலுண்டு.

■ ஞான ஆதவன்



# நவீன தொழில்நுட்பத்தை பின்பற்ற வேண்டும்

## யாழ்ப்பாண விவசாயிகளுக்கு விவசாயப் பணிப்பாளர் அறிவுறுத்தல்

"யாழ்.மாவட்ட விவசாயிகள் பாரம்பரிய மரபு ரீதியிலான விவசாய நடைமுறைகளைக் கைவிட்டு நவீன தொழில்நுட்பம் சார் நிலையில் விவசாய நடைமுறைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும். அதன் மூலமே எதிர்காலத்தில் விவசாய பயிர்ச் செய்கையில் இலாபம் ஈட்ட முடியும்.

ஒரு காலத்தில் யாழ்.மாவட்டத்தில் மட்டுமே வெங்காயப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இன்று இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களிலும் வெங்காயப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. அவர்கள் நவீன தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு பயிர்ச்செய்கையைப் மேற்கொண்டு லாபம் ஈட்டுகின்றனர்."

இவ்வாறு விவசாயிகளுக்கு அறிவுரை கூறுகிறார் யாழ்.மாவட்ட விவசாய பணிப்பாளர் கி. ஸ்ரீபாலசுந்தரம்.

வெங்காயப் பயிர்ச்செய்கை உட்பட பயிர்ச் செய்கையில் யாழ்.மாவட்ட விவசாயிகள் உரிய அளவு வருமானத்தைப் பெற முடியாமல் போகின்ற நிலைமை மற்றும் எதிர்காலப் பயிர்ச்செய்கை தொடர்பாக மாவட்ட விவசாயப் பணிப்பாளர் விவசாயிகளுக்கு அறி வுரை வழங்கியுள்ளார்.

யாழ்.மாவட்ட விவசாயிகள் எதிர்காலத்தில் பயிர்ச்செய்கை மூலம் உரிய வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு சமகால விவசாயச் செயல்முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். காலவோட்டத்துக்கு ஏற்ப நவீன தொழில்நுட்ப உத்திகளை விருப்பத்தோடு கையாள முன்வரவேண்டும்.

கடந்த காலங்களில் குறித்த பிரதேசத்துக்கு காலநிலைக்கு உரியது என இருந்த பயிர்ச் செய்கைகள் தற்பொழுது சகல பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றன. வெங்காயச் செய்கை ஒரு காலப் பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு மட்டும் உரியது எனக் கொள்ளப்பட்டது.

இந்த வகையில் 'வெளி மாவட்டங்களில் "யாழ்ப்பாண வெங்காயம்" எனப் பெருமையோடு அழைக்கப்பட்டது.

பின்னர் வெங்காயப் பயிர்ச்செய்கை புத்தளம் கற்பிட்டிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. இன்று காலி, அம்பாந்தோட்டை, அம்பாறை, மாத்தறை , மொனராகலை, சிலாபம் என இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களிலும் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. அவர்கள் நவீன தொழில்நுட்ப உத்திகளை மேற்கொண்டு பயிர்ச் செய்கையை மேற்கொள்வதால் குறைந்த உற்பத்திச் செலவோடு கூடிய வருமானத்தைப் பெறுகின்றனர்.



தற்பொழுது வெளிமாவட்டச் சந்தைகளில் யாழ்ப்பாணத்துக்கு வெளியே உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயம் விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் யாழ்ப்பாணத்தில் வெங்காய விலையைப் பொறுத்தவரை போட்டி போட முடியாத நிலையில் உள்ளது. இதனை யாழ். மாவட்ட விவசாயிகள் கருத்தில் கொள்ளவேண்டும்.


**நவீன தொழில்நுட்ப முறைகள்**

யாழ்.மாவட்டத்தில் இன்னமும் மரபு வழிப் பயிர்ச் செய்கையே பெருமளவில் மேற்கொள்ளப்படுகின்றது. யாழ்.மாவட்ட விவசாயிகள் நவீன தொழில் நுட்ப உத்திகளை விருப்பத்தோடு உள்வாங்க மறுக்கின்றனர். தமது விருப்பத்துக்கு ஏற்ப நடந்து கொள்கின்றனர். இது உற்பத்திச் செலவை அதிகரிக்கச் செய்கின்றது. நீர்ப்பாசன நடைமுறையில் தூவல் நீர்ப்பாசனம், உண்மை வெங்காய விதையைப் பயன்படுத்தல் என்பன உச்ச விளைச்சல் தருவதோடு உற்பத்திச் செலவையும் குறைக்கின்றது.

**கிருமிநாசினி-பசளைப் பிரயோகம்**

யாழ்.மாவட்டத்தில் சம காலத்தில் சேதனப் பசளை மற்றும் இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்துவது அருகி வருவதோடு விவசாயத் திணைக்களத்தின் பரிந்துரைக்கு எதிர்மாறான இரசாயன பசளைகளை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துகின்றனர்.

இதனால் வெங்காயத்தை மற்றும் அறுவடை செய்த விளைபொருள்களைப் பாதுகாத்து வைக்க முடியாத நிலை ஏற்படுவதோடு மண் மாசடையும் நிலை உருவாவதுடன் நிலத்தடி நீரும் பாதிப்புக்கு உள்ளாகின்றது. பொருத்தமில்லாத கிருமி நாசினிகளை அளவுக்கு அதிகமாகப் பயன் படுத்துவதால் நுகர்வோர் நோய்த் தாக்கத் துக்கும் உள்ளாகின்றனர். விவசாயிகள் விவ சாயத் திணைக்களத்தின் ஆலோசனைகளை உள்வாங்கி உரிய நடை முறைகளுக்கு அமைய நவீன தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்ற வேண்டும். யாழ். மாவட்ட விவசாயிகள் எதிர்காலத்தில் பயிர்ச்செய்கையில் வெளிமாவட் டங்க ளோடு போட்டி போட்டு வருமானத்தைப் பெற முன்வர வேண்டும் எனவும் அவர் அறிவு றுத்தியுள்ளார்.



---

**வாசகர் திருமுகம்**

## வடமாகாணத்தில் இந்திய மருத்துவர்களின் உத்தேச சேவை வரவேற்கத்தக்கது

வடமாகாண சுகாதார அமைச்சும், இந்தியத் தூதரகமும் இணைந்து மனிதாபிமான அடிப்படையில் இந்திய தமிழ் மருத்துவர்களை சேவைக்கு அமர்த்தும் திட்டத்தை பொதுமக்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

இதற்கான முன்மொழிவைச் செய்த மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்துக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக அசாதாரண சூழலில் வட பகுதியில் இருந்து நூற்றுக்கணக்கான மருத்துவ நிபுணர்களும் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவர்களும் வெளிநாடுகளுக்கு நிரந்தரமாக புலம் பெயர்ந்து சென்றுவிட்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறை உள்ளமையினால் சிகிச்சைக்கு ஏனைய வைத்தியர்களால் அனுப்பப்படும் நோயாளிகள் வைத்திய சாலை ஊழியர்களால் திகதி குறித்து அனுப்பப்படுகின்றனர். இதனால் உடனடியாக சிகிச்சை பெறுவதில் சிரமம் ஏற்படுகிறது.

உதாரணமாக தலைவலிக்கு கோப்பாய் வைத்தியசாலையில் இருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பும்போது வெளி நோயாளர் பிரிவில் துண்டு எடுத்து, பின் வெளி நோயாளர் நிபுணர் பிரிவில் துண்டு எடுத்து, பின் கிளினிக்கில் துண்டு எடுத்து அதன் பின்னரே குறிப்பிட்ட விசேட சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையைப் பெற முடிகின்றது. இவ்வாறே குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு, மருத்துவப் பிரிவுகளிலும் நீண்டகாலக் காத்திருப்பு உள்ளது. அத்துடன் 2 மாதங்களுக்கு ஒரு தடவையே மருத்துவ நிபுணர் நோயாளியைப் பரிசோதிக்கும் நிலைமையும் உள்ளது.

இவ்வாறே சத்திரசிகிச்சைப் பிரிவு உட்பட பல கிளினிக்குகளில் நோயாளர்களின் நிலை உள்ளது. கொட்டடி மீன் சந்தைக்கு பக்கத்தில் உள்ள வைத்தியசாலைக்கு மூச்சுக் கடுக்கச் சென்றாலும் போ என்று கலைத்து விடுவார்கள்.

வைத்தியசாலை விடுதிகளிலும் ஒரு வைத்திய நிபுணரிடம் சிகிச்சை பெற்ற நோயாளிக்கு எமது வைத்திய நிபுணரிடம் 'சிகிச்சை பெற எழுதப் படாத தடாச் சட்டம்.

"அரம்போலும் கூர்மையரேனும்
மரம் போல்வர் மக்கட் பண்பு இல்லாதார்"

என்ற வள்ளுவரின் வரிகளே நோயாளிகள் தமது செருப்புத் தேய தேய வாயில் முணு முணுக்கும் காலம் இது. இத்தகைய சந்தர்ப்பங்களில் இந்திய மருத்துவர்களால் வடமாகாணத்தில் உள்ள ஆதார வைத்திய சாலைகளில் நிபுணத்துவ சேவையை வழங் கக்கூடிய கட்டமைப்பு வளங்கள் எம்மிடம் உண்டு.எனவே இந்த மனிதாபிமான நடவ டிக்கைக்கு எவரும் இடை யூறு விளைவிக்காது மக்களுக்கு விரைந்த சேவையை ஏற்படுத்த் ஒத்துழைக்க வேண் டும். "சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப் போம்" என்ற பாரதியாரின் கனவை இந்த மனிதாபிமானப் பாலமும் நிஜமாக்கும்.

*சி.நித்தியா*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: உறவினர்கள், குடும்ப நண்பர்களிடம் முக்கிய விடயங்களை ஆலோசனை செய்வதையும், அடுத்தவர் பற்றி பேசுவதையும் தவிர்ப்பது நல்லது. எதிர்பார்த்த தகவல்கள் தாமதமாக வரும். கூட இருப்பவர்களிடம் எந்த விடயத்தை சொல்லும்போதும் கவனம் தேவை.



**இடபம்**: எந்த வேலையிலும் கவனம் சிதற விடாமல் இருப்பது வெற்றிக்கு உதவும். எதிர்ப்புகள் விலகும். கடன் தொடர்பான பிரச்சினைகள் தீரும். மனக் குழப்பம் நீங்கும். ஆனால் பிறருடன் பழகும்போது நிதானம் தேவை. தொழில் தொடர்பான காரியங்கள் வெற்றி பெறும்.



**மிதுனம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் நன்மை, தீமை பற்றி கவலைப்படாமல் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியை திறம்படச் செய்வார்கள். போட்டிகள் மறையும். உங்களது வார்த்தைக்கு மதிப்புக் கூடும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனக்கசப்பு நீங்கும்.



**கடகம்**: மனக் குழப்பம் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு பணி உயர்வு தொடர்பான விடயங்களில் சாதகமான நிலை காணப்படும். திறமையாகச் செயற்பட்டு பாராட்டுப் பெறுவீர்கள்.



**சிங்கம்**: வேற்று மொழி பேசும் நபரால் நன்மை உண்டாகும். புத்திசாதுரியத்தால் எதையும் சமாளிப்பீர்கள். நீங்கள் நினைப்பது போல் மற்றவர்கள் நடந்து கொள்ளாததால் பதற்றம் ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைச் சுமை அதிகரிக்கும்.



**கன்னி**: சொன்ன சொல்லை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவது மூலமும் விருந்தினர் வருகையாலும் செலவு உண்டாகும். திடீர் கோபங்கள் உண்டாகலாம். நிதானமாக இருப்பது நல்லது.



**துலாம்**: திறமையாகச் செயற்பட்டு உத்தியோகத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்ப்புகள் நீங்கும். எந்தக் காரியத்தையும் செய்யு முன்னரும் ஆலோசனை செய்து அதில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். சாமர்த்தியமான உங்களது செயல் கண்டு மற்றவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.



**விருச்சிகம்**: உங்கள் கீழ் பணியாற்றுபவர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து உங்கள் நிலையை உயரச் செய்வார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பொறுப்பு கிடைக்கப் பெறுவார்கள். சக பணியாளர்கள் மூலம் நன்மை உண்டாகும்.



**தனுசு**: மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களின் அணுகுமுறையை மாற்றுங்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.



**மகரம்**: உங்கள் செயல்களுக்குத் தடைகளை ஏற்படுத்தியவர்கள் தாமாகவே விலகிச் செல்வார்கள். முக்கிய பொறுப்புகளில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சாதுரியமான பேச்சால் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள்.



**கும்பம்**: குடும்பத்தில் வீண் விவாதங்கள் தோன்றும். கவனம் தேவை. சாதுரியமான பேச்சால் ஆதாயம் உண்டாகும். பணவரத்து கூடும். காரியத் தடைகள் நீங்கும். மேலதிகாரிகள், சக ஊழியர்கள் உதவிகள் கிடைக்கும்.



**மீனம்**: வாழ்க்கைத் தரம் உயர எடுக்கும் முயற்சிகள் கைகூடும். நெருக்கமானவர்களுடன் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிப்பீர்கள். முன்பின் யோசிக்காமல் எதையாவது பேசி விடுவீர்கள். இதனால் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம். கவனம் தேவை.

## நாளை

**ஆனி-29 ஞாயிற்றுக்கிழமை | 13.07.2014**

திதி: பிரதமை பி.ப.03.23 வரை
நட்சத்திரம்: உத்தராடம் மா.05.47 வரை

சுபநேரம்: 08.59-10.29 வரை
இராகுகாலம்: 04.29-05.59 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## செயல்முறை சமயம் : பிராணாயாமமும் தியானமும்

செயல்முறை என்று தான் எண்ணுவதே செயல்முறை சமயம் என்று ஒவ்வொருவரும் எண்ணுகிறார்கள். தன் நிலையே அதை அளக்கும் அளவுகோல் என்பதே அவர்கள் எண்ணம். செயல் புரிதல், வழிபாடு, அறிவு எனப் பல வழிகள் உள்ளன.

தத்துவவாதி சிந்திக்கிறான். பந்தம், சுதந்திரம் இவற்றுக்கிடையிலுள்ள வேறுபாட்டுக்குக் காரணம் அறிவும் அறியாமையுமே. அவனைப் பொறுத்தவரை அறிவை குறிக்கோள். அறிவே அடைவதே செயல்முறை. அன்பும், பக்தியுமே பக்தனின் செயல்முறை சமயம். செயல் புரிபவனின் செயல்முறை சமயம், நற்பணிகள் புரிவதே. இப்படியே அனைத்தும். பிறரது நிலையை நாம் எண்ணுவதே இல்லை. நமது நிலையிலிருந்தே உலகம் முழுவதையும் பார்க்க நாம் விரும்பு கிறோம்.

அன்பால் நிறைந்த மனிதனின் செயல்முறைச் சமயம் பிற உயிர்களுக்கு நன்மை செய்வதே. அவர்களின் கருத்துப்படி மருத்துவமனை கட்ட உதவாத ஒருவனிடம் சமயம் என்பதே இல்லை. ஆனால் ஒவ்வொருவரும் மருத்துவமனை கட்டியே தீர வேண்டும் என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. அது போலவே அறிவற்ற யாரையும் தத்துவவாதி ஏற்றுக் கொள்வதில்லை. இருபதாயிரம் மருத்துவமனைகள் கட்டலாம். அவையெல்லாம் தத்துவவாதியைப் பொறுத்தவரை வெறும் சுமைகளே. இது போலவே பக்தனும் தனது அளவுகோலை வைத்துள்ளான். அவனைப் பொறுத்த வரை எந்தப் பெரிய செயலைச் செய்தாலும் இறைவனிடம் அன்பு கொள்ளாதவர்களால் ஒரு பயனுமில்லை.

# சமூகவலைத் தளங்களை பயன்படுத்துவோருக்கு கைப்பட்டி



சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்துபவர்கள் அவற்றின் செயற்பாடுகளை உடனுக்குடன் அறிந்து கொள்வதற்கு புத்தம் புதிய கைப்பட்டி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ஹைகொன் (Hicon) எனப்படும் இந்தக் கைப்பட்டியின் ஊடாக சமூக வலைத்தளங்களின் பதிவேற்றம், ஏனைய அறிவிப்புக்களை அறிந்து கொள்ள முடியும்.

ஸ்மார்ட் கைபேசிகளுடன் வயர்லெஸ் இணைப்பின் மூலம் இணைத்து பயன்படுத்தக்கூடிய இந்தச் சாதனம் 30 மீற்றர் தூரம் வரை இயங்கக்கூடியது. மேலும் இது 100 சதவீதம் நீர் உட்புகாதவாறு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், தூசு, அதிர்வுகளிலிருந்து பாதுகாப்பு உடையதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது

# சுடோக்கு
## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | 7 | | 2 | 5 | 3 | 6 | 4 |
| | 2 | 3 | | | 4 | 9 | 8 | |
| 4 | | | | 3 | | | | |
| | 6 | | | 7 | | | | |
| 1 | | | 5 | | 6 | | | 9 |
| | | | | 8 | | | 5 | |
| | | | | 9 | | | | 6 |
| | 5 | 4 | 3 | | | 2 | 9 | |
| 2 | 9 | 6 | 4 | 5 | | 8 | | 1 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 7 | 1 | 8 | 4 | 5 | 6 | 9 |
| 4 | 1 | 9 | 3 | 5 | 6 | 7 | 2 | 8 |
| 8 | 6 | 5 | 7 | 2 | 9 | 3 | 4 | 1 |
| 7 | 4 | 8 | 2 | 1 | 5 | 6 | 9 | 3 |
| 6 | 9 | 2 | 4 | 3 | 7 | 8 | 1 | 5 |
| 3 | 5 | 1 | 6 | 9 | 8 | 4 | 7 | 2 |
| 5 | 2 | 6 | 9 | 7 | 3 | 1 | 8 | 4 |
| 9 | 8 | 4 | 5 | 6 | 1 | 2 | 3 | 7 |
| 1 | 7 | 3 | 8 | 4 | 2 | 9 | 5 | 6 |

# தேசிய விளையாட்டுத்துறை செயலணி அமைக்க முடிவு

கொழும்பு, ஜூலை 12

தேசிய விளையாட்டுத்துறை கொள்கையைச் செயற்படுத்துவதற்காக செயலணியொன்று தற்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர், விளையாட்டுத்துறை நிபுணர்கள், நிர்வாகிகள் மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் இந்தச் செயலணியில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, விளையாட்டு, கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் இராணுவத் தளபதியும் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நடைமுறையில் உள்ள அனைத்து விளையாட்டுப் பிரிவுகளையும் ஆராய்ந்து, அவற்றின் எதிர்காலப் பயணப் பாதைக்காக திட்டங்களை வகுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு தேசிய வேலைத்திட்டம் ஒன்றை தயாரிப்பதற்காகக் குறித்த செயலணி அமைக்கப்படவுள்ளது.

குறித்த செயற்பாடுகளை எதிர்வரும் 3 மாதங்களில் இறுதி செய்யுமாறு விளையாட்டுத்துறை அமைச்சு, விளையாட்டுத்துறை கொள்கையைத் தயாரிக்கும் செயலணிக்குப் பணித்துள்ளது. (த)

## சீமா, ஆவரங்கால் இளைஞர் அபார ஆட்டத்தால் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 12

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தப்படும் யாழ்.மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் 'பி' பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் மீசாலை சீமா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் மீசாலை சீமா விள்ளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

'ஏ' பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## வசந்தஸ்ரீ, வளர்மதி, கலைமதி மின்னொளியில் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தப்படும் யாழ். மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக்கழக அணிக்கும் மட்டுவில் ஞானதீபம் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணிக்கும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக 'பி' அணிக்கும் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்ககழ பி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## ஞானமுருகன் - மனோகரா மோதல் சமநிலையில்



யாழ்ப்பாணம், ஜூலை 12

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது அண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலையங்ஹென்றிஸ்விளையாட்டுக்கழகத்துடன்இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல், இரவு ஆட்டங்களாக இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்று ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டன.

இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எந்தவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஜூலை 12

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது அண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உ தைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல், இரவு ஆட்டங்களாக இடம்பெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம் பெறவுள்ளது என யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி மோகனதாஸ் தொரிவித்துள்ளார். (த- 23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 12

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி வீண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செஞ்சுடர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 12

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தப்படும் யாழ். மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மீசாலை சீமா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மீசாலை சுடர் ஒளி விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமாரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## ஆவரங்கால் மத்தி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 12

மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. அதில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## எழுவை தீவு மாணவி சாதனை



விளையாட்டரங்கில் நடைபெற்ற வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டியில் 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் ஈட்டி எறிதல் போட்டியில் 24.47 மீற்றர் தூரம் எறிந்து எழுவைதீவு முருகவேள் வித்தியாலய மாணவி வி.கல்சியா முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

அத்துடன் அவர் தேசிய மட்டப் போட்டிக்கும் தெரிவாகியுள்ளார்.

போதிய விளையாட்டு வசதிகளற்ற அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலையிலிருந்து பங்குபற்றித் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியதன் மூலம் தனது பாடசாலைக்கும் தீவக வலயத்திற்கும் அவர் பெருமை சேர்த்துள்ளார். (த)

## யங்ஹென்றிஸ், நவஜீவன்ஸ் அணிகள் ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை12

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி வீண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் நக்கீரன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் நாகதீபம் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## இராசதுரை கிண்ணத்துக்கான உதைபந்தாட்டம் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூலை 12

அமரர் இராசதுரை நினைவுக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி முதன் முறையாக வட மாகாணப் பாடசாலைகளின் 19 வயது அணிகளுக்கு இடையே நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் சி.க.எழில் வேந்தன் தலைமையில் ஆரம்பமானது.

இந்தச் சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டிக்கு சென். அன்ரனிஸ், நெல்லியடி மத்திய கல்லூரி, சென்.ஹென்றிஸ், மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியன தெரிவாகியுள்ளன.

தொடரின் இறுதிப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (த)

# நண்பா ஜேர்மனியை தகர்த்து விடு மெஸ்ஸிக்கு ஆதரவளித்த நெய்மர்

உலக கிண்ண உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் ஜேர்மனியை லயனல் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்ரீன அணி தோற்கடித்து சம்பியனாக வேண்டும் என பிரேஸில் நட்சத்திர வீரர் நெய்மர் கூறியுள்ளார்.

கொலம்பியாவுடனான கால் இறுதிப்போட்டியில் காயமடைந்து அரையிறுதிப் போட்டியில் நெய்மர் விளையாடாத நிலையில் பிரேஸிலை ஜேர்மனி 7:1 வீதத்தில் வென்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தனது பார்ஸிலோனா அணி சகாவும் நண்பருமான லயனல் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்ரீன அணி உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டுமென நெய்மர் கூறியுள்ளார்.

இவ்விளையாட்டில் மெஸ்ஸியின் வரலாறு முக்கியமானது. அவர் ஏராளமான கிண்ணங்களை வென்றுள்ளார். அவர் எனது நண்பர். எனது அணி சகா. அவரை நான் வாழ்த்துகிறேன் எனச் செய்தியாளர் மாநாடொன்றில் லயனல் மெஸ்ஸி கூறியுள்ளார்.

டெரிஸோபொலிஸ் நகரில் கடந்த வியாழனன்று நடைபெற்ற இச்செய்தியாளர் மாநாட்டில் உணர்ச்சிவசப்பட்டவராக நெய்மர் காணப்பட்டார். காயமடைந்தபோதிலும் இறைவனின் ஆசி காரணமாகத் தான் சக்கர நாற்காலி மூலம் நடமாடும் நிலைக்கு தள்ளப்படவில்லை எனவும் மெஸ்ஸி கூறினார்.(த)





## நைஜீரிய அணிக்கு தடை

நைஜீரிய உதைபந்தாட்ட அணி சர்வதேசப் போட்டிகளில் பங்குப்பற்றுவதற்கு சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் தடை விதித்துள்ளது.


நைஜீரிய உதைபந்தாட்டக் கூட்டமைப்பின் செயற்பாடுகளில் அரசின் தலையீடுகள் காணப்படுவதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பணி நீக்கம் செய்யப்பட்ட நைஜீரிய உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவை மீண்டும் பதவியில் அமர்த்துவதற்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை அரசுக்கு சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

நைஜீரிய உதைபந்தாட்டக் கூட்டமைப்பை கடந்த வாரம் கலைத்த அந்த நாட்டு அரசு தனிநபர் நிர்வாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நைஜீரிய உதைபந்தாட்டக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக் குழு உரிய வழிமுறைகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படின் இந்த தடை நீக்கப்படும் என சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது. (த)

# இறுதிப் போட்டியின் மீதே எமது கவனம்



பிரேசிலுக்கு எதிரான வெற்றி குறித்து சிந்தித்துக்கொண்டிருக்காமல் அடுத்து இடம்பெறவுள்ள இறுதிப்போட்டி மீது முழுக் கவனத்தையும் தாம் செலுத்தியுள்ளதாக ஜேர்மனி அணியின் நட்சத்திர வீரர் தோமஸ் முல்லர் தெரிவித்தார்.

அரையிறுதிப் போட்டியில் ஜேர்மனி அணி 7:1 என்ற கோல் கணக்கில் பிரேசிலை வீழ்த்தியது. இப்போட்டியில் முதல் கோல் அடித்த தோமஸ் முல்லர், வெற்றிக்கு அடித்தளம் அமைத்தார்.

இது குறித்து முல்லர் கருத்து வெளியிடுகையில்,

இம்முறை கிண்ணத்தை வெல்லும் இலக்கோடு களமிறங்கினோம். ஆனால் இதுவரை எங்களது இலக்கை அடையவில்லை. இதற்கு இன்னும் ஒரு போட்டி மீதமுள்ளது. எனவே பிரேசிலுக்கு எதிரான வெற்றியை மறந்து, இறுதிப் போட்டி மீது மட்டும் முழுக்கவனத்தையும் செலுத்தவுள்ளோம் - எனத் தெரி வித்தார்.

(த)

# மன்னிப்பு கோரினார் லூயிஸ் ஸ்கொலாரி

ஜேர்மனி அணியுடனான அரையிறுதிப் போட்டியில் தமது அணி தோல்வியடைந்தமைக்குத் தாம் பொறுப்பேற்பதாக பிரேஸில் அணியின் பயிற்றுவிப்பாளர் லூயிஸ் ஸ்கொலரி தெரிவித்துள்ளார்.


ஜேர்மனியுடனான போட்டியில் 7 -1 என்ற கணக்கில் பிரேஸில் தோல்வியுற்று தொடரிலிருந்து வெளியேறியுள்ளது. இதைத் தனது வாழ்க்கையில் மிகவும் மோசமான நாளாகக் கருதுவதாகக் ஸ்கொலரி தெரிவித்துள்ளார்.


அத்துடன் பிரேஸில் மக்களிடம் தாம் அடைந்த தோல்விக்காக அவர் மன்னிப்பு கோரியுள்ளார்.

இதேவேளை, ஜேர்மனி அணியுடனான அரையிறுதிப் போட்டியில் தோல்வியுற்றமைக்குத் தம் நாட்டு மக்களிடம் பிரேஸில் உதைபந்தாட்ட அணித் தலைவர் டேவிட் லூயிஸ் மன்னிப்புக் கோரியுள்ளார்.

> “ஜேர்மனியுடனான போட்டியில் 7 -1 என்ற கணக்கில் பிரேஸில் தோல்வியுற்று தொடரிலிருந்து வெளியேறியுள்ளது. இதைத் தனது வாழ்க்கையில் மிகவும் மோசமான நாளாகக் கருதுவதாகக் ஸ்கொலரி தெரிவித்துள்ளார்.

இந்தத் தோல்வியானது தாம் மேலும் கற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)





## ரேய் வீலன் கைது

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின், போட்டிகளுக்கான நிறைவேற்று அதிகாரி ரேய் வீலன் கைது செய்யப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான அனுமதிச் சீட்டுகளைச் சட்ட விரோதமாக விற்பனை செய்தமைக்காக அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்படுவதற்கு முன்னதாக அவர் பிரேசிலில் இருந்து தப்பி செல்ல முற்பட்ட வேளையில், ரியோவில் வைத்து கைது செய்யப்பட்டதாகப் பிரேசில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டின் கீழ் ஏற்கனவே கடந்த வாரம் 11 பேர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# தோல்விக்கு காரணம் என்ன?

உலகக்கிண்ண தொடரில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பிரேசில் அணியை ஜேர்மனி 7- 1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வரலாறு படைத்தது.

பிரேசில் அணியின் தோல்விக்கு முக்கிய காரணம் நட்சத்திர ஆட்டக்காரர் நெய்மர் இல்லாதது தான் பலவீனம். நெய்மரின் முதுகெலும்பு முறிந்து அவர் வெளியேறியதை தொடர்ந்து பிரேசில் அணி வரலாறு காணாத மோசமான தோல்வியைச் சந்தித்துள்ளது.

அதே போல் அணித்தலைவர் தியாகோ சில்வாவும் இரண்டு மஞ்சள் அட்டை வாங்கியதால் ஆடவில்லை. இருவரும் அணியில் இடம் பெற்றிருந்தால் கூட ஜேர்மனியின் அசுரத்தனமான ஆட்டத்துக்கு முட்டுக்கட்டை போட்டிருப்பார்கள்.

இந்த தருணத்தை முல்லர், குளோஸ் போன்ற அனுபவ வீரர்களும் சரியாக பயன்படுத்தி கொண்டனர். ஆட்டம் தொடங்கிய 11ஆவது நிமிடத்திலேயே ஜேர்மனியின் நட்சத்திர வீரர் தோமஸ் முல்லர் கோல் போட்டு, அந்த அணிக்கான முதல் வெற்றி படிக்கட்டை அமைத்து கொடுத்தார். அவர் காலில் என்ன மந்திரம் செய்தாரோ அதன் பிறகு ஜேர்மனிக்கு கோல் மழையாக பொழிந்து கொண்டிருந்தது. தொடர்ந்து கோலாக விழ இங்கு என்னதான் நடக்கிறது என்றவாறு பயத்தில் உறைந்து போயினர் பிரேசில் வீரர்கள்.

ஜேர்மனி தனது 5ஆவது கோலை போடும் போது வாயடைத்து போனார் பிரேசில் அணித் தலைவர் டேவிட் லூயிஸ். போட்டியில் கவனத்தை செலுத்தாமல் விரக்தியில் இருந்த பிரேசில் வீரர் மார்செலோவும், ஜேர்மனியின் ஜெரோம் போடொங்கும் ஆட்டத்தின் நடுவே கைகளை நீட்டி ஆக்ரோஷமாக மோதிக் கொண்டனர்.



பிரேசில் அணி பலவீனமாக இருந்ததை உணர்ந்த ஜேர்மனி வீரர்கள் தகுந்த சமயத்தை நன்றாகவே பயன்படுத்தி கொண்டார்கள். முடிவில் ஜேர்மனி அணி, 7-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

உலகக்கிண்ண தொடரின் இறுதிப்போட்டிக்கு 8ஆவது முறையாக முன்னேறி புதிய உலக சாதனை படைத்தது ஜேர்மனி. பிரேசில் அணி, தனது உதைபந்தாட்ட வரலாற்றில் கடந்த 94 ஆண்டுகளில் இல்லாத அளவில் பெரும் தோல்வியை சொந்த ரசிகர்கள் முன்னிலையில் சந்தித்துள்ளது. (த)

# கர்ப்பிணிக் காதலியை கரம்பிடித்த ஜோகோவிச்

பிரபல ரென்னிஸ் வீரர் நோவாக் டி ஜோகோவிச் தனது நீண்ட நாள் தோழியை நேற்று மணந்தார்.

ஜோகோவிச் தன்னுடன் பள்ளியில் படித்த தோழி ஜெலினா ரிஸ்டிரிக்கை அப்போது இருந்தே காதலித்து வந்தார். இவர்கள் இருவரும் திருமணம் செய்யாமலேயே ஒன்றாக வாழ்ந்து வந்தனர்.

இந்நிலையில் ஜோகோவிச் சமீபத்தில் நடந்த விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியிருந்தார்.

அந்த வெற்றியைத் தொடர்ந்து தனது காதலியைக் கரம் பிடித்த ஜோகோவிச் அந்த வெற்றியைத் தனது மனைவிக்கும், பிறக்கப்போகும் தனது குழந்தைக்கும் அர்ப்பணிப்பதாகக் கூறியுள்ளார்.

இவர்களது திருமணம் தென்கிழக்கு ஐரோப்பிய நாடான மொன்டிநீக்ரோவில் உள்ள உயர்தர ஹோட்டல் ஒன்றில் நடந்தது.

இந்தத் திருமணத்தில், இருவரது பெற்றோர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் என நெருங்கிய வட்டாரத்தினர் மட்டுமே கலந்து கொண்டனர். (த)



> திருமணம் தென்கிழக்கு ஐரோப்பிய நாடான மொன்டிநீக்ரோவில் உள்ள உயர்தர ஹோட்டல் ஒன்றில் நடந்தது.

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**வாடகைக்கு விடப்படும்**
TATA 407 வகை உடைய (அலுமினிய பொழி) வியாபார விநியோகத் தேவைக்கு மட்டும்
0757897448

**சாரதி தேவை**
கனரக வாகன சாரதி தேவை. யாழ். மாநகர சபை எல்லைக்குள் உட்பட்டவர் மட்டும் தொடர்பு கொள்ளவும். 0771807672

**கார் விற்பனைக்கு**
மாருதி சுசிக்கி கார், WAGONR, KAxxxx இலக்கம், சில்வர் கலர், சொந்தப் பாவனையிலுள்ள, 32000km பாவித்த நிலையில் உள்ளது.
தொடர்பு : 077 480 3426 (49875) (7.6.3)

**தையல் பயிற்சி வகுப்பு**
பத்து விதமான சாறி பிளவுஸ், சல்வார் கட்டிங் பயிற்றுவிக்கப்படும் (49873) (7.6.3)
தொடர்பு : 077 191 2085

## ஆச்சார்ய அபிஷேக வாழ்த்துக்கள்

### சிவஸ்ரீ சத்தியேந்திரா ஐயா



14.07.2014 இல் பொலிகண்டி குளத்தடி ஞானவைரவர் ஆலயத்தில் குருபட்டாபிஷேகம் பெறும் சிவஸ்ரீ சத்தியேந்திரா ஐயா (சக்தி ஐயா) அவர்கள் நித்திய நைமித்திய, மகோற்சவ கிரிகைகளை நடத்தி சிவப்பணி செய்ய எல்லாம் வல்ல கந்தவனக்கடவை வன்னிமரத்தான் துணை நிற்பாராக.

அன்புடன்
மு.கனகரத்தினம் ஐயா குடும்பத்தினர்.
கந்தவனம் கோயிலடி,
பொலிகண்டி, வல்வெட்டித்துறை
C/14648)(10)

## 'குருபூர்ணிமா' பஜனை

உரும்பிராய், ஜூலை 12

உரும்பிராய் இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையம் நடத்தும் 'குருபூர்ணிமா' நிகழ்வுகள் இன்று மாலை 4.30 மணிக்கு மேற்படி நிலையத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பஜனை, 'குருகீதை' வாசிப்பு, தீபாராதனை போன்றன நடைபெறவுள்ளன. (ஓ)

**FREEZER TRUCK விற்பனைக்கு**
Freezer Truck, 14½' Isuzu, 2013 இல் பதியப்பட்டது.
3 - 5 ton load 4HL1/NPR81, - 30°C double cooler,
மிகக்குறைந்த பாவனை, உடனடிப்பணத்தேவைக்காக குறைந்த விலையில் 27.75 Lakhs.
(சி14633) (12.3.6) தொடர்பு: 078 502 9616, wijetel@yagoo.com

## நயினாதீவில் அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், ஜூலை 12

நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்திச் சபையினால் நயினாதீவில் நிறுவப்படவுள்ள தாகசாந்தி நிலையமும் பொது களஞ்சிய அறைகளுக்குமான அடிக்கல் நடும் வைபவம் இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

தொழில் அதிபர் தியாகராசா ஜெகசீலன் இதற்கான அடிக்கல்லை நட்டு வைப்பார். (ஓ-173)

## விடத்தல் விநாயகர் மற்றும் காவாக்குளம் வைரவர் ஆலயங்களின் வருடாந்தப் பொங்கல் விழா - 2014

ஆலய அடியார்களே!

பூநகரி, தம்பிராய்க் கிராமத்தில் வரலாற்றுப் பெருமை பெற்ற மேற்படி ஆலயங்களின் வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் 14.07.2014, 15.07.2014 ஆகிய திகதிகளில் நடைபெறுவுள்ளதால், உபயகாரர்கள் பக்த அடியார்கள் அனைவரையும் தவறாது பங்குபற்றி பொங்கல் விழாவினைச் சிறப்பிப்பதோடு, இறைவனது இஷ்டசித்திகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

எம்பெருமானின் பக்த அடியார்களே! இவ்விழாக் காலங்களில் ஆசார சீலர்களாக வருகை தந்து, இயன்ற சரீர உதவிகளையும், சிவத் திரவியங்களையும் உதவி, மானிடப் பிறப்பின் கிடைத்தற்கரிய பேற்றினை யாவரும் பெற்றுய்ய வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அனைவரும் வருக! அருள் பெறுக!

ஆலய பரிபாலனசபை (0772463027)
விடத்தல் விநாயகர்; காவாக்குளம் வைரவர் ஆலயம்,
தம்பிராய், பூநகரி.

## உடன்படிக்கை கைச்சாத்து

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் இயங்கும் நொதேர்ண் சென்றல் வைத்தியசாலைக்கும் அக்ரகார காப்புறுதி என அழைக்கப்படும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துக்கும் இடையிலான புரிந் துணர்வு உடன்படிக்கை ஒன்று இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நொதேர்ண் சென்றல் வைத்தியசாலையில் கைச்சாத்திடப்படவுள்ளது.

**அறைகள் நாள் வாடகைக்கு**
ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=
(Attached Bathroom)
Hotel Villa City
422, Galle Road, Wellawatte
T.P: 072 255 2222 (சி/14800)(4.6.3)

**வைத்தியம்**
நாட்பட்ட தீராத தலைவலி, ஒற்றைத் தலைவலி, கழுத்து, தோள், முள்ளந்தண்டு, இடுப்பு, முழங்கால், குதி, பாத வலிகள், அடி முள்ளந்தண்டு, எலும்பு விலகுதல், தேய்தல், Allergy கடி, சொறி, Asthma தீராத இருமல், நெஞ்சு சளி, High BP, High Cholestrol, Diabitics, Rheumetoid Arthritis, குழந்தை வேண்டு பவர்க்கான முட்டை வளர்ச்சிக் குறைவு, கருப்பை சுவர் தடிப்பின்மை, 2,3 மாதத்தில் கரு அழிதல், ஒழுங்கற்ற மாதப் போக்கு, அனைத்து நாட்பட்ட நோய்களுக்கும் பக்க விளைவு அற்ற மூலிகை சிகிச்சை.
சித்த வைத்தியர் Dr.R.Sivagurunathan 077 730 1669
நல்லூரில் சந்திக்கலாம். சந்திப்பு இலவசம்.
சனி-ஞாயிறு-திங்கள் (சி/14849) (7.6.3)

CEYLON THEATRES
**இப்பொழுது திரையில்**
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 3D 10.30am, 2.30pm, 6.30pm




Silver 2D 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## மரண அறிவித்தல்

### திருமதி மகோதரி சிவசுந்தரம்



மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது புளியங்கூடல் வடக்கை வதிவிடமாகக் கொண்ட திருமதி மகோதரி சிவசுந்தரம் 10.07.2014 சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வீரிப்பிள்ளை - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற யோகம்மா, மார்க்கண்டு, இராமநாதபிள்ளை, நாகபூரணம், நாகம்மா, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகரத்தினம், ஐயாத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் லலிதா, இராஜகோபால், வாணசோதி, உலகேஸ்வரி (குணேஸ்), இரத்தினகோபால்(விக்னா) ஆகியோரின் அன்புத் தாயும் ஆனந்தராசா, பரமேஸ்வரன், மதிரஜனி ஆகியோரின் அன்பு மாமியும் அனிதா, அஜந்தா (ஜேர்மனி), கிருபாகரன், விஜிதா, கிசோக்குமாரி, கிசோக்குமார், கிஷானி, சிவானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சாருயா, சுஜிந்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை (13.07.2014) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தனக்கிரியைக்காக புளியங்கூடல் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை. வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்.

கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையால் இக்ராட் (ICTAD) பதிவுச்சான்றிதழ் வைத்திருப்போர்களிடமிருந்து கோரப்படுகின்றது. கீழே காட்டப்பட்டவாறு கேள்விப்பத்திர கட்டணத்தையும் கேள்வி வைப்புப்பணத்தினையும் அலுவலக நேரத்தில் செலுத்துவதன் மூலம் கேள்விப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 14.07.2014ஆம் நாள் தொடக்கம் 28.07.2014 ஆம் நாள் வரையிலான அலுவலக நேரம்.
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி :- 29.07.2014 நண்பகல் 12 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி :- 29.07.2014 பிற்பகல் 1.00 மணி
04. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்ததாரர் வலுவிலுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.
05. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
06. கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு **செயலாளர், பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கபட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலமோ குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கச்செய்வதுடன் மறுபிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக விவரங்களை புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம். | குறைந்த அளவு இக்ராட் (ICTAD)பதிவு |
|---|---|---|---|---|
| 01 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையில் மீன் சந்தை அமைத்தல | 49,000.00 | 1,000.00 | M6/C7 |
| 02 | பொது நூலகம் புனரமைத்தல், புதுக்குடியிருப்பு. | 14,000.00 | 1,000.00 | M8/C9 |
| 03 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை சுற்று வேலி அமைத்தல | 4,750.00 | 1,000.00 | M9/C10 |


*கு.மிதிலைநாதன்*
*செயலாளர், பிரதேசசபை,*
*புதுக்குடியிருப்பு.* *10.07.2014* (சி14967) (12.3.6)

**முகவர் தேவை**
(வானில் விற்பனை செய்யக்கூடியவர்கள்)
யாழ்.மாவட்டத்தில் மயில் மார்க் செலான் கற்பூரம், மெழுகுவர்த்தி விற்பனை செய்வதற்கு முகவர்கள் தேவைப்படுகின்றனர்.
இன்று 12 மணிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 077 162 0002 (49876) (7.6.3)

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் சிவபுண்ணியம்

(ஓய்வுபெற்ற மின்சார சபை உத்தியோகத்தர், பருத்தித்துறை)



உடுப்பிட்டி, திருவாதணியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் தெற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சோமசுந்தரம்-அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி சி. மதினி (ஆசிரியை-வ/பிரமண்டு வித்தியாலயம்)காலஞ்சென்ற சி.சசிகுமார் (96-உ.த, யா/ஹாட்லிக் கல்லூரி) சி.மதனகுமார் (முகாமைத்துவ உதவியாளர், யாழ். மாவட்டச் செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சி. சிவாகரன் (ஆசிரியர், வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி) திருமதி ம.ஜெயந்தா ஆகியோரின் பாசமிகு மாமனும், அபிஷ், டக்சிகன், திருஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சோ. நமசிவாயம் அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவரசம் திட்டி இந்து மயானத்துக்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**விபுலானந்தர் சனசமூக நிலையம் அருகில், கரணவாய் தெற்கு, கரவெட்டி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொ.பே:** 077 328 4415
077 494 9984
(C/14975)(10)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை 12
சுன்னாகம், காந்தரூபன் சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் காந்தரூபன் முன்பள்ளிச் சிறுவர்களின் இந்த ஆண்டுக்கான வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறும். நிலையத் தலைவர் இ.குணேஸ்வரன் தலைமையில் இடம் பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் இரா.ஜெயக்குமார் கலந்து கொள்வார். (க)

### 31ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 06.11.1950
மறைவு 12.06.2014

**திருமதி பத்மராணி சுப்பிரமணியம்**

அன்னை அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு உதவிகள் செய்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும், தொடர்புசாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.
அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.07.2014) சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறும்.
நாளை (13.07.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் சபிண்டீகரணக் கிரியைகளும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறும்.
இந்நிகழ்விற்கு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"செம்பாட்டோலை",
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.
குடும்பத்தினர்.
(45597)(12.3.6)

### 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 14.03.1980
மறைவு 29.05.2014

**அமரர் செல்லத்துரை ரமணன்**

கடந்த 29.05.2014 இறைபதமடைந்த செல்லத்துரை ரமணன் அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.07.2014) சனிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
குடும்பத்தினர்.

### ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி கமலம் கதிர்காமு**

மண்ணில் 12.09.1939
விண்ணில் 07.07.2009

கண்ணீரில் கரைந்ததம்மா ஆண்டுகள் ஐந்து
கண்முன்னே நீங்களில்லை உறவாட எம்மோடு
உங்களை எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும்
உங்கள் நினைவுகளே எம்மையிங்கு ஆளுதம்மா
இறுதிவரை எம்மோடு சேர்ந்திருப்பீர்கள் என்றிருந்தோம்
இடைநடுவில் தவிக்கவிட்டு எங்கே அம்மா சென்றீர்கள்.
எம் அம்மாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.
கைதடி மேற்கு, கைதடி.

## முழுநிலா நிகழ்வு

முள்ளியவளை,ஜூலை 12
வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மாதாந்த முழுநிலா நிகழ்வு உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது.
முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.திருஞானம் கலந்து கொள்வார்.
இந்த நிகழ்வின்போது தமிழ், சிங்களப் பாரம்பரிய கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-433)

## பரிசில் தினம்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வருடாந்த பரிசில் தினம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் கல்லூரி அதிபர் எஸ்.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசா கலந்து கொள்வார்.
குறிப்பு:- இந்தச் செய்தி நேற்றைய உதயனில் வெள்ளியன்று நடைபெறும் என்று வெளியாகி இருந்தது. அது தவறாகும். (க)

## குருபூர்ணிமா தினம்

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சேவா நிலையத்தில் குருபூர்ணிமா தினமும், 47 ஆவது ஆண்டு விழாவும் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளன. (க)

## யாழ்.ஆஸ்பத்திரியில் கண்டெடுத்த நகைகள்

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் கைச்சங்கிலி ஒன்றும், மோதிரம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து அடையாளம் காட்டிப்பெற்றுக்கொள்ளுமாறு பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ)

## பருத்தித்துறையில் முதியவரின் சடலம்

பருத்தித்துறை தட்டாதெரு பகுதியில் வீட்டில் தனியே வசித்து வந்த வயோதிபர் ஒருவர் மூன்று நாள்களுக்கு முன்னர் இறந்த நிலையில் கடந்த புதன்கிழமை காலை அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
அதே இடத்தைச் சேர்ந்த சி.சிவபாதம் (வயது-76) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் நீண்டகாலமாகத் தனிமையில் வசித்து வந்ததாகவும், இவரது வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசியதை அடுத்து அயலவர்கள் சென்று பார்த்தபோது இறந்த நிலையில் சடலமாக அவர் கிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.
பருத்தித்துறைப் பொலிஸார் மற்றும் இறப்பு விசாரணை அதிகாரி திருமதி அஞ்சலா வின்சன் தயான் சடலத்தைப் பார்வையிட்டனர். சடலத்தைப் பருத்தித்துறை ஆதார வைத்தியசா லைக்கு எடுத்துச் சென்று பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த இறப்பு விசாரணை அதிகாரி பணித்தார். (ஒ-173)

## கிணற்றில் விழுந்த கிராம அலுவலருக்கு தலையில் காயம்

தண்ணீர் அள்ளச் சென்ற கிராம அலுவலர் கால் சறுக்கி 30 அடி ஆழக் கிணற்றில் வீழ்ந்ததில் தலையில் காயமேற்பட்டது.
இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை மீசாலை வடக்கு வேம்பிராயில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தென்மட்டுவில் கிராம அலுவலரான இராசரத்தினம் சிவதாசன் (வயது - 45) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.
இதேவேளை கடமைக்குச் சென்றபோது மோட்டார் சைக்கிள் மீது குரங்கு பாய்ந்ததில் அதில் பயணித்த ஆசிரியை தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி வடக்கில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர் மீசாலை மேற்கைச் சேர்ந்தவர். காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ-9)

## சேவையிலிருந்து ஓய்வு

முல்லைத்தீவு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் வி.கைலேஸ்வரன் ஓய்வுபெற்றுள்ளார். 1992ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை கணக்காளர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த இவர் வவுனியா மாவட்ட செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு முதலில் கணக்காளராக நியமிக்கப்பட்டிருந்தார். தொடர்ந்து யாழ்.மாவட்டத்தின் சங்கானை பிரதேச செயலகம் மற்றும் வடக்கு மாகாண சபையில் முக்கிய அமைச்சுக்களிலும் பிரதம கணக்காளராகக் கடமையாற்றி உள்ளார். இவர் யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்தவர். (ஒ-288)

### 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 23.03.1944
மறைவு : 28.06.1999
திதி: பூரணை 12.07.2014

**செல்வி பரமேஸ்வரி செல்லத்துரை**

அன்பின் பிறப்பிடமே!
அமைதியின் திருவுருவே!
உறவுகளை ஒன்றாக்கி
வாழ வைத்த தெய்வமே!
எல்லோரையும்
நல்வழிப்படுத்திய உத்தமியே!
ஆண்டுகள் பதினைந்து
ஓடி மறைந்தாலும்
உங்கள் திருவுருவம் எமது
மனதை விட்டு அகலாது

"உங்கள் ஆத்மா சாந்திபெறத் தென்கோவை வீரபத்திரரைப் பிரார்த்திக்கின்றோம்"

"தாய் அகம்,
பழைய வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்".
உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் செல்லப்பா பத்மநாதன்**



Former Mechnical Foreman
Paranthan Chemical
Cooperation)

திதி: பௌர்ணமி (12.07.2014)
மலர்வு 27.06.1934
உதிர்வு 23.06.2014

அன்பினால் அரவணைத்து பண்பினால் வழிநடத்தி
பாசத்தோடு எம்முடன் வாழ்ந்த எம் தந்தையே!
ஓர் ஆண்டென்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
மாறாது உங்கள் நினைவு.
இம் மண்ணகத்தில் எம்மை வழிநடத்தி வாழவைத்தவரே!
விண்ணகத்தில் இருந்தும் எம்மை வழிநடத்தி வாழவைத்திடும்
இறைவன் திருவடியில் இளைப்பாற
உங்களுக்காகப் பிராத்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

### எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 25.07.1923
உதிர்வு 12.07.2006

**Rev. SR. M. ANTONINA. A.C**
Principal St John Bosco, Jaffna - 1970 - 1983

ஆண்டுகள் எட்டு பறந்ததென்றே புலம்புவதேன்
"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மானிலத்தீர்" என எண்ணி
விண்ணுலகம் சென்ற கார்மேல் சபைக் கன்னிகையே
ஆண்டவனுடன் உம் வாழ்வு நித்தியமும் மகிழ்ந்திடவே
மண்டியிட்டு வேண்டுகின்றோம் உற்றாரும் உறவினரும்.

புலோலி.
குடும்பத்தினர்.

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

45 நாள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொ.பே. 0774244365

**விற்பனைக்குண்டு**

ஐஸ் கிறீம் தொழிற்சாலைக்குரிய பொருள்களுடன் இரண்டு வான்களும் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 0779145916

**2 மணித்தியாலத்தில்**
**கணினி திருத்தம்**

உங்கள் வீடுகளுக்கும் வந்து திருத்தி தருகிறோம்.

GUNAA BEST PC Computer Repair
52 Hospital Road Jaffna. 0779086737

## தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன



மட்டக்களப்பு, ஜூலை 12

வவுணதீவுப் பிரதேசத்தில் போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் ஞானம் பவுண்டேசன் நிறுவனத்தால் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தையல் பயிற்சியினைப் பூர்த்தி செய்த 79 பெண்களுக்கு இந்த தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றின் பெறுமதி 17 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா என்றும், மேலும் 10 மிகவும் வறிய குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் வாழ் வாதாரத்துக்கான மானியம் வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
**ஆறுமுகம் துரைராசா**



பிறப்பு 24 . 05 . 1949
இறப்பு 12 . 06 . 2014

கடந்த 12.06.2014 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (12.07.2014) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
இராமாவில், கொடிகாமம்.

குடும்பத்தினர்.

(43686)(7.6.3)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**குட்டியன் அப்புத்துரை**



(முன்னாள் உரிமையாளர்- ஜெயா கடைச்சல் தொழிற்சாலை தற்காலிக உரிமையாளர்- எயர்லைன்ஸ் பினான்ஸ் கம்பனி- கட்டடம்-வவுனியா.

தோற்றம்
10.04.1939

மறைவு
07.07.2009

திதி : 12.7.2014 (சனிக்கிழமை)

குடும்பத்தின் குலவிளக்காய் அன்பின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் - திகழ்ந்த எம் இனிய உறவே!
நீங்கள் மீளாத்துயில் கொண்டு ஐந்து ஆண்டுகள்
ஓடி மறைந்துவிட்டதென்று நம்ப முடியவில்லை
எம் மனதில் சோகம் ஆழ்கடல் போல் இருந்தாலும்
நாளும் பொழுதும் எம் இதயத்தில்
அகல்விளக்காய் பிரகாசித்துக் கொண்டு இருக்கிறீர்கள்.
ஆற்றுவார் தேற்றுவார் பலர் இருந்தும்
அனலிடைப்பட்ட புழுவாய் துடிக்கும் எங்களுக்கு
உங்களுக்கு ஒப்பாக யாரைத் தான் காண முடியும்.

கதிரிப்பாய், அச்சுவேலி.
பழைய முகவரி:
214, கண்டி வீதி, வவுனியா.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்



### கந்தசாமி சத்தியமூர்த்தி

(Pharmacist, Kalubowila Teaching Hospital)

புத்தூரை பிறப்பிடமாகவும், புத்தளத்தையும், கொழும்பையும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சத்தியமூர்த்தி அவர்கள், கடந்த 10.07.2014 அன்று காலமானார். அன்னார் புத்தூர் வாதரவத்தையை சேர்ந்த கந்தசாமி, அமரர் அருந்ததியம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும்; வல்வெட்டியை சேர்ந்த அனுஷாவின் (Staff - Teacher Fathima Muslim Ladies College, Colombo - 12) அன்புக் கணவரும்; வல்வெட்டியை சேர்ந்த அமரர்கள் பாலசிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் மருமகனும்; பானுஜா, வினோஜா, ஜானகி ஆகியோரின் பாசமிகு தந்தையும்; சத்தியசீலன் (Secretary, UC, Vavuniya), ஈஸ்வரன் (Municipality, Jaffna), புஸ்பாதேவி, லலிதானந்த தேவி, அமரர் இலக்குண தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும்; பாலேஸ்வரன் (London), செல்வச் சந்திரன் (Germany), பிரியா (London), அகில்ராணி, உதயகுமார், பிரேமாவதி, அருளானந்தம், கனகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும்; வாமளாதேவி (London), சிறீகரன் (London), ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை 13.07.2014 அன்று கல்கிஸ்ஸை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, திங்கட்கிழமை காலை இறுதிக்கிரியைகள் ஆரம்பித்து நண்பகல் 1.00 மணியளவில் தெகிவளை - கல்கிஸ்ஸை பொது மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சக ஊழியர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல் : கஜேந்திரன். ஶ்ரீ
0112 360 085

தகவல்: மனைவி
மக்கள்

## மரண அறிவித்தல்

### திருமதி றஜினி(பேபி) சிவகுருநாதன்



4 ஆம் வட்டாரம் முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றஜினி(பேபி) சிவகுருநாதன் 02.07.2014 புதன்கிழமை சுவிற்ஸர்லாந்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை - ஜெயதேவி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முகநாதன் - அருளம்மா தம்பதியரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற பரமசாமி - அழகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ஜெயரஞ்சிதம் காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் இராஜசிறீ, காலஞ்சென்ற இராஜகலா மற்றும் ஜெயந்தி, ஜெயபாலன், றஜி, கவித்தா (ஜேர்மனி), தர்சினி, சுயீத், அஜந்தன், ரொஷானி, லக்ஷன் (சுவிஸ்), தேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் யோகதேவி, சோமதாசா, செல்வராணி, கமலாதேவி, சுதர்சன், நிர்மலாதேவி (மாலா), செல்வராஜா (சுவிஸ்), காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் யோகநாதன் ஆகியோரின் பெறாமகளும் காலஞ் சென்ற பாலகிருஷ்ணன், காந்திமதி ஆகியோரின் பாசமிகு மருமகளும் நாகராசா சிவநேசன், மாலினி, சிவாஜினி, ஜீவராஜா (ஜேர்மனி), சஜீவன், கிருஷாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் வினோத் (சுவிஸ்), திரீஷன் (ஜேர்மனி), பிறிக்ஷா (ஜேர்மனி), தினு, தினரா ஆகியோரின் சிறிய தாயும் சுகந்தினி, கௌதமி, கபிலன், கிறிஸ்ரலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் முள்ளியவளை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக கற்பூரப்புல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே. இல.: 0779184160,
0770775530
0774924579

தகவல்:
நாகராஜா - மைத்துனர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**சமையல் வேலையாள் தேவை**

4 பேரைக் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றுக்கு நன்கு சமையல் வேலை தெரிந்த (சைவ, அசைவ உணவுகள்) பெண் வேலையாள் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொ.பே.: 0771251155

**வேலை ஆள்கள் தேவை**

(ஆண், பெண், இருபாலாரும்) வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு ராசி கலக்ஷன் மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### கந்தையா சிவானந்தன்

(முன்னாள் வர்த்தகர், முன்னாள் கணக்காளர், பொறுப்பாளர், ஶ்ரீ பூபால விநாயகர் ஆலயம், பேலிய கொடை)

தெல்லிப்பழை, பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சிவானந்தன் கடந்த (08.07.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கந்தையா - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் வசாவிளானைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நன்னிப்பிள்ளை தம் பதியரின் அன்பு மருமகனும் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் கவிதா, பொற்கவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நந்தகுமார், ஜெயகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் கவின், விகாஷா, நந்திகா, அபிஷா அனுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் சச்சிதானந்தம், புனிதவதி, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவயோகநாயகி, காலஞ்சென்ற பாலரத்தினம் மற்றும் பத்மநாதன், சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், தர்மலிங்கம் மற்றும் மகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பன்னாலை,
தெல்லிப்பழை.
தொ.பே.: 021 205 9236
0716402544

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

# புகலிடக்கோரிக்கையாளர்கள் பிழையாக வழிநடத்தப்படுகின்றனர்

## ஆஸி. புகலிடக் கோரிக்கையாளர் முகாமின் முன்னாள் பணிப்பாளர் குற்றச்சாட்டு

மனித உரிமை ஆர்வலர்கள் புகலிடக் கோரிக்கையாளர்களைப் பிழையாக வழிநடத்தி வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஆஸ்திரேலிய புகலிடக் கோரிக்கையாளர் முகாமொன்றின் முன்னாள் பணிப்பாளரான கிரெக் லேக். புகலிடக் கோரிக்கையாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்களின் அறிவுறுத்தல்களை பின்பற்றியே தற்கொலை முயற்சி, சுய காயங்களை ஏற்படுத்திக் கொள்ளல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கிறிஸ்மஸ் தீவுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளபத்து தாய்மார் தற்கொலை செய்து கொள்ளப் போகின்றோம் என்று அண்மையில் எச்சரிக்கை விடுத்திருந்தனர். அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே கிரெக் லேக் இவ்வாறு தெரிவித்துள்ளார். மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர் உரிமை அமைப்புக்களின் அழுத்தம் காரணமாகவே புகலிடக் கோரிக்கையாளர்கள் தங்களைக் காயப்படுத்திக் கொள்ளவோ அல்லது தற்கொலைசெய்து கொள்ளவோ முயற்சிக்கின்றனர். அந்தஅமைப்புகள் அரசியல் இலாபமீட்டவே இவ்வாறு செயற்படுகின்றன. இந்த விடயம் குறித்து குடிவரவு குடியகல்வுத் திணைக்களமும், எல்லைப் பாதுகாப்புப் பிரிவும் கவனம் செலுத்த வேண்டும்- என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (ற)

# தொடர்ச்சிகள்

### காணி

யாளர் பொதுமக்களின் காணிகளை அளவீடு செய்யவில்லை என்றும், சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் காணியையே அளவீடுசெய்யப் போவதாகவும் தெரிவித்தார். அதனை மறுத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும், நில அளவையாளரிடம் நீங்கள் எந்தக் காணியை அளவீடு செய்யப் போகின்றீர்கள் என்று கேள்வியெழுப்பினர்.

அதற்கு அவர் 183 ஏக்கர் காணியையே அளவீடுசெய்யப்போவதாகத் தெரிவித்தார். அதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்களின் காணிகளை அளவீடு செய்வதை அனுமதிக்க முடியாது என்று உறுதியாகத் தெரிவித்தனர். இதன் பின்னர், மற்றுமொரு கடற்படை மேலதிகாரி சம்பவ இடத்துக்கு வருகை தந்தார்.

அவர் "இது எங்களின் காணி. அதனையே அவர் அளவீடு செய்யப் போகின்றார்" என்று நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தார். அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், "இது எமது மக்களின் காணிகள். இதனை அளவீடு செய்ய முடியாது" என்று பதிலளித்தனர். அதற்குப் பதிலளித்த கடற்படை அதிகாரி, "இந்தக் காணியில் நாம் நீண்டகாலம் இருக்கின்றோம். பாதுகாப்பு அமைச்சுக்கும் இது தெரியும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தெரியும்" என்று குறிப்பிட்டார்.

அதன் பின்னர், "நீங்கள் யாரும் கடற்படை முகாம் எல்லைக்குள் வரமுடியாது. அவ்வாறு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். நீங்கள் வெளியில் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். உள்ளுக்கு வர முடியாது" என்று தெரிவித்தார்.

இதன் பின்னர் நிலஅளவை செய்ய வந்தவர், தான் திரும்பிச் செல்வதாகத் தெரிவித்தார். இதனையடுத்து பொதுமக்கள் கலைந்து சென்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், திருமதி அனந்தி சசிதரன் மற்றும் வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், வலி.தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷ் மற்றும் பலர் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

ஊடகங்களுக்கு மிரட்டல்

நேற்றைய இந்தப் போராட்டம் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை கடற்படையினர் நேரடியாகவே எச்சரிக்கை விடுத்தனர். ஒளிப்படங்கள் எடுக்கவோ அல்லது ஒலிப்பதிவு செய்யவோ முடியாது என்று தெரிவித்தனர். அத்துடன் ஊடகவியலாளர்களை கடற்படையினர் ஒளிப்படங்கள் எடுத்தனர். (ற-5)

### மோட்டார்

விபத்தில் உயிரிழந்தமைக்கு, குறித்த பஸ்ஸுக்கு பிரேக் இல்லாததும் காரணம் என்று பொலிஸார் நீதிமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். ஆயினும் அவர்கள் அவற்றைப் பின்பற்றத் தவறுகின்றனர். தற்போதும் பல மாணவர்கள் வீதியில் சமாந்தரமாகப் பயணிக்கின்றனர். மாணவர்கள் போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றிச் செயற்படுதல் வேண்டும். மாணவர்கள் வீதி விபத்துக்களில் சிக்கி உயிரிழப்பதை தவிர்க்க மாணவர்களது பெற்றோரும் அவர்களுக்கு அது தொடர்பில் விழிப்புணர்வூட்ட வேண்டும்"- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

### கடந்த

திருடப்பட்டுள்ளன. அல்வாய் வடக்கில் வீடு புகுந்து பெறுமதி மிக்க சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இவை தவிர அளவெட்டி மேற்கில் உள்ள கோயில் உடைத்து திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற-4)

### வட்டி

தையும் நிறுத்துங்கள். அரசில் பதிவு செய்யப்பட்ட முகவர்களூடாக மாத்திரம் வெளிநாட்டுக்குச் செல்வதற்கு முயற்சியுங்கள்"- என்று தெரிவித்தார். (ற-4)

### ஆலயத்துக்கு

தினம் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். மக்களை குழுக்களாகச் சந்தித்த. ஏற்கனவே இராணுவத்தில் இணைந்து கொண்ட யுவதிகள் இந்த ஆள் சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மயிலிட்டியிலுள்ள மூன்று ஆலயங்களைச் சென்று பார்வையிடுவதற்கு இராணுவத்தினர் நேற்று அனுமதி வழங்கியிருந்தனர். இதற்கமைய அங்கு மக்கள் இராணுவத்தினரின் பேருந்துகளில் ஏற்றிச் செல்லப்பட்டிருந்தனர். ஆலய வழிபாடுகள் நடைபெற்று பின்னர் மக்கள் கூட்டம் கூட்டமாக இளைப்பாறும்போதே இராணுவ ஆள்சேர்ப்புக்கான பரப்புரை முன்னெடுக்கப்பட்டது.

கண்டியிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிகின்றோம் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட பல இளம் பெண்களே, இராணுவ ஆள்சேர்ப்புக்கான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தமது பிரதேசங்களில் (கண்டியில்) இராணுவ ஆள்சேர்ப்பு நடைபெறுகின்றது. அதற்கு பல பெண்கள் விரும்பிச் செல்கின்றனர். அதே போன்று இங்கும் ஆள்சேர்ப்பு நடைபெறுகின்றதா? அவ்வாறு இடம்பெற்றால் தம்மையும் சேர்த்துவிடுமாறு தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சில இடங்களில் வைத்து, இராணுவத்தில் இணைந்தால் கிடைக்கும் வரபிரசாதங்கள் மற்றும், இராணுவத்தில் இணைந்தவர்கள் பெற்றுக் கொண்டுள்ள வரபிரசாதங்கள் குறித்தும் தெரிவித்துள்ளனர்.

ஆலயம் அழிப்பு

அதேவேளை, கடந்த முறை ஆலயங்களைச் சென்று பார்வையிட அனுமதித்த போது இருந்த மயிலிட்டி மாதா ஆலயம் தற்போது அழிக்கப்பட்டுள்ளது தெரிவிக்கப்படுகின்றது. (ற-5,21)

### சாட்சிகளை

வித்திருந்தார். ஆணைக் குழுவினர் அந்தப் பெண்மணியிடம் உங்கள் கணவர் கடத்தப்பட்ட காலப்பகுதியில் அந்தப் பகுதியை நிர்வாகம் செய்து கொண்டிருந்தது இராணுவமா? தமிழீழ விடுதலைப் புலிகளா? என்று கேட்டபோது, சாட்சியமளித்த பெண்மணி, அந்தப் பகுதியை ஈ.பி.டி.பியினரே கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் என்று கூறியிருந்தார் என்று செய்திகள் வெளியாகி இருந்தது.

அந்தச் செய்தி உண்மையாயின் அந்தக் கூற்றின் உண்மைத் தன்மையை வெளிக்கொணர்வதற்கு அந்தச் சாட்சியினை குறுக்கு விசாரணை செய்ய எனது சட்டத்தரணிகளுக்கு சந்தர்ப்பம் வழங்க முடியுமா? என்பதை எமக்கு அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஈ.பி.டி.பி அரசியல் விவகாரங்களில் செயற்படும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாகும். எமது கட்சி எக்காலத்திலும், எந்தப் பிரதேசத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவில்லை. ஆகையினால் அந்த சாட்சியினால் கூறப்பட்ட வாக்கு மூலமானது உண்மைக்குப் புறம்பானதாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஆணைக் குழுவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரிடம் கேட்ட போது, மேற்படி கடிதம் எமக்கு கிடைக்கப் பெற்றது. ஆணைக்குழு முன்பாக சாட்சியமளித்த எவரையும் யாரும் விசாரணையோ அல்லது குறுக்கு விசாரணையோ செய்ய முடியாது. ஆணைக் குழு மாத்திரமே விசாரணை செய்ய முடியும். இதனை நாம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எழுத்து மூலம் அனுப்பி வைத்துள்ளோம் என்று குறிப்பிட்டார். (ற-5)

### நீதிமன்றின்

நகுலேஸ்வரத்தில் கடற்படையின் தேவைக்காக காணியை சுவீகரிக்கும் நோக்குடன் அளவீடு செய்வதற்காக நில அளவைத் திணைக்களத்தினர் நேற்று அந்தப் பகுதிக்கு வந்திருந்தனர். அப்போது அங்கு திரண்ட மக்களின் எதிர்ப்பினால் அவர்கள் திரும்பிச் சென்றனர். அங்கு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"அரசின் உத்தரவின் பேரில் நிலங்களைக் கைப்பற்றுவதற்காக நில அளவையாளர்கள் வந்திருந்தார்கள். மக்கள் இது தங்களுடைய நிலம். இதனை எடுக்க வேண்டாம் என்று எதிர்ப்புத் தெரிவித்தனர்.

மக்களுடைய காணிகளில் அவர்களை குடியேறவிடாமல் கடற்படையினர் தடுத்துக் கொண்டிருக்கின்றனர். உயர் நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், இந்த நிலங்களை விடுவிக்குமாறு இடைக்கால தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மக்கள் காணியில் மக்கள்தான் குடியேற வேண்டும். அந்தத் தீர்ப்பை உதாசீனப்படுத்தியே இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இன்று எங்கள் எதிர்ப்பினால் திரும்பியிருந்தாலும், எவ்வாறான சூழ்சிகளை மேற்கொண்டு இந்தக் காணிகளை கையகப்படுத்தப் போகின்றார்களோ தெரியாது.

போர் முடிந்து 5 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் லட்சோப லட்சம் மக்கள் இன்னமும் தங்கள் சொந்த நிலங்களில் குடியமராமல் இருக்கின்றனர். கடற்படையினர், விமானப்படையினர், இராணுவத்தினர் என்று முப்படையினரும், எங்கள் மக்களின் காணிகளை கைப்பற்றி வைத்திருக்கின்றார்கள். இதனாலேயே மக்களால் அவர்களது சொந்த நிலங்களில் குடியேற முடியாமல் இருக்கின்றது"- என்று அங்கு அவர் மேலும் தெரிவித்தார். (ற)

### வடக்கு

ஆளுநரின் பதவிக்காலம் முடிவடைந்தபின்னர், அவருக்கு பதவி நீடிப்பு வழக்கப்படமாட்டாது என்று வடக்கு மாகாண முதலமைச்சரிடம், ஜனாதிபதி உறுதியளித்திருந்த நிலையிலேயே, ஆளுநர் சந்திரசிறி, நேற்று மதியம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டார்.

இராணுவப் பின்னணிகொண்ட ஆளுநரான ஜி.ஏ.சந்திரசிறியை மாற்றுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், வடக்கு மாகாண சபையும் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்திருந்தது. குறிப்பாக, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கடந்த ஜனவரி 2 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசும் போது, ஆளுநரின் பதவிக் காலம் முடிவடைந்ததும் புதிய ஆளுநராக சிவில் ஆளுநர் நியமிக்கப்படுவார் என்று ஜனாதிபதி உறுதி மொழி வழங்கியிருந்தார்.

இருப்பினும் வழங்கப்பட்ட உறுதி மொழிக்கு மாறாக, தற்போதைய ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியையே, ஜனாதிபதி மஹிந்த வடக்கின் ஆளுநராக நியமித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் 52 ஆவது பிரிவின் கட்டளைத் தளபதியாக 2002 ஆம் மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ். மாவட்ட இராணுவத்தளபதியாக பொறுப்பேற்றார். 2009 ஆம் ஆண்டு வரையில் அந்தப் பதவியில் நீடித்த அவர், 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி வடக்கின் முதலாவது ஆளுநராகப் பதவியேற்றுக் கொண்டார். (ற-5)

### ஆவணமின்றி

இந்த நடவடிக்கை நேற்று வெள்ளிக்கிழமையில் இருந்து நடைமுறைப்படுத்தபட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

"யாழ். மாவட்டத்தில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் எந்த வகைசார் வாகனங்களாக இருப்பினும் உரிய ஆவணங்கள் இன்றிப் பயணிப்போர், தலைக்கவசம் இன்றிப் பயணிப்போர் மற்றும் வீதியில் உரிய விதிமுறைகளைப் பின்பற்றாது வாகனங்களைச் செலுத்திச் செல்வோருக்கு எதிராக இதுவரை கடுமையான நடவடிக்கையை எடுக்கவில்லை.

அவர்களுக்கு வழங்கப்பட்ட மன்னிப்பு, விட்டுக் கொடுப்பு அனைத்தும் போதுமானதாகவே உள்ளது. அதனால் இன்றிலிருந்து (நேற்று) உரிய ஆவணங்கள் இன்றிப் பயணிப்போர், வீதியில் விதிமுறைகளை மீறிப் பயணிப்போர், தலைக்கவசம் அணியாது பயணிப்போர் மற்றும் குறித்த அளவுக்கு மேல் ஆள்களை ஏற்றிச் செல்வோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் அனைவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும். அதில் மாற்றம் இருக்காது"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

### தமிழ்

னுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே சந்திப்பொன்று நடைபெற்றது. அந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரையும், வடக்குப் பிரதம செயலரையும் மாற்றுவதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். தற்போது அந்த உறுதிமொழியை அவர் தூக்கியெறிந்துள்ளார்.

தன் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றாததன் மூலம் அவர் தன்னையே அவமரியாதைக்கு உட்படுத்தியுள்ளார்"- என்று தெரிவித்தார்.

ஆளுநரின் நியமனம் குறித்துக் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமசந்திரன்,

"வடக்கு மாகாண சபையை முழுமையாக முடக்குவதற்கும், இராணுவக் கட்டமைப்பை வடக்கில் தொடர்ந்து பேணுவதற்குமாகவே ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியின் பதவி நீடிக்கப்பட்டுள்ளது. இதனூடாக இந்த அரசு, வடக்கு மாகாணத்துக்கு எதையும் செய்ய மாட்டோம் என்பதையும், எவர் என்ன சொன்னாலும் கேட்கப் போவதில்லை என்பதையும் தெளிவாக - பகிரங்கமாகச் சொல்லியுள்ளது"- என்று தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது;

"வடக்கு மாகாணத்தில் மத்திய அரசின் - மஹிந்த அரசின் நிகழ்சி நிரலை கொண்டு செல்வதற்கு ஏற்ற ஆளுநரே அவர்களுக்குத் தேவையாகவுள்ளது. இராணுவக் கட்டமைப்பை தொடர்ந்து பேணவும், இராணுவ முகாம்களுக்கு காணிகளை சுவீகரிக்கவும், இராணுவத்தினரை தொடர்ந்து இங்கு நிலை நிறுத்துவதற்கும் இராணுவப்பின்னணிகொண்ட - கட்டளையை ஏற்றுச் செயற்படுகின்ற - ஒருவரே தேவையாகவுள்ளார்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலை இந்த அரசு விரும்பி நடத்தவில்லை. சர்வதேச அழுத்தம் காரணமாகவும் குறிப்பாக இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே இந்தத் தேர்தல் நடத்தப்பட்டது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றிருந்தது. இதுவரை காலமும் வடக்கில் முதலமைச்சரின் கீழ், மக்களால் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளின் கீழ் ஒரு நிர்வாகமும், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநரின் கீழ் இன்னொரு நிர்வாகமும் இயங்கி வந்தது.

இந்த நிர்வாக நடைமுறைகள் மக்களால் தேர்வு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபையை முடக்கியிருந்தது. வடக்கு முதலமைச்சரே பகிரங்கமாக, வடக்கு மாகாண ஆளுநரினால் பல்வேறு தடைகள் போடப்பட்டு வருவதாகக் குற்றம் சாட்டியிருந்தார். தற்போது வடக்கு மாகாண சபையை முழுவதுமாக முடக்குவதற்காக, தற்போதைய ஆளுநருக்கு ஜனாதிபதி பதவி நீடிப்பு வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்திய இந்தியாவுக்கு, அந்த மாகாணசபையை திறம்பட இயங்க வைக்க வேண்டிய பெரிய பொறுப்பு இருக்கின்றது. யார் சொன்னாலும் கேட்பதில்லை என்ற மனநிலையில் இலங்கை அரசு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தியாவின் புதிய அரசு மாகாணங்களுக்கு அதிகாரங்களை பரவலாக்குமாறு சொல்லியும் கூட இந்த அரசு கேட்பதாக இல்லை. தான் என்ன நினைக்கின்றதோ அதையே செய்கின்றது. இதனை இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதுடன், மாகாண சபையைத் திறம்பட நடத்துவதற்கு சர்வதேசசமூகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் - என்று தெரிவித்தார். (த-ற-5)




# முஸ்லிம்களுக்கு எதிரான பரப்புரைகள் வன்முறைகளை உடன் நிறுத்துங்கள்

## முஸ்லிம் அமைச்சர்கள் கூட்டாக கோரிக்கை

கொழும்பு,ஜூலை 12

இலங்கையில் முஸ்லிம் சமூகம் பயங்கரவாதத்தை ஆதரிக்கும் சமூகமல்ல. சுயலாபம் கருதி இலங்கை முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்து செயற்படும் தரப்பினர் முஸ்லிம் மக்களுக்கு எதிரான தமது செயற்பாடுகளையும், ரப்புரைகளையும், வன்முறைகளையும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று அரசில் அங்கம் வகிக்கும் முஸ் லிம் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேசிய ஐக்கியத்தைப் பலப்படுத்துவதற்கான எவ்வகையிலான செயற்றிட்டங்களுக்கும் நாம் உதவுவதற்குத் தயாராக இருக்கின்றோம். வன்முறைகள் அற்ற சுதந்திரமான சமூகமொன்றை உருவாக்குவதற்கும், அதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் பங்களிப்பதற்கும் நாம் தயாராகவுள்ளோம். எமக்கிடையே நல்லுறவை மேம்படுத்துவதற்கான காலகட்டம் இதுவாகும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப்ஹக்கீம், அந்தக் கட்சியின் தவிசாளரும் உற்பத்தி திறன் அபிவிருத்தி அமைச்சருமான பஷீர் சேகுதாவூத், சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சருமான ரிஷாத் பதியுதீன், தேசிய காங்கிரஸின் தலைவரும் உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ் ஆகியோர் ஒன்றிணைந்து கையொப்பமிட்டு விடுத்துள்ள கூட்டறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப் பட்டுள்ளது.

> வன்முறைகள் அற்ற சுதந்திரமான சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கும் அதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் பங்களிப்பதற்கும் நாம் தயாராகவுள்ளோம்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முஸ்லிம் சமூகத்தில் பயங்கரவாத மற்றும் தீவிரவாதக் குழுக்கள் இயங்குவதாக அண்மைக்காலமாக பரப்புரை செய்யப்படுகிறது. முஸ்லிம் சமூகம் நூற்றாண்டு காலமாக இந்த நாட்டில் சமாதானத்துடனும் ஒற்றுமையுடனே வாழ்ந்து வருகிற சமூகமாகும். முஸ்லிம்கள் எமது தாய் நாட்டின் ஐக்கியத்துக்கு என்றும் பங்களித்து வந்திருக்கிறார்கள்.

அண்மையில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனரீதியான பயங்கரமான தாக்குதல்களையடுத்து தற்போது மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்தநிலையில் முஸ்லிம்களுக்கு எதிரான பரப்புரைகள் காயத்துக்கு மேல் உப்புத் தடவுவது போன்றதாகும்.

பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நாட்டில் சட்டத்தையும் நீதியையும் நடைமுறைப்படுத்துவார்கள் என்பது எமது தீவிர நம்பிக்கையாகும். முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகள் என்ற வகையில் இலங்கை முஸ்லிம் சமூகம் பயங்கரவாதத்தை ஆதரிக்கும் சமூகமல்ல என்பதை உறுதியாகக் கூறுகிறோம்.

மேலும் இலங்கை முஸ்லிம் சமூகம் எந்தச் சூழ்நிலையிலும் எந்தவொரு பயங்கரவாதக் குழுவையும் ஊக்குவிக்கவில்லை. இந்தியாவுக்கு எதிராக மாத்திரமல்ல, எந்த நாட்டுக்கும் சமூகத்துக்கும், மக்களுக்கும், எதிராக பயங்கர வாதத்தை ஊக்குவிக்கவோ செயற் படவோ இல்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறோம் என்றுள்ளது. (ஓ)









# சுஸ்மா - பீரிஸ் டில்லியில் நேற்று சந்திப்பு மீனவரின் பிரச்சினை குறித்தும் ஆராய்வு

புதுடில்லி, ஜூலை 12
இந்தியாவுக்கு உத்தியோபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜை நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளார். பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், தமிழருக்கான அரசியல் தீர்வு, தமிழக மீனவர் பிரச்சினை போன்றவை குறித்து விரிவாக ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவுக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியா சென்றிருந்தார். அதன்பின்னர் நடைபெறும் இந்தியா- இலங்கை இடையேயான 2ஆவது உயர்நிலை சந்திப்பு இதுவாகும்.
இந்தச் சந்திப்பின்போது, இலங்கைக்கு பிரதமர் மோடி வருகை தர வேண்டும் என்று பீரிஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

### மீனவர் பிரச்சினை

சந்திப்பின்போது தமிழக மீனவர் பிரச்சினை குறித்து ஆராயப்பட்டது. தமிழக மீனவர்கள் கைது விவகாரத்தில் இலங்கை அரசு துரித நடவடிக்கை எடுத்தமைக்காக பீரிஸிடம் நன்றி தெரிவித்துள்ளர் சுஷ்மா சுவராஜ்.

### ஐ.நா. விசாரணைக்கு எதிர்ப்பு

இந்தச் சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் சையத் அக்பருதீன், இலங்கை உள் விவகாரங்களில் மனித உரிமைக்குழுக்கள் தலையிடக் கூடாது என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்று இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் தெரியப்படுத்தப் பட்டது. இருநாட்டு முதலீடுகள் தொடர்பாகவே சுஷ்மா சுவராஜும், பீரிஸும் முக்கிய ஆலோசனை நடத்தினர் - என்று தெரிவித்துள்ளார்.

### சுஸ்மா இலங்கைக்கு

சந்திப்பின் முடிவில், சுஸ்மா சுவராஜை இலங்கை வருமாறு அழைப்பு விடுத்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ். அந்த அழைப்பை சுஸ்மா ஏற்றுக் கொண்டுள்ளார் என்றும் - அவர் இலங்கை வருகை தரவுள்ள திகதி விரைவில் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிய வருகின்றது. (ற)

# இந்திய மீனவர்கள் 37 பேர் விடுதலை

மன்னார், ஜூலை 12
தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 37 பேரையும் மன்னார் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்துள்ளது.
சட்ட மா அதிபர் திணைக்களத்திலிருந்து விடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையவே மேற்படி மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
மன்னார் நீதிமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை குறித்த மீனவர்களை முன்னிலைப் படுத்தியபோதே மன்னார் நீதிவான் ஆனந்தி கனக ரட்ணம் அவர்களை விடுதலை செய்தார். குறித்த மீனவர்கள் அனைவரும் தற்போது இந்திய உயர்ஸ் தானிகராலய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.
கடந்த மாதம் 28ஆம் திகதி 3 படகுகளுடன் 17 இந்திய மீனவர்களும், கடந்த 5ஆம் திகதி 4 படகுகளுடன் 20 இந்திய மீனவர்களும் கைதுசெய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். (ற)

# தேவைகளுடன் இயங்கும் ஏறாவூர் வைத்தியசாலை

## அதன் அபிவிருத்திக் குழுத் தலைவர் தெரிவிப்பு

களுவாஞ்சிக்குடி, ஜூலை 12
ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் பல்வேறு அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன என்று தெரிவித்துள்ள அதன் அபிவிருத்திக் குழுத் தலைவர் யூ.எல். முஹைதீன்பாபா, அதனால், நோயாளர்களும் கடமையாற்றும் ஊழியர் களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.
பிளாஸ்டிக் பாய்கள், படுக்கை விரிப்புக்கள், திருகு மின்விளக்குகள், மின்விளக்குகள் போன்ற பல தேவைகள் காணப்படுகின்றன என்றும், பொதுத் தொண்டுக்காகப் பணியாற்றும் நிறுவனங்கள் அவற்றைப் பூர்த்தி செய்ய ஆவன செய்ய வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இது தொடர்பான வேண்டுகோளை தாம் கிழக்கு மாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சர் நஸீர் அஹமட்டிடமும், ஏறாவூர் நகரபிதா அலிஸாஹிர் மௌலானாவிடமும் விடுத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# மீன் பிடித்த மீனவர் மயங்கி வீழ்ந்து சாவு

மட்டக்களப்பு, ஜூலை 12
வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இலங்கைத் துறை மதுரங்குழி ஆற்றில் கட்டுவலை போட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த வர்ணகுலசிங்கம் செல்வகுமார் (வயது -48) என்பவரே உயிரிழந்தவராவார்.
காலை வேளை அவரது மனைவி மற்றும் சக.மீனவர்களுடன் சேர்ந்து இலங்கைத்துறை மதுரங்குழி ஆற்றில் கட்டுவலை போட்டு மீன்பிடித்துக் கொண்டிருந்துள்ளார்.
அப்பொழுது அவர் ஏரிக்குள் நின்றவாறே மயங்கி விழுந்ததை கூடவே நின்று மீன்பிடியில் ஈடுபட்ட அவரது மனைவியும் சக மீனவர்களும் கண்டு அவரைக் கரை சேர்த்துள்ளனர்.
கரையில் இருந்து 500 மீற்றர் தூரத்திலுள்ள அவரது வீட்டுக்கு அவரைத் தூக்கிக் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார். (ற)

இதோ! ஒரு அரிய சந்தர்ப்பம்! கட்டார் நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு
கட்டார் நாட்டில் பதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையத்தில் உதவியாளர்களுக்கான கீழ்க்காணும் வேலைவாய்ப்புகள் உடனடியாகக் காத்திருக்கின்றன.

- HVAC Technician Helper - 900 + OT + Food
- Telecom Technician Helper - 900 + OT + Food
- Painter Helper - 900 + OT + Food
- Electrician Helper - 900 + OT + Food
- Plumper Helper - 900 + OT + Food
- Desal Mecnician - 1600 + OT

கைவசம் விஸா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம், தங்குமிடம், போக்குவரத்து, வைத்தியவசதி, உணவு போன்றவை இலவசம்.
Lanka Voice (Vavuniya, Mannar - 076 - 6697789) Jaffna - 077 - 9527575
கெப்பிடல் ரெக்ரூட்மன்ட் இன்டர்நஷனல் (பி) லிமிட்டெட்
இல.130/3/1.3 மாடி கிறேன்பாஸ் வீதி, கொழும்பு - 14
LLNo : 2248, AL/2248/ADVT/14/11/15

# பலநோக்கு மண்டபத்துக்கு அடிக்கல் நடப்பட்டது

மட்டக்களப்பு, ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சித்தாண்டி 3 கிராம சேவையாளர் பிரிவில் பல நோக்கு மண்டபத்திற்கான அடிக்கல் நேற்றுமுன்தினம் நடப்பட்டது.
கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவனேசதுரை சந்திர காந்தன் அதற்கான அடிக்கல்லை நட்டார்.

கருத்தரங்கு
BOC வங்கி பரீட்சைக்கான
Verbal resoning and case study
இற்கான சனி (இன்று), ஞாயிறு (நாளை) தினங்களில் முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகும்.
தொ.பே.: 0754164564
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)

கணக்கீட்டு கற்கைகள் குழாம்
கணக்காளர், கணக்காய்வாளர் மற்றும் நிர்வாக சேவை
பரீட்சைகளுக்கான இரண்டாவது தொகுதி வகுப்புக்கள் துரித மீட்டல்
(கடந்த கால வினாக்கள்)
ஆரம்பம் -26.07.2014 சனிக்கிழமை
தொடர்புகளுக்கு: 0765408095
வளவாளர்கள்.
மக்கள் வங்கி அருகில்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

மாபெரும் மலிவு விற்பனை
இந்தியன் ரவுசர் லெந்த் 450/=
இந்தியன் துவாய் 180/=
இந்தியன் சாரம் 240/=
இந்தியன் சாறி வகைகள் 700/=, 900/=
சிறுமிகளுக்கான டெனிம் ஸ்கேட் 425/=
சிறுவர்களுக்கான காற்சட்டை 520/=
சிறுவர்களுக்கான ரீசேட் 320/=
இடம்: இல. 350, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
(T.C.T. சுப்பர் மார்க்கெட்டுக்கு அருகில்)
காலம் - 12.07.2014, 13.07.2014
குறைந்தளவு கையிருப்பு மட்டுமே உள்ளது.

PERSONAL CLASSES
CHEMISTRY
2015/2016 BATCHES
தொடர்பு: 0773198263

# மரண அறிவித்தல்

## செல்வி சிவசாந்திதேவி செல்லத்துரை



புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசாந்திதேவி செல்லத்துரை நேற்று (11.07.2014) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் தெய்வநாயகி (நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), சச்சிதானந்தம் (சதா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சாந்தகுமாரன், துகிர்தா (ஆசிரியை, யா/நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை) ஆகியோரின் மைத்துனியும் சாரங்கன் தேனுஜா ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2014) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கிந்துசிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன்கோயிலடி,
புத்தூர்மேற்கு, புத்தூர்

தகவல்:
தெய்வநாயகி - 0772009754
சச்சிதானந்தம் (சதா) - 0771879725
துகிர்தா - 0778870479

INTERNATIONAL DENTAL CARE
International Dental Care Hospital (Pvt) Ltd
வேலை வாய்ப்பு
யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களில் இயங்கிவரும் பிரபல வைத்தியசாலையின் வவுனியா கிளைக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
01. நிர்வாக உத்தியோகத்தர் 02. நிர்வாக உதவியாளர்
தகைமை:
கல்வி: G.C.E A/L 3 பாடம் சித்தி
மொழி: ஆங்கிலம், சிங்களம் தெரிந்திருத்தல் வேண்டும்
அனுபவம்: 2 வருட நிர்வாக முன்அனுபவம்
அறிவு: கணினி அறிவு விரும்பத்தக்கது
வயது: 18-30 வயதுக்குட்பட்டபெண்கள்
சம்பளம்: குறைந்தது ரூபா 15000/= அனுபவத்திற்கு ஏற்ப வழங்கப்படும்.
தங்குமிட வசதி உண்டு.
முடிவுதிகதி: இன்றிலிருந்து ஒரு வாரத்துக்குள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு நிர்வாகப் பணிப்பாளர்
T.P:077 758 8729 internationaldentalcare@gmail.

வேலை வாய்ப்பு
சவூதி இராஜ்ஜியத்தில் நகரசபை சாரதிகளாகப் பணிபுரிய Light Vehicle Licence உள்ளவர்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் பயணமாகலாம். சம்பளம் 800 + 200 + OT
கட்டார் நாட்டில் உள்ள முன்னணி கம்பனி ஒன்றில் உதவியாளராக ( Graden Helper பூந்தோட்டத்தில்) பணிபுரிய 10 பேர் உடன் தேவை. வயது 40 - 55 வரை சம்பளம் 900+ OT
தொடர்புகளுக்கு:
Lanka voice vavuniya
Mannar 076 6697789
Jaffna - 077 9527575

0777302882
A1
B1
B2
Knowledge Universe Sri Lanka
Spoken
IELTS
http://edu.kugroup.info
London English College
Call Now - 021-3208342
No 626,1/1, K.K.S Rd, Jaffna

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## வள்ளிப்பிள்ளை பரஞ்சோதி

தோற்றம்
21.04.1947

மறைவு
03.07.2012

கருவினில் சுமந்தவளே! கஷ்டங்கள் நாமறியாமல்
பெருமனம் கொண்டிங்கு பெருமையுற வளர்த்தவளே!
உருவினில் கோயிலாய் உள்ளத்தில் தெய்வமான
திருமுகம் காணாது தினமிங்கு தவிக்கின்றோம்.

இக்கிராணை,
கந்தரோடை, சுன்னாகம்.
(49822)(45.6.3)

குடும்பத்தினர்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.